REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 டிசம்பர் 10 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 293 | Friday 10, December, 2021 | 24 பக்கங்கள் | 30/-

இலங்கையில் 'ஒமிக்ரோன்' வேகமாக பரவ வாய்ப்பில்லை

Dr. சந்திம ஜீவந்தர நம்பிக்கை

இலங்கை, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளில் ஒமிக்ரோன் கொவிட் வகை வைரஸ் வேகமாகப் பரவாதென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறை பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

பிரியந்த குமார படுகொலை சம்பவம்

பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

பாகிஸ்தான் பிரதமருக்கு கடிதம் அனுப்பிவைப்பு

பாகிஸ்தானின் சியல்கோட் நகரில் இலங்கைப்பிரஜை பிரியந்த குமார தியவதன மிகக் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் எவ்வித பக்கச்சார்புமற்ற முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தி பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், 06

நாட்டை முழுதாக முடக்காது கொவிட்டை கட்டுப்படுத்தல்

சுகாதார அமைச்சு நடவடிக்கை

நாட்டை முழுமையாக முடக்காமல் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல் நேற்று நடைபெற்றதாக சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். 06

வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய விவகாரம்

நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும் வரை இந்துக்கள் பொறுமை காக்கவும்

சார்ள்ஸ் எம்பியின் கேள்விக்கு அமைச்சர் விதுர பதில்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

வடக்கில் நெடுங்கேணி, வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை இந்துக்கள் பொறுமை காக்க வேண்டுமென தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் 06

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுப்பிலுள்ள

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் சாதக நிலை

விரைவில் எதிர்பார்த்த மாற்றம் நடக்கும்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர்கள் தொடர்பில் முக்கியமான கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இதில் சாதகமான மாற்றங்கள் விரைவில் நடக்குமென தான் எதிர்பார்ப்பதாக நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர்களது வழக்குகளை நாளாந்தம் விசாரிப்பதற்கு பிரதம நீதியரசர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் சார்ள்ஸ் எம். பி எழுப்பிய கேள்விக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி பதில்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகியுள்ளவர்களின் விடுதலை தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதி அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு, அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு, மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி கைதிகளின் விடுதலை தொடர்பில் வாக்குறுதி வழங்கப்பட்டாலும் அவை நிறைவேற்றப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

பலர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலம் 06

வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒப் த பீல்ட் வசந்த கரன்னாகொட நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட போது....

மறைந்த இந்திய முப்படை தளபதி

வெலிங்டனில் பூதவுடல் அஞ்சலிக்காக வைப்பு

இந்தியாவின் வெலிங்டன் இராணுவ மைதானத்தில் முக்கிய பிரமுகர்களின் அஞ்சலிக்காக மறைந்த முப்படைத் தலைமை தளபதி விபின் ராவத் உள்ளிட்டோரின் உடல்கள் 06

உடப்பு தமிழருக்காக விரைவில் பிரதேச சபை

தட்சணாமூர்த்தியிடம் டக்ளஸ் உறுதி

புத்தளம், உடப்பு பிரதேசத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களை இணைத்து புதிய பிரதேச சபை ஒன்றை உருவாக்கித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் கட்டு பிதேச சபைத் தலைவர் தட்சணாமூர்த்தி தலைமையில் உடப்பு 06

பிரியந்த படுகொலை விவகாரம்

பாகிஸ்தானில் இன்று விசேட கண்டன தினம்

பிரியந்த குமார தியவதனவை நினைவுகூரும் வகையிலும், இந்த கொடூர சம்பவத்தை கண்டித்தும் பாகிஸ்தானில் விசேட கண்டன தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை 06

பாடசாலைகளில் கொரோனா கொத்தணி உருவாகும் நிலையா?

முற்றாக மறுதலிக்கிறார் Dr. ஹேமந்த

பாடசாலைகளில் கொரோனா கொத்தணிகள் எதுவும் உருவாகவில்லையென சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள சுமார் நான்கு மில்லியன் பாடசாலை மாணவர்களில் சுமார் 400 முதல் 500 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். வீட்டுச் சூழலிலிருந்து ஏராளமான மக்கள் தொற்றுக்கு 06

சபரிமலை யாத்திரீகர்களுக்கு பயணச் சீட்டில் சலுகை

ஜீவன் – சானக்க பேச்சில் இணக்கம்

ஸ்ரீ சபரிமலை யாத்திரைக்கு எதிர்வரும் வாரங்களில் செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு, அவர்களது பயணச்சீட்டில் சலுகைகளை பெற்றுத்தரும் நோக்கில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி சானக்க டினுஷானுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சானக்க, ஸ்ரீ சபரிமலைக்கு செல்லும் பக்த சுவாமிகளுக்கு, பயணச் 06

2022 வரவு செலவுத் திட்டம்: இறுதி வாக்கெடுப்பு இன்று

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு இன்றைய தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தின் இறுதி 06

ஹட்டன் சுழற்சி நிருபர்

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சென். கிளையார் பகுதியில் நேற்று (09) 100 அடி பள்ளத்தில் சொகுசு காரொன்று விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. 06

தண்டப்பணம் அறவிடும் முறைகளில் மாற்றம்

"SPOT PAID" எனும் முறை அறிமுகம்

வாகனங்கள் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் தண்டப்பணம் அறவிடும் செயற்பாடுகளை தொழில்நுட்பமயப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அநேகமான சந்தர்ப்பங்களில் தண்டப்பணம் செலுத்தி தனது வாகன அனுமதிப்பத்திரத்தை 06

ஆட்சியை கைப்பற்றுவதோ

அரசை கவிழ்ப்பதோ TNAயின் நோக்கமல்ல

பிரச்சினைகளுக்கு தீர்வே அவசியம்

அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டுமென்றோ, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்றோ ஒருபோதும் நினைக்கவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் 06

ரணிலின் ரீட் மனு மீதான விசாரணை ஜன. 28இல்

மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவு 03

ஜமா அத்தே முன்னாள் தலைவரது விசாரணை அறிக்கை சட்ட மாஅதிபரிடம்

மனு மீள் பரிசீலனை டிசம்பர் 17இல் 03

நவரசம் கவிதை நூலை எழுதி கைதான

கவிஞர் அஹ்னாபின் பிணைக்கு எதிர்ப்பில்லை

நீதிமன்றுக்கு சட்ட மாஅதிபர் அறிவிப்பு

நவரசம் என்ற கவிதைத் தொகுப்பு நூலை எழுதியமைக்காக கைது செய்யப்பட்டுள்ள அஹ்னாப் ஜஸீம் எனும் இளம் கவிஞர், கொழும்பு விளக்கமறியல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையடுத்து, அவருக்கு பிணையளிக்க எதிர்ப்புக்களை முன்வைக்கப் போவதில்லையென உயர் நீதிமன்றத்துக்கு சட்ட மாஅதிபர் 06

யாழ். மருத்துவபீட மாணவன் மரணம்

முன்கூட்டியே தகவல் வெளியானது எவ்வாறு?

பொலிஸாரிடம் நீதிமன்றம் அறிக்கை கோரல்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனின் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் அறிக்கை சமர்பிக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.பி.போல், கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாதா கோவில் வீதி துன்னாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவனான 06

பாகிஸ்தான் படுகொலை சம்பவம் குறித்த

சாணக்கியனின் கருத்துக்கு விமல் வீரவன்ச கண்டனம்

சபை நிருபர்கள்

இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களுடன் பாகிஸ்தானில் நடந்த சம்பவத்தை ஒப்பிட்டு, இரண்டையும் சமப்படுத்த முற்பட வேண்டாம் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சாணக்கியன் எம்.பி. வெளியிட்ட கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"சில அரசியல் முரண்பாடுகளால் ஏற்பட்ட சில சம்பவங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன. அதாவது விடுதலைப் 06

விக்கல் வீராச்சாமி

சஜித் ஐயாவுக்கு ஏன் வாக்களிச்சோம் எண்டு தமிழினம் கொஞ்சம் கொஞ்சமா உணர ஆரம்பிச்சிருக்கு போல தெரியுது...

எந்த நாளும் சனத்த பேக்காட்ட முடியா– துதானே, நல்லவேளை சார்ள்ஸ் எம். பி ஆரம்பத்திலேயே கண்டுபிடிச்சு விட்டார், அவரை பாராட்த்தான் வேணும்...!!!

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 டிசம்பர் 10 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	04.50
லுஹர்	12.05
அஸர்	03.26
மஃரிப்	05.56
இஷா	07.11

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் கார்த்திகை 24

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

இராசி பலன்கள்

மேஷம்	செலவு
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	வெற்றி
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

கொழும்பு பல்கலையில் ஊடக டிப்ளோமா கற்கைகள்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இதழியல் பிரிவினால் நடாத்தப்படும் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் டிப்ளோமா பாடநெறிக்கான 2022 ஆம் கல்வியாண்டிற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் டிப்ளோமா பாடநெறியானது தேசிய தொழில் சார் தகைமையின் மட்டம் 05 க்கு (NVQ 05) சமனானதாகும்.

விண்ணப்பங்களானவை ஊடகங்களில் பணியாற்றும் இயைபான அனுபவமுள்ள விண்ணப்பதாரரிடமிருந்து கோரப்படுகின்றன. சுயாதீன ஊடகத்துறை சார்ந்தவர்கள், ஆக்கப்பூர்வமான எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனத் தத்தம் துறைகளில் தற்போது, எதிர்காலத்தில் ஊடகத்துறையில் இணைய விரும்புபவர்களிடமிருந்தான மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இந்த திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எனவே, அவர்களும் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இந் நிகழ்ச்சிதிட்டமானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் நடத்தப்படும். விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகளுக்கான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் வெளியீட்டு பிரிவு மற்றும் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 2021 டிசம்பர் 31 ஆகும்.

வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர்களுக்கு ஓய்வூதியம்

மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்கள் பயன்பெறும் வகையில் காப்புறுதித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் ஒன்று எதிர்வரும் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் மனிதாபிமான மற்ற ரீதியில் படுகொலை செய்யப்பட்ட இலங்கை பொறியியலாளரின் படுகொலை தொடர்பில் பாகிஸ்தான் அரசாங்கமும் அந்நாட்டுப் பிரதமரும் மேற்கொண்டுவரும் மனிதாபிமான செயற்பாடுகளை அரசாங்கமும் தொழிலமைச்சும் வரவேற்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் சாந்த பண்டாரவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சாந்த பண்டார எம்பி தமது கேள்வி வேளையின் போது, பாகிஸ்தானில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ள

06

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை

சித்தி பெற்ற 9,000 பிள்ளைகளுக்கு ETF சபையினால் புலமைப்பரிசில்

பிரதமர் தலைமையில் வழங்கி வைப்பு

2020 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை உறுப்பினர்களின் பிள்ளைகள் 9,000 பேருக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் முதலாம் கட்ட காசோலை வழங்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று (09) அலரி மாளிகையில் நடைபெற்றது. முதலாவது கட்டத்தின் கீழ் 6,000 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக மக்கள் வங்கியில் சிசு உதான கணக்கினை திறப்பதற்கான 89,820,000 ரூபாய் பெறுமதியான காசோலை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் தலைவர்

06

அந்நிய செலாவணியை ஈட்டும் முக்கிய துறையாக ஆயுர்வேதம், சுதேச மருத்துவம்

அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஆயுர்வேத ஆணையாளர் தெரிவிப்பு

தற்காலத்தில் சுதேச மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைமைக்கு அதிகபட்ச கேள்வி நிலவுவதால், அந்நியச் செலாவணியை ஈட்டும் பிரதான துறையாக அவை அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த ஆயுர்வேத ஆணையாளர் கலாநிதி எம்.டீ.ஜே.அபேகுணவர்தன, அதற்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

"சர்வதேசத்தை நோக்கி சுதேச மருத்துவம்" என்ற தொனிப்பொருளில், ஜனாதிபதி ஊடக மையத்தினால் நேற்று (09) நடத்தப்பட்ட வீடியோ தொழில்நுட்பத்தினூடான ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதேச மருத்துவ அபிவிருத்தி, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் பொதுச் சுகாதார இராஜாங்க அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகரவும் பங்கேற்றிருந்த இந்த ஊடகச் சந்திப்பை, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க வழிநடத்தினார். இதன்போது தொடர்ந்துரைத்த ஆணையாளர், கொவிட்19 தொற்றுப் பரவல் காலப்பகுதியில், தேசிய மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைமை மற்றும் சுதேச மருந்துகளுக்குப் பாரியளவிலான கேள்வியும் வணிக ரீதியிலான மதிப்பும் கிடைத்ததென்றார். அதனால், புதிய திட்டமிடல்களின் கீழ் இத்துறையின் அபிவிருத்திக்குச் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென்றும் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

06

தேர்தலை எதிர்கொள்ள நாங்கள் அஞ்சவில்லை

– அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன

தற்போதைய அரசாங்கம் தேர்தலுக்கு அஞ்சவில்லையென அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

எஸ்.எம்.மரிக்கார் எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் ,

தமது தரப்பினர் தேர்தலை நடத்துவதை ஒருபோதும் தாமதப்படுத்தவில்லை, அல்லது பொது மக்களுக்கு முகம் கொடுப்பதில் அச்சம் கொள்வதில்லை என தெரிவித்தார்.

அரசாங்கம் தனது வேலைத் திட்டத்தில் நம்பிக்கையுடனும் திருப்தியுடனும் இருந்தால், தாமதமின்றி தேர்தலை நடத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் இதன் போது தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி முடிவடைவதாகவும், தேர்தலை உடனடியாக நடத்துமாறு அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எந்த சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தை பயன்படுத்தி

வழக்குகளை வாபஸ் பெற அரசு முற்பட்டது கிடையாது

அமைச்சர் ஜோன்ஸ்டன் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

அரசாங்கம் எந்த சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தைப் பாவித்து எந்த வழக்கையும் வாபஸ் பெறவில்லை என்பதுடன் ஜனாதிபதியின் எதிர்பார்ப்பும் அதுவல்ல என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எமது அரசாங்கம் ஒருபோதும் அதிகாரத்தைப் பாவித்து வழக்குகளை வாபஸ் பெறவோ அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளில் தலையீடு செய்யவோ முயற்சிக்கவில்லை. எனினும் நல்லாட்சி அரசாங்கம் சட்டமா அதிபர் திணைக்களத்தை எவ்வாறு உபயோகித்தது என்பதை மறக்க முடியாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி எம்பி எரான் விக்கிரமசிங்க, நீதியமைச்சின் வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போது அரசாங்கம் நீதித் துறையில் தலையிடுவதாக குற்றம் சுமத்தினார். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்: நல்லாட்சி அரசாங்க காலத்தில் எனக்கு எதிராக தொடுக்கப்பட்ட 11 வழக்குகள் உள்ளன. இன்றும் ஒரு வழக்கு விசாரணைக்குச் சென்று அதற்கான தினம் மாற்றப்பட்டுள்ளதையடுத்து சபைக்கு வந்துள்ளேன்.

06

பொது இடங்களில் எச்சில் துப்புவோருக்கு எதிராக சட்டம் அமுல்

பொது இடங்களிலும், நெடுஞ்சாலைகளிலும் வெற்றிலை எச்சிலை துப்புவோர் மீது இன்று முதல் கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பு மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் விசேட பணிகள் மற்றும் சுற்றுச்சூழல் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் ராஜபக்ஷ பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். கொவிட்19 வைரஸ் பரவல் மற்றும் வீதிகளில் எச்சில் துப்புவதால் ஏற்படும் கடுமையான மாசடைதல் காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். வெற்றிலை எச்சிலை துப்புவோரைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமென சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணிலின் ரீட் மனு மீதான விசாரணை ஜன. 28இல்

மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவு

முன்னாள் பிரதமரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரீட் மனுவை எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, தேவிகா அபேரத்ன மற்றும் டி. எம். சமரகோன் ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், இம் மனுவை ஜனவரி 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது.

ஜமா அத்தே இஸ்லாம் முன்னாள் தலைவரது

விசாரணை அறிக்கை சட்ட மா அதிபரிடம்

மனு மீள் பரிசீலனை டிச.17இல்

இலங்கையில் வஹாப் வாதம், சலபி கொள்கை மற்றும் ஜிஹாத் சிந்தனையை விதைத்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இலங்கை ஜமா அதே இஸ்லாம் அமைப்பின் முன்னாள் தலைவரான உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் என பரவலாக அறியப்படும் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பரின் அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் 17 ஆம் திகதி மீள பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. கைது மற்றும் தடுத்து வைப்புக்கு எதிராக சட்டத்தரணி சுமையா ஜிப்ரி ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு மீதான பரிசீலனைகள், நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையிலான நீதியரசர் யசந்த கோதாகொட மற்றும் நீதியரசர் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் (08) பரிசீலனைக்கு வந்தது. இதன்போதே சட்டமாஅதிபர் தரப்பின் நிலைப்பாட்டை முன்வைப்பதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டு இவ்வாறு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதற்கு முன்னர் இந்த அடிப்படை

06

நாட்டின் கடன் பிரச்சினையை தீர்ப்பதற்கு

வெளிநாட்டு நிறுவனங்களிடம் அடிபணிய தேவையில்லை

இலங்கை அடிபணியாது என்கிறார் அஜித் கப்ரால்

நாட்டின் கடன் பிரச்சினையைத் தீர்க்க, வெளிநாட்டு நிறுவனங்களிடம் பணிந்து செல்ல வேண்டிய தேவை இலங்கைக்கு இல்லையென மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் 07 ஆம் திகதி நடத்தப்பட்ட பொருளாதார செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கடனைத் திருப்பிச் செலுத்த எந்தவொரு விடயத்திலும் தங்கியிருக்க வேண்டிய தேவையில்லையெனவும் அவர் தெரிவித்தார். தனியார் நிறுவனங்களின் கடன் சுமை குறித்து மத்திய வங்கி ஆளுநர் தெரிவிக்கையில், பேச்சு வார்த்தை நடத்தி, வட்டி வீதங்களை குறைக்க, வெளிநாட்டுக் கடன் மற்றும் உள்நாட்டு கடன் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அரசாங்கத்தின் கடன் சுமைகளை குறைப்பதில் கவனம் செலுத்தியுள்ளோம். இலங்கை கடன்களை மட்டும் பெற்றுக் கொள்வதிலிருந்து விலகி கடன் இல்லாத வரவுகளை உருவாக்கும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

ஆபத்தில் சிக்கியிருந்த இலங்கை மீனவர்கள் இந்தியாவால் மீட்பு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும், அதேபோல இருநாடுகளினதும் மக்களுக்குமிடையே உள்ள நல்லெண்ணத்தையும் நட்புறவையும் பிரதிபலிக்கும் வகையிலான மனிதாபிமான சமிக்கையாக இந்திய மீன்பிடிக் கப்பலொன்று, ஆபத்தில் சிக்கியிருந்த இலங்கை மீனவர்களையும் அவர்களது படகையும் மீட்டுள்ளது.

IMULA0039TLE பதிவு எண்ணைக் கொண்ட Lulu01 என்ற இலங்கை மீன்பிடிப்படகு கடந்த 02ஆம் திகதி ஆழ்கடலில் பாரிய ஆபத்தை எதிர்கொண்டிருந்தது. சென்னைக்கு வடக்கே 24 கடல் மைல் தொலைவிலிருந்த இந்திய மீன்பிடிப் படகொன்று இதனைக்கண்டதுடன் இலங்கைப் படகினதும் அதிலிருந்தவர்களினதும்

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	140.01	145.94
கனடியன் டொலர்	155.95	161.79
யூரோ	223.47	232.04
ஜப்பான் யென்	1.7385	1.8041
சிங்கப்பூர் டொலர்	145.03	149.70
ஸ்டேலிங் பவுன்ஸ்	261.72	270.05
சுவிஸ் பிராங்க்	214.26	222.22
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	534.68	கட்டார் ரியால்	55.35
குவைத் டினார்	665.72	சவூதி ரியால்	53.73
ஓமான் ரியால்	523.61	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.88

Ministry of Energy

வலுசக்தி அமைச்சு
மற்றும்
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

Public Utilities Commission of Sri Lanka

அனைத்து வாகன உரிமையாளருக்குமான அறிவித்தல்

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) ஆகிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து வலுசக்தி அமைச்சானது, பொதுமக்களுக்கு குறிப்பாக வாகன உரிமையாளர்களுக்கு பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றது.

உராய்வு நீக்கி எண்ணெய் உங்களது வாகனங்களில் எதற்காக பயன்படுகின்றது?

என்ஜின்கள் இலகுவில் பழுதடையாமலும் மற்றும் இதன் செயற்பாடுகளால் எழும் வெப்பத்தை தணிப்பதற்கும், துருப்பிடித்தலை குறைத்து பழுதடையாமல் பாதுகாப்பதற்கும் உராய்வு நீக்கி எண்ணெய் பிரதானமாக பயன்படுத்தப்படுகின்றது. வாகன உற்பத்தியாளரால் சிபார்சு செய்யப்பட்ட மிகப் பொருத்தமான உராய்வு நீக்கி எண்ணெயை பயன்படுத்தாதவிடத்து வாகனத்தின் என்ஜின்கள் பழுதுபார்க்க முடியாதளவிற்கு சேதத்தை உண்டாக்கும்.

உராய்வு நீக்கி எண்ணெயை உபயோகப்படுத்தும் போது அவைகளின் தரங்கள் குறைவடைவடைவதனால், உற்பத்தியாளரால் சிபார்சு செய்யப்பட்டதன் அடிப்படையில் அவற்றை கிரமான முறையில் மாற்றுதல் வேண்டும். பயன்படுத்தப்பட்ட உராய்வு நீக்கி எண்ணெயை சுற்றாடலுக்கு தீங்கிழைக்காத வகையில் அகற்ற வேண்டும். இதனை மீள் சுழற்சிக்குட்படுத்தல் ஆகாது.

தரம் குறைந்த/உயர் தர உராய்வு நீக்கி எண்ணெய்களை உபயோகப்படுத்துவதால் உங்களது வாகனத்திற்கு என்ன நடக்கும்?

சிபார்சு செய்யப்பட்ட தரத்தினை விட குறைந்தளவான தரத்தினை உடைய உராய்வு நீக்கி எண்ணெயை ஒருபோதும் பயன்படுத்தல் ஆகாது. அவ்வாறு பயன்படுத்துமிடத்து என்ஜின்களுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

சிபார்சு செய்யப்பட்ட தரத்தினை விட அதிக தரத்தினை உடைய உராய்வு நீக்கி எண்ணெயை உபயோகப்படுத்தும் போது என்ஜின்களுக்கு எந்த வகையான பாதிப்புகளும் ஏற்படாது. சந்தையில் கிடைக்கக்கூடிய தரம் குறைந்த உராய்வு நீக்கி எண்ணெயை உபயோகப்படுத்தியதன் பின்னரே என்ஜின்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தெரியவரும். உடனடியாக பாதிப்புக்கள் தெரியவருவதில்லை. எனவே, மிகப் பொருத்தமான உராய்வு நீக்கி எண்ணெயை உபயோகித்தலே அதிக பலன்களை தருவனவாக இருக்கும்.

பெற்றோல் என்ஜின் ஒயில், டீசல் என்ஜின் ஒயில், நான்கு ஸ்ரோக் உந்துருளி என்ஜின் ஒயில் (Four stroke motorcycle engine oils), இரு ஸ்ரோக் என்ஜின் ஒயில் (Two stroke motorcycle engine oils), தன்னியக்க பரிமாற்றல் திரவம் (automatic transmission fluids) மற்றும் கியர் ஒயில் போன்ற பல்வேறு தரங்களில் உராய்வு நீக்கி எண்ணெய்கள் காணப்படுகின்றன. உராய்வு நீக்கி எண்ணெயின் தரங்கள் அதன் லேபிலில் (label) அல்லது அதன் உற்பத்தி கைநூலில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட வியாபாரக் குறியீடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நபர்கள் யாவை?

உராய்வு நீக்கி எண்ணெய்ச் சந்தையில் தற்பொழுது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரக் நாமங்களின் பெயர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நபர்கள் யாவை

வியாபாரக் குறியீடு (கள்)	நிறுவனம்	முகவர் நிறுவனம்
POWEROIL	Apar Industries Limited	Ideal Choice (Pvt) Ltd.
MAK	Bharat Petroleum Corporation Limited	TVS லங்கா (பிவிடி) லிமிடெட் TVS Lanka (Pvt) Limited
tp Castrol	BP Middle East LLC	Associated Motorways Limited
hyraxol	Ceylon Petroleum Corporation	Sdn Bhd Hyrax Oil Sdn Bhd (blending and producing only)
Caltex, Chevron, Texaco, Ganko	Chevron Ceylon Limited	Chevron Lubricants Lanka PLC
ExxonMobil Esso Mobil	ExxonMobil Asia Pacific Pte. Limited	McLarens Lubricants Limited
CAT	ExxonMobil Asia Pacific Pte. Limited	United Tractor & Equipment (pvt) Ltd
Kixx	GS Caltex Corporation	Samaco International (Pvt) Ltd.
Gulf	Gulf Oil Middle East Limited	
SERVO	Indian Oil Corporation Limited	Lanka IOC PLC
Laugfs	Laugfs Holdings Limited	Laugfs Lubricants Limited
SINOPEC	Lubricant Company Sinopec Corporation	Interocean Lubricants Limited
MOTUL	Motul	Spectrum Trading Company (Private) Limited
PETRONAS	Petronas Lubricants (India) Private Limited	Global Capital Holdings (Pvt) Limited
Prato	Prato Oil Holding EAD	Desha Shakthi (Private) Limited
Shell	Shell Markets (Middle East) Limited	N. M. Distributors (Pvt) Limited
elf	Total Oil India Private Limited	Novatoka Petroleum (Pvt) Limited
TOYOTA	Toyota Tsusho Corporation	Toyota Lanka (Pvt) Limited
Valvoline	Valvoline LLC	United Motors Lanka Limited

குறிப்பு: இங்கு பட்டியல் காலத்திற்கு காலம் இற்றைப்படுத்தப்பட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தளங்களில் வெளியிடப்படும்.

உங்களது வாகனத்திற்கு பொருத்தமான உராய்வு நீக்கி எண்ணெய் எது?

வாகன உற்பத்தியாளரால் சிபார்சு செய்யப்பட்ட தரத்தினை உடைய உராய்வு நீக்கி எண்ணெயையே எப்போதும் பயன்படுத்துதல் வேண்டும். இவை பொதுவாக உரிமையாளரின் வழிகாட்டி புத்தகத்தில் (கைநூல்) அல்லது உராய்வு நீக்கி எண்ணெய் வடிக்கட்டல் மூடியில் அல்லது உராய்வு நீக்கி எண்ணெய் அளவினை சரிபார்க்கும் கம்பியில் அல்லது உராய்வு நீக்கி எண்ணெய் பெயர் பலகையில் இவை பொதுவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

இவை ஒன்றிலும் இல்லாதவிடத்து வாகன உற்பத்தியாளரின் முகவரிடம் சென்று இவை தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும். இவை தொடர்பான உதவிகளையோ அல்லது விபரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைகள் ஏற்படின் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை (PUCSL) தொடர்பு கொள்ளவும்.

உராய்வு நீக்கி எண்ணெய் சந்தை எவ்வாறு ஒழுங்குறுத்துகை செய்யப்படுகின்றன?

உராய்வு நீக்கி எண்ணெய் சந்தையானது 1961 ஆம் அண்டு 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் உள்ள பிரிவின் பிரகாரம் இவை ஒழுங்குறுத்துகை செய்யப்பட்டு நிருவகிக்கப்படுகின்றது.

உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கலவை செய்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், வழங்கல் மற்றும் விநியோகம் செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து மிகப் பொருத்தமான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

தரம் குறைந்த பொருட்கள் சந்தையில் உள்நுழைவதை தடுக்கும் வகையில், போதுமான நிதியியல் திறன் மற்றும் தொழிநுட்ப அறிவு கொண்ட தகுதிவாய்ந்த நபர்களுக்கே இவற்றுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே, உராய்வு நீக்கி எண்ணெய் உற்பத்தியாளர்களால் பிரத்தியேகமாக உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் அனுமதி பெற்ற தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களால் சந்தைப்படுத்தப்படும் உராய்வு நீக்கி எண்ணெயையே உபயோகித்தல் வேண்டும்.

உராய்வு நீக்கி எண்ணெய்க்கான தர நிர்ணயங்கள் என்ன?

சர்வதேச சந்தையில், American Petroleum Institute (API) and Japanese Automobile Standards Organization (JASO), European Automobile Manufacturers Association(ACEA) மற்றும் தனிநபர் அசல் உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் (OEM) போன்றோரால் வழங்கப்படும் தரச் சான்றிதழுக்கமைய உராய்வு நீக்கி எண்ணெய் தரங்கள் நிருவகிக்கப்படுகின்றன.

உராய்வு நீக்கி எண்ணெயின் ஆகக் குறைந்த இலங்கை தரங்கள் (SLS), API, JASO, ACEA மற்றும் American Society for Testing Materials (ASTM) standards ஆகியவற்றின் அடிப்படையில் இருத்தல் வேண்டுமென இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது செல்லுபடியாகும் உராய்வு நீக்கி எண்ணெயின் ஆகக் குறைந்த தரங்கள் பின்வருமாறு.

உற்பத்திகள		இலங்கைத் தரம்	2021.12.31 ஆம் திகதி வரை API/JASOக்கு சமனானது	2022.01.01 ஆம் திகதியில் இருந்து API/JASOக்கு சமனானது
பெற்றோல் என்ஜின் ஒயில் Gasoline Engine Oil		SLS 1374	API - SJ	API - SL
டீசல் என்ஜின் ஒயில் Diesel Engine Oil		SLS 1373	API - CF	API - CH-4
இரு ஸ்ரோக் என்ஜின் ஒயில் Two Stroke Engine Oil		SLS 1446	JASO FC	JASO - FC (Use of a diluent, if any, is limited to High Flash Point Low Aromatic (HFLA) solvent)
நான்கு ஸ்ரோக் உந்துருளி என்ஜின் ஒயில் Four Stroke Motorcycle Engine Oil	உந்துருளி என்ஜின் ஒயில் Motorcycle Engine Oil	SLS 1409	JASO MA API - SG	JASO MA2 API - SL
	ஸ்கூட்டர் என்ஜின் ஒயில் Scooter Oil	SLS 1409	JASO MA API - SG	JASO MB API - SL
கியர் ஒயில்Gear Oil		SLS 1396	GL - 4	GL - 4

உராய்வு நீக்கி எண்ணெய் தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் அரச நிறுவனங்களை அல்லது அவர்களது இணையத்தளத்தினை நீங்கள் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

வலுசக்தி அமைச்சு
இல. 80, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை
கொழும்பு 07,
தொலைபேசி - 011 2584355
தொலை நகல் - 011 2372115
மின்னஞ்சல் - info@energymin.gov.lk
இணையத்தளம் -. energymin.gov.lk

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
6 வது மாடி, லங்கை லலிதா வர்த்தகக் கோபுரம்
இல.28, சென் மைக்கல் வீதி
கொழும்பு 03
தொலைபேசி - 011-2392604-8
தொலை நகல் - 011-2392641
மின்னஞ்சல் - info@pucsl.gov.lk
இணையத்தளம் -. pucsl.gov.lk

இலங்கை கட்டளைகள் நிறுவனம்
இல. 17, விக்ரோரியா இடம்
லங்கிறிலை மாவத்தை
கொழும்பு 08
தொலைபேசி - 011-2671567
தொலை நகல் - 011-2671579
மின்னஞ்சல் - slsi@slsi.lk
இணையத்தளம் -. www.slsi.lk

தினகரன்
THINAKARAN
திகைரன்
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் கார்த்திகை மாதம் 24ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 05

குறள் தரும் சிந்தனை

மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து

மனவளம் மிக்க சான்றோராக இருப்பினும் அவர் சேர்ந்துள்ள கூட்டத்தினரைப் பொறுத்தே வலிமை வந்து வாய்க்கும்.

ஒமிக்ரோன் வைரஸ் அச்சத்தை மிகைப்படுத்தும் ஊடகங்கள்!

உலக நாடுகள் அனைத்திலும் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தும் சொல்லாக ஒமிக்ரோன் இன்று உள்ளது. கொரோனா தொற்றின் மற்றொரு பிறழ்வு வைரஸான ஒமிக்ரோன் தென்னாபிரிக்காவிலேயே முதன் முதலாக சமீபத்தில் கண்டறியப்பட்டது. அந்த திரிபு வைரஸ் மிகக் குறுகிய காலப் பகுதிக்குள் இந்தியா, இலங்கை உட்பட 35 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளதாக அறிக்கைகள் வெளிவந்துள்ளன.

இரண்டு வருட காலத்துக்கு முன்னர் உலகில் முதன் முதலில் சீனாவின் வுஹான் மாகாணத்தில் பரவத் தொடங்கிய வைரஸ் உலகெங்கும் ஊடுருவி பல மில்லியன்கணக்கான மக்களை பலி கொண்டதுடன் மேலும் பல மில்லியன் கணக்கான மக்களைத் தொற்றிக் கொண்டது. கொரோனா தொற்றுப் பரவலின் அடுத்தடுத்த அலைகள் ஒவ்வொரு நாட்டிலும் மீண்டும் மீண்டும் உருவெடுத்து பெருமளவான மக்களை பலி கொண்டன. ஒவ்வொரு நாட்டிலும் கொரோனாத் தொற்று அலையாக உருவெடுப்பதும் சிறிது காலத்தில் தணிவடைவதும் வழக்கமாக இருந்து வருகின்றது.

அதேசமயம் கொரோனா வைரஸ் புதிய புதிய பிறழ்வுகளாக உருமாறி உலகுக்கு பேரச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது. கொரோனா வைரஸின் இறுதியான பிறழ்வு ஒமிக்ரோன் வைரஸ் ஆகும். டெல்டா திரிபு வைரஸின் அச்சம் தணிந்து செல்வதற்கிடையில் மற்றொரு அச்சுறுத்தலாக தற்போது ஒமிக்ரோன் கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் பிறழ்வுகளையும் அது பரவுகின்ற வேகத்தையும் வைத்து பார்க்கின்ற போது, உலகப் பெருந்தொற்றின் அச்சம் எம்மை விட்டு விரைவில் நீங்கும் என்ற அறிகுறியை காண முடியாதிருக்கின்றது.

தென்னாபிரிக்க மருத்துவ அறிவியலாளர்களின் அறிக்கைகளை வைத்து நோக்குகின்ற போது, ஒமிக்ரோன் வைரஸானது மிக வேகமாக பரவும் என்பது தெளிவாகி உள்ளது. ஆனால் இதுவரை கண்டறியப்பட்ட வைரஸ் திரிபுகளைப் போன்று ஒமிக்ரோன் வைரஸ் மக்களுக்கு பாரதூரமான உயிராபத்தை ஏற்படுத்துமா என்பது இன்னுமே நிரூபிக்கப்படவில்லை.

இந்த புதிய வைரஸின் பாதிப்பு தொடர்பாக மருத்துவ விஞ்ஞானிகளிடம் இருந்து இரு வகையான கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒமிக்ரோன் வைரனானது மக்கள் மத்தியில் வேகமாகப் பரவுமே தவிர உயிராபத்தை பாரதூரமாக ஏற்படுத்தாது என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர்.

ஆனால் மற்றொரு தரப்பு மருத்துவ நிபுணர்களோ வேறு விதமாகக் கூறுகின்றனர். ஒமிக்ரோன் வைரஸானது உலக நாடுகள் எங்கும் பரவுமானால் அதிகளவான உயிரிழப்புகளை ஏற்படுத்தும் என்பது அவர்களது கருத்தாகும். இவ்விரு தரப்பினரது கருத்துகளை வைத்துப் பார்க்கும் போது ஒமிக்ரோன் வைரஸ் ஏற்படுத்தப் போகும் பாதிப்புகள் தொடர்பாக உறுதியான முடிவு எதற்கும் வர முடியாது உள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த பிரபல மருத்துவ விஞ்ஞானியான திருமதி சுவாமிநாதன் சமீபத்தில் வெளியிட்டுள்ள கருத்தானது ஒமிக்ரோன் மீதான அச்சத்தை தணிப்பதாகவே அமைந்துள்ளது. மக்களில் ஒமிக்ரோன் அதிக உயிராபத்துகளை ஏற்படுத்தும் என்பது இன்னும் நிரூபிக்கப்படாததால் மக்கள் அதுபற்றி இப்போது வீணான அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று கூறுகின்றார் மருத்துவ விஞ்ஞானி திருமதி சுவாமிநாதன்.

இது ஒருபுறம் இருக்க ஒமிக்ரோன் வைரஸ் தொடர்பாக அனைத்து நாடுகளிலும் உள்ள ஊடகங்கள் மிகைப்படுத்தப்பட்ட ஊகங்களை வெளியிட்டு புரளி கிளப்பி, மக்களை தேவையற்ற அச்சத்திற்கு உள்ளாக்கி வருவதாக மருத்துவத் துறையினர் பலரும் கவலை வெளியிட்டு வருகின்றனர். கொரோனா வைரஸானது திரிபுகளை அடைவது புதுமையானது ஒன்றல்ல. ஆனால் அந்த திரிபு வைரஸ்கள் அத்தனையும் அதிக வீரியம் கொண்டதாக இருக்கும் என்பதும் உண்மை அல்ல. திரிபு வைரஸ்களில் பெரும்பாலானவை குறைந்த வீரியம் கொண்டதாகவே உள்ளதால் அவை மக்களுக்கு உயிரச்சத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதே மருத்துவ உலகத்தின் பொதுவான கருத்து ஆகும். ஆகவே ஒமிக்ரோன் தொடர்பாக ஊடகங்கள் புரளிகளையும் அச்சத்தையும் கிளப்புவதாக நாம் கருதுவதற்கு இடம் உண்டு.

ஆனாலும் கொரோனா குடும்பத்தைச் சேர்ந்த எந்த ஒரு வைரஸ் பரவல் தொடர்பாகவும் உலக நாடுகள் அசமந்தமாக இருந்து விட முடியாது. அதன் திரிபுகள் வீரியம் குறைந்தவையாகவோ அல்லது கூடியவையாகவோ இருக்கக் கூடும். ஆனாலும் அவை உலகில் பாதிப்புகளையும் மனித முன்னேற்றத்தில் வீழ்ச்சிகளையும் தொடர்ந்தும் ஏற்படுத்திக் கொண்டே இருக்கும் என்பதை நாம் மறந்து விடலாகாது.

வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல், சமூக இடைவெளி பேணுதல் மற்றும் முகக்கவசம் அணிதல் போன்றவற்றை தொடர்ந்தும் நாம் கடைப்பிடித்து வந்தால் மாத்திரமே கொரோனா தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடிவதுடன் கொரோனாவை உலகில் இருந்து விரட்டியடிக்க முடியும். ஒமிக்ரோன் தொடர்பான செய்திகள் மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கக் கூடும் என்ற அச்சம் ஒருபுறம் இருக்கட்டும். கொரோனா தொடர்பான கட்டுப்பாடுகளில் மக்கள் தொடர்ந்தும் விழிப்புணர்வை கடைப்பிடிப்பதே முக்கியமானதாகும்.

editor.tkn@lakehouse.lk

பொதுநூலக வரலாற்றில் சாதனைகள் படைத்த பேத்தாழை பொதுநூலகம்

பத்தாண்டு நிறைவு இன்று

சந்திரகாந்தன் எம்.பியின் எண்ணக்கருவில் உருவாகி, நவீன மாற்றங்களுடன் வளர்ச்சிப் பாதையில்...

மாகாணசபைகளின் கீழ் இயங்குகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் நலன்புரிச் சேவைகளுள் ஒன்றாக பொதுநூலகங்கள் செயற்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசசபையின் கீழ் இயங்கி வருகின்ற 08 பொதுநூலகங்களுள் ஒன்றாக விளங்குகிறது பேத்தாழை பொதுநூலகம். கிழக்கு மாகாணசபையின் முதல்முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் மேற்கொண்டமுயற்சியினால்இந்நூலகம்அமைக்கப்பட்டது. சுமார் 50,000 புத்தகத் தலைப்புக்கள் கொண்டதாக உருவாக்க வேண்டும் என்பது அவரது இலக்கு. தற்பொழுது நூலகத்தில் 15,000க்கு மேற்பட்ட தலைப்புக்களினாலான 25000 நூல்கள் உள்ளன.

தமிழரின் பழம்பெரும் இலக்கியங்கள், சமய இலக்கியங்கள் பதினெண் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்கள் போன்ற இலக்கியப் பொக்கிசங்களோடு ஆயிரக்கணக்கான ஆய்வுநூல்கள், இலக்கிய நூல்கள் கொண்ட இந்நூலகத்தின் உசாத்துணைப் பிரிவின் மூலம் இதுவரை நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயனடைந்துள்ளனர். போட்டிப் பரீட்சைகள் முதல் நேர்முகத் தேர்வுகளுக்கு தோற்றுகின்றவர்கள், பல்கலைக் கழகங்களில் ஆய்வுகளை மேற்கொள்கின்ற மாணவர்கள் என கிழக்கு மாகாணத்தின் பல இடங்களில் இருந்து இந்நூலகத்திற்கு பெருமளவானோர் வருகை தருகின்றனர்.

நூலகத்தின் முதலாவது அங்கத்துவராக இணைந்து இன்று வரை இதன் அபிவிருத்திப் பணிகளில் முக்கிய பங்காற்றி வருகின்றார் இந்நூலகத்தின் நிறுவுனரான சிவநேசதுரை சந்திரகாந்தன் எம்.பி.

தற்பொழுது இந்நூலகத்தில் சிறுவர் பிரிவில் 1200க்கு மேற்பட்ட சிறுவர்களும், பெரியவர்களுக்கான பகுதியில் சுமார் 1700க்கு மேற்பட்டவர்களுமாக ஏறத்தாழ சுமார் 3000 வரையான பதிவு செய்யப்பட்ட அங்கத்துவர்கள் உள்ளனர்.

இன்றுடன் பத்தாண்டுகள் நிறைவடையும் நூலகத்தின் பத்தாண்டு நிறைவு மற்றும் தேசிய வாசிப்பு மாத விழா எதிர்வரும் 18. 12. 2021அன்று இடம்பெறவுள்ளது. அதன் போது 'வல்லகி' எனும் சிறப்புமலர் வெளியீடும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூலகத்தில் இதுவரை தி.சரவணபவான் என்பவர் நூலகராகவும், ஆ.அருமைநாயகம், திருமதி தாரணி தங்கத்துரை, வே.கேதாதரன் ஆகியோர் நூலகப் பொறுப்பாளர்களாகவும் பணிபுரிந்துள்ளனர். தற்பொழுது மரகதம் பிரகாஸ் நூலகப் பொறுப்பாளராக பணியாற்றி வருகின்றார். 10 ஆண்டுகள் நிறைவினைக் கொண்டாடும் அளவிற்கு இந்நூலகம் சாதித்தது என்ன? என்பதை பார்ப்போமானால் அதன் முக்கியத்துவம் புலப்படும்.

2011 –டிசம்பர்,10 இல் நூலகம் திறக்கப்பட்டது. 2012இல் 'நூலகம்' இதழ் வெளியிடப்பட்டது. 2012இல் தரம்_2 நூலகமாகத் தரமுயர்த்தப்பட்டது. 2012 இல் மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி மன்றத்தின் 'சிறந்த தொழினுட்ப கட்டமைப்பைக் கொண்ட நூலகம்' என்ற விருது பெற்றது. 2013இல் களனிப் பல்கலைக்கழகமும், உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சும் இணைந்து நடத்திய இலங்கையிலுள்ள நூலகங்களுக்கான தரப்படுத்தல் போட்டியில் தேசிய மட்டத்தில் பிரதேச சபைகளின் கீழ் இயங்கும் நூலகங்களுள் முதலாம் இடத்தினைப் பெற்று 'சுவர்ண புரவர' எனும் விருது பெற்றது.

2015 ஏப்ரல் 23இல் 'உலக புத்தக தின விழாவில்' மாவட்டத்தின் மூத்த படைப்பாளிகள் மூவரைக் கௌரவித்து 'புத்தகங்கள் உருவாக்கிய மனிதர்கள்' எனும் விருது வழங்கிக் கௌரவித்தது. 2016இல் ஹொஹா மென் பொருளினைப் பயன்படுத்தி இலங்கை பொது நூலகங்களுள் முதன்முறையாக இணைய வழி நூலகத்தகவல் அணுகல் சேவையினை ஆரம்பித்தது. 2017இல் தேசிய வாசிப்பு மாத விழாவில் நூலக உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்ட 'தடை ஏது' குறும்படம் வெளியிடப்பட்டது.

2017இல் நூலகத்தில் பார்கோட் முறை அறிமுகம் செய்யப்பட்டது. 2018இல் இலங்கை பொதுநூலகத்துறையில் முதன் முறையாக நூலக கீதம், நூலகக் கொடி அறிமுகம் செய்யப்பட்டன. 2018இல் தேசிய வாசிப்புமாதப் போட்டியில் (2017க்கான) தேர்வாகி விருது பெற்றது. 2019இல் 'ஊற்று' கையெழுத்து சஞ்சிகை வெளியிடப்பட்டது. 2021இல் 'நிலாமுற்றம்' எனும் பெயரில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று 'இலக்கிய நிகழ்வு' ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது ஒவ்வொரு மாதமும் Zoom இல் நடைபெற்று வருகின்றது. YouTube மூலம் 'நூல் அரங்கம்' எனும் நூலறிமுக நிகழ்வோடு, உள்ளூர் படைப்பாளிகளின் நூல்களை மின்னூலாக்கி 'நூலகம்' இணையத்தளத்தில் பதிவேற்றுகின்ற பணியினையும் ஆரம்பித்துள்ளது.

கோறளைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர், செயலாளர், நூலகப் பணியாளர்கள் எனப் பலரின் ஒத்துழைப்போடு நூலகத்துறை நிபுணர்களான எம்.என். ரவிக்குமார், து.பிரதீபன் போன்றோரும் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்து வருகின்றனர். கிழக்கின் மிகப் பெரும் நூலகமாக மட்டக்களப்பில் பாரியதொரு நூலகத்தினை அமைக்கின்ற பணியில் ஈடுபட்டு வரும் சிவநேசதுரை சந்திரகாந்தன் எம்.பியின் முதல் முயற்சியான பேத்தாழை பொதுநூலகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா சிறக்கவும், நூலகம் மென்மேலும் வளரவும் நூலக ஊழியர்கள் சார்பில் தினகரன் ஊடாக எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எஸ்.ஏ.ஸ்ரீதர்...✍
நூலக சேவகர், பொதுசன நூலகம், வாழைச்சேனை

ஹெலிகொப்டர் விபத்தில் விடை தெரியாத வினாக்கள்!

இதே ரக ஹெலியிலேயே மோடி அடிக்கடி பயணம்

இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் சென்ற நவீன எம்.ஐ. 17 வி5 ஹெலிகொப்டர் விபத்து தொடர்பாக பல விடை தெரியாத கேள்விகள் உள்ளன. தொடர்ந்து நடைபெறும் விசாரணையில்தான் அவை தீர்க்கப்படும் எனத் தெரிகிறது.

தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மதுலிகா ராவத் உள்ளிட்ட 14 பேர் சென்ற எம்.ஐ.17 வி5 ஹெலிகொப்டர் நேற்றுமுன்தினம் நண்பகல் குன்னூர், காட்டேரி அருகே தரையிறங்குவதற்கு சில நிமிடங்கள் மட்டுமே இருந்த நிலையில் விபத்திற்குள்ளானது. அதில் 13 பேர் இறந்தனர். வெலிங்க்டன் இராணுவ கல்லூரி பணியாளர் ஒருவர் மட்டும் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார். தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஹெலி கொப்டர் விழுந்து நொருங்கியதா அல்லது மேகமூட்டம் காரணமாக மரத்தில் மோதி தீப்பிடித்ததா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இச்சம்பவம் குறித்து விமானப் படை முன்னாள் அதிகாரிகள் சிலர் கூறுகையில், நாட்டின் முப்படைகளின் தலைமைத் தளபதி பயணிக்கிறார் என்பதால் ஹெலி கொப்டர் விரிவான சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும். மற்றொரு ஹெலி கொப்டரும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். வானிலை நிலைமை சரிபார்க்கப்பட்ட பின்னரே ஹெலி கொப்டரை எடுத்திருப்பார்கள். மோசமான வானிலை இருந்திருந்தால் பயணத்தை ரத்து செய்ய முயற்சித்திருக்கலாம்.

அப்படி இவை எல்லாமே சாதாரணமாக இருந்திருந்தால், ஹெலிகொப்டர் குன்னூருக்கு அருகில் மேகங்களுக்கிடையே தாழ்வாக பறந்த போது மலை மீது உள்ள உயரமான மரங்களில் மோதியிருக்கலாம். அந்த வான் வழியில் பழக்கப்பட்ட விமானிதான் ஹெலி கொப்டரை இயக்கினாரா என்பது தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

எம்.ஐ.17 வி5 வகை ஹெலிகொப்டர் நவீன ரக இராணுவ ஹெலிகொப்டர் ஆகும். உலகின் மேம்பட்ட ஹெலி கொப்டர்களில் இதுவும் ஒன்று. தற்போது விபத்துக்குள்ளானது ZP5164 சீரியல் எண் கொண்டது. பிரதமர் மோடி இதே ரகத்தில் ZP5238 சீரியல் எண் ஹெலி கொப்டர்களை பல்வேறு சந்தர்பங்க ளில் பயன்படுத்தியுள்ளார். கடந்த 2020 ஓகஸ்ட் மாதம் ராமர் கோயிலுக்கான பூமி பூஜை விழாவுக்கு இந்த ரக ஹெலி கொப்டரில்தான் அயோத்திக்கு வருகை தந்தார். அதே போல் இவ்வாண்டு ஏப்ரலில் மேற்கு வங்க தேர்தல் பிரசாரத்தின் போது கங்காராம்பூர், ஜெய்நகர் கூட்டங்களுக்கு இதே ரக ஹெலி கொப்டரில் பயணித்துள்ளார்.

மெல்பனில் மல்லிகை ஜீவா நினைவரங்கில் முருகபூபதியின் மூன்று நூல்கள் வெளியீடு

'அக்கினிக்குஞ்சு' இணைய இதழ் ஆசிரியர் யாழ். பாஸ்கர் மல்லிகை ஜீவா நினைவு விருது பெறுகிறார்

இலங்கையின் மூத்த எழுத்தாளரும் 'மல்லிகை' ஆசிரியருமான அமரர் டொமினிக் ஜீவா அவர்களினால் இலக்கிய உலகிற்கு 1970 களில் அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்தாளரும் சமூகப்பணியாளருமான முருகபூபதியின் 70 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கதைத் தொகுப்பின் கதை (சிறுகதை) 'நடந்தாய் வாழி களனி கங்கை' (கட்டுரை), 'பாட்டி சொன்ன கதைகள்' (சிறுவர் இலக்கியம்) நூல்களின் வெளியீட்டு அரங்கு இம்மாதம் 19 ஆம் திதி (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அவுஸ்திரேலியா மெல்பனில் Berwick senior citizens hall (112 High Street, Berwick VIC 3806) மண்டபத்தில் நடைபெறும்.

மெல்பன் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி சாந்தி சிவக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு, திருமதி மேகானந்தா சிவராசாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும். திருமதி சரண்யா மனோசங்கர் தமிழ் வாழ்த்து பாடுவார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பெருந்தொற்றினால் மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், மல்லிகை இதழின் ஆசிரியருமான டொமினிக்ஜீவாவின் உருவப்படத்திற்கு விளக்கேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, அவரைப் பற்றிய நினைவுரை நிகழ்த்தப்படும்.

எழுத்தாளர் டொக்டர் நடேசன் நினைவுரையாற்றுவார். சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன் முருகபூபதியின் நூல்களை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார்.

கொழும்பு இலக்கியன் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்) நூல் குறித்து செல்வன் ஹரீஜன் பசுபதிதாசனும், யாழ். ஜீவநதி வெளியீடாக வந்துள்ள 'கதைத் தொகுப்பின் கதை' நூல் குறித்து திருமதி கலாதேவி பாலசண்முகன், அசோக்குமார் ஜனார்த்தனன், க. ராஜா ஆகியோரும், கொழும்பு குமரன் பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள 'நடந்தாய் வாழி களனி கங்கை' நூல் குறித்து கிறிஸ்டி நல்லரெத்தினமும் உரையாற்றுவர்.

நடந்தாய் வாழி களனி கங்கை (கட்டுரை):

இலங்கையின் வற்றாத ஜீவ நதியான களனி கங்கையின் தீரத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகள் மற்றும் ஜதீகக் கதைகளின் பின்னணி, அங்கு ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பற்றிய விவரணச் சித்திரமாக படைக்கப்பட்ட களனி நதியின் கரையோரம் எங்கும் நடந்த சுவாரசியமான கதைகளைக் கூறும் நூல். 'நடந்தாய் வாழி களனி கங்கை' இலங்கையில் 'அரங்கம்' பத்திரிகையில் தொடராக வெளிவந்தமை குறிப்பிடத்தகுந்தது.

கதைத் தொகுப்பின் கதை (சிறுகதை):

புகலிட வாழ்வுக் கோலங்களை சித்திரிக்கும் 15 சிறுகதைக்களைக் கொண்டிருக்கும் முருகபூபதியின் ஏழாவது சிறுகதைத் தொகுதியான 'கதைத் தொகுப்பின் கதை' நூலில் ஒவ்வொரு கதை பற்றியும் 15 பேர் தமது வாசிப்பு அனுபவங்களையும் பதிவுசெய்துள்ளனர்.

பாட்டி சொன்ன கதைகள்:

சின்னஞ்சிறிய வயதில் முருகபூபதியின் பாட்டி அவரை உறங்க வைக்கும் பொழுது சொன்ன (Bed time stories) கதைகளை உருவகக் கதைகளாக மாற்றி, இன்றைய நவீன காலத்திற்கு ஏற்ப எழுதப்பட்ட சிறுவர்களுக்கு மாத்திரமின்றி பெரியவர்களுக்குமான படைப்புகள். இந்த நூல் தமிழ்நாட்டில் வெளிவந்தமையால், அங்கு நூலக சேவைகள் திணைக்களம், சிறுவர் இலக்கிய வரிசையில் இதனைச் சேர்த்தது. பாட்டி சொன்ன கதைகள் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட சில கதைகள், சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் 'சிறுவர் கதைகள்' என்ற பெயரில் வண்ணப்படங்களுடன் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இதனை இலங்கை கல்வி அமைச்சு சிறுவர் இலக்கிய வரிசையில் இணைத்துள்ளது.

இந்த அரங்கில் எழுத்தாளரும் நாடகக் கலைஞரும் நீண்ட காலமாக அவுஸ்திரேலியாவிலிருந்து 'அக்கினிக்குஞ்சு' இதழை முதலில் அச்சு வடிவிலும் வெளியிட்டு, பின்னர் இணைய இதழாகவும் வடிவமைத்து வெளியிட்டு வருபவருமான யாழ். பாஸ்கர் 'மல்லிகை ஜீவா நினைவு விருது' பெறுகிறார்.

போக்குவரத்து நெரிசலை குறைக்க அமைச்சர் சரத் வீரசேகர நடவடிக்கை

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் மக்கள், அன்றாடம் நிலவுகின்ற போக்குவரத்து நெரிசலால் பாதிக்கப்படுவதைக் கருத்திற் கொண்டு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். போக்குவரத்து நெரிசலால் பாதிக்கப்படுகின்ற மக்களின் சிரமங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கொழும்பில் பல இடங்களுக்கு அமைச்சர் விஜயம் செய்தார்.



தற்போது நிலவுகின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் இந்த விஜயத்தின் போது விசேட கவனம் செலுத்தினார். அடையாள பதாகைகள், தொழிநுட்ப உபகரணங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் வினைத்திறனை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் சரத் வீரசேகர பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இலங்கை விமானப் படையின் உதவியுடன் ட்ரோன் கமெராக்கள் மூலம் 9 இடங்களில் போக்குவரத்து நெரிசலை கண்காணிப்பதற்கு இலங்கை விமானப்படை வழங்கிய உதவிக்காக அமைச்சர் சரத் வீரசேகர பாராட்டுத் தெரிவித்தார்.

வாகன சாரதிகள் பலரின் பொறுப்பற்ற செயல்களால் அதிகரித்து வரும் வாகன நெரிசல் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்குமாறு பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேச பந்து தென்னக்கோன் மற்றும் அதிகாரிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

றிசாத் ஏ காதர்...✍

அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைந்து மக்கள் சமத்துவத்தை உறுதிப்படுத்துவோம்!

திருச்சபை மற்றும் இலங்கை திருச்சபையின் ஆயர்களாகிய நாங்கள், சர்வதேச மனித உரிமைகள் தினத்தின் இந்தச் செய்தியில், அனைத்து இலங்கையர்களையும் அனைத்து கிறிஸ்தவர்களையும் உலக ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து அனைத்து மனிதர்களின் சமத்துவத்திற்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். ஏனெனில் மனிதர்கள் 'சுதந்திரமாகவும் கண்ணியம் மற்றும் உரிமைகளில் சமமாகவும் பிறந்தவர்கள் ஆவர்.

மனிதஉரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தில் ((UDHR)) உள்ள இந்த முக்கியமான ஏற்பாட்டை பாதிக்கும் வகையில் இன்று இலங்கையில் பல துன்பகரமான சம்பவங்கள் இடம்பெற்று வருவது குறித்து எமது கவலையை தெரிவிக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு படுகொலை நடந்து இரண்டரை ஆண்டுகளாவதால் மிகப் பெரிய பொதுப்படுகொலைக்கு மூளையாக செயல்பட்டவர்களைக் கண்டறிந்து வெளிப்படுத்த வேண்டும்.

உள்நாட்டுப் போர் முடிவடைந்து 12 ஆண்டுகளுக்குப் பிறகு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக உண்மை மற்றும் நீதியைப் பின்பற்றுவதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது. பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள் சிறிதளவு முன்னேற்றம் அடைந்துள்ளன. போருக்குப் பிந்திய தேசிய நல்லிணக்கத்திற்கான இந்த முக்கியமான பகுதியில் பின்வாங்குவது குறித்து கவலை உள்ளது.

நபர்களின் சமத்துவத்தையும் கண்ணியத்தையும் பாதிக்கும் மற்றும் சட்டத்தின் ஆட்சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் பல குறிப்பிடத்தக்க மனிதஉரிமை மீறல்கள் கவனிக்கப்படாமல் உள்ளன.

கொவிட் தொற்றுநோயின் சவால்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும் விளிம்பு நிலைக் குழுக்களின் சம உரிமைகள் மற்றும் கண்ணியம் ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறு அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

Diocese of Colombo

Church of Ceylon
368/3A, Bauddhaloka Mawatha, Colombo 07.Sri Lanka
Tel : 011 – 2696208 / 011- 2684810Fax : 011 – 2684811
Email : ps@churchofceylon.com

Diocese of Kurunegala

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கூட்டு அறிக்கை

பாகிஸ்தானில் இலங்கைத் தொழிற்சாலை முகாமையாளர் பிரியந்த குமாரதியவர்தன கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டமையானது, அந்தந்த மதமரபுகளுக்குள் மதத் தீவிரவாதத்தை எதிர்க்கும் மதத் தலைவர்களின் பொறுப்பை நமக்கு நினைவூட்டுகிறது. இலங்கையில் உள்ள இலங்கை திருச்சபையானது அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுக்கு ஆழ்ந்த இரங்கலையும் பிரார்த்தனைகளையும் தெரிவிக்கும் அதேவேளையில், இந்த முயற்சியில் தன்னை அர்ப்பணித்து, அனைவரின் மனிதஉரிமைகளும் மதிக்கப்படுவதை உறுதி செய்து, மததீவிரவாதத்தை கட்டுப்படுத்தும் முயற்சிகளை பலப்படுத்துகிறது.

சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தின் அடிப்படையில் ஒரு சமூகத்தில் இந்த விடயங்கள் அவசரமாக கவனிக்கப்படவேண்டியது அவசியம். ஒரு நாடு மற்றும் ஒரு சட்டம் குறித்த பணிக்குழுவை நிறுவுவது, அது நிறுவப்பட்ட விதம் மற்றும் அதன் ஆணை ஆகிய இரண்டும் கடுமையான அரசியலமைப்பு சிக்கல்களை எழுப்புகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளில், பொதுவாக மனிதஉரிமைகள், பன்மைத்துவம், ஜனநாயகம் மற்றும் நீதியுடன் கூடிய உண்மை ஆகியவற்றில் கருத்து வேறுபாடு மற்றும் வாதிடுவதற்கான மக்களின் உரிமையை அரசாங்கம் மதிக்கிறது என்பதும் எங்கள் பார்வையில் முக்கியமானது.

அதிவண. கீர்த்திசிறி பெர்னாண்டோ...✍
(தலைமை பேராயர் இலங்கை திருச்சபை, பேராயர், குருநாகல் மறைமாவட்டம்)

அதிவண. துஷாந்த ரொட்ரிகோ...✍
(பேராயர் கொழும்பு மறைமாவட்டம்)

மக்கள் அனைவரும் சமமான உரிமைகளுடன் வாழும் நிலைமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

சர்வதேச மனித உரிமைகள் தினம் ஆண்டு தோறும் டிசம்பர் 10ம் தேதி அனுஷ்டிக்கப்படுகிறது. இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்ற போது நடந்த சொத்து இழப்பு, படுகொலைகள், அட்டூழியங்கள் மற்றும் மனிதப் பேரழிவுகளின் பின்னர் தோன்றிய ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டதே இந்த மனித உரிமைப் பிரகடனம். மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க முடியாத, மறுக்க முடியாத உரிமைகளை மனித உரிமைகள் என்று அழைக்கிறோம். மனித உரிமைகள் என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல, அது போல் மனித உரிமைகள் எவராலும் வழங்கப்பட்டதும் அல்ல. எனவே ஒருவரின் உரிமையை பறிக்க எவருக்கும் உரிமையில்லை என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று

மனிதன் மனிதனாகவும் மனித கௌரவத்துடன் மனிதப் பண்புகள், மனித விழுமியங்களுடனும் வாழ்வதற்கு அவசியமான உரிமைகளே மனித உரிமைகள் என மிக எளிமையாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. வேறுவகையில் கூறுவதாயின், மனிதனுக்குள்ள உரிமைகள் எனலாம். இன்னும் சரியாக கூறுவதாயின் மனிதர்களின் நிறம், சாதி, இனம், வகுப்பு, பால், ஆண், பெண் வேறுபாடுகள் ஆகியவற்றினை கருத்தில் கொள்ளாது அனைத்து மனிதர்களுக்கும் சமமாக உரித்தாகும் விடயங்களே உரிமைகளாகும்.

மனிதன் தனது அடிப்படைத் தேவைகளை அடைந்து கொள்ளவும் சிறப்பாக வாழ்வதற்கும் தமது வாழ்வை ஒழுங்குப்படுத்திக் கொள்வதற்கும் அவ்வுரிமைகள் அவசியமாகின்றன. ஜனநாயக நாடொன்றில் சுதந்திரம் தொடர்பான மதிப்பீடு, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் சர்வஜன வாக்களிப்பதிகாரத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் நேர்மையான தேர்தல்களை நடத்துதல் ஜனநாயகத்தின் அத்தியாவசிய அடிப்படையாகும். இதன் விளைவாக ஜனநாயக நாட்டில் மனித உரிமைகள் வினைத்திறனான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மற்றும் பாதுகாக்கப்படுவதற்கு தேவையான சுமுகமான சூழலை உருவாக்க காரணமாகின்றது. இந்த பெறுமதியான கருத்தேற்புகள் அனைத்துலக மனித உரிமை பிரகடனத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பொருத்தணையின் மூலம் இது மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது எனலாம். அடிப்படை உரிமையானது மனிதனின் ஆளுமையை வளர்ப்பதற்கு மிகவும் தேவையான உரிமையாகும். இந்த உரிமையின்றி எந்தவொரு மனிதனும் சமூக அந்தஸ்தினைப் பெற முடியாது என்பதனால் இதனை அரசியல் அமைப்பு உரிமைகள் என்றும் கூறலாம். பொதுவாக நாட்டின் அடிப்படைச் சட்டமாக விளங்கும் அரசியல் அமைப்பின் மூலமாகவே அடிப்படை உரிமைகள் வழங்கப்படுகின்றன. இதனால் அரசாங்கம் மீறிச் செயல்பட முடியாத நிலை காணப்படுகின்றது.

எல்லோருக்கும் தங்களுடைய உரிமைகளை நீதிமன்றங்கள் முன்பு எடுத்துச் சென்று அதன் மூலம் நிலைநாட்டிக் கொள்ள உரிமை உண்டு. இதுவும் ஒரு அடிப்படை உரிமையாக அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் நீதிமன்றங்கள் அரசியலப்பின் பாதுகாவனாகவும் செயலாற்றுகின்றன. அதிகார பிரிவினைக் கோட்பாட்டின் மூலம் நீதிமன்றங்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டு உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆகவே உரிமைகள் நெறிமுறைக்குக்கமைவான வகையிலான நடத்தைகள், சட்டத்தின் முன்னரான சமவத்துவமான நீதி மற்றும் அடிப்படை கலாசார, பொருளாதார மற்றும் சமூகத் தேவைகளை அடைந்து கொள்வதற்கான சந்தரப்பங்களை குறைந்தளவான கட்டுப்பாட்டுடன் ஆனால் வாழ்க்கைக்கு உகந்தானதொரு தரத்தில் கோருவதற்கும் அனுபவிப்பதற்குமான திறனை வழங்குபவையாக காணப்படுகின்றன. ஜனநாயக நாடொன்றில் இதற்கான தேவை அதிகரித்துக் காணப்படும். விசேட உரிமைகளை அடையாளப்படுத்துவது காலத்திற்கு காலம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. சிவில் மயப்படுத்தப்பட்ட மனித இருப்புக்கள் என்றவகையில் எது விரும்பத்தக்கது. எது பொறுத்துக்கொள்ளக் கூடியது என்பது தொடர்பாக மனிதர்கள் தமது பார்வையை மீள வரையறை செய்துள்ளமையைக் காணலாம். இதனால் உரிமைகளை அடைந்து கொள்ள வேண்டிய இறுதி இலக்காகக் கருதாது, மிகச் சிறந்த மனித வாழ்க்கையை அனுபவிப்பதற்கான வழிமுறைகளாகக் கொள்ளும் போது ஜனநாயக ரீதியான சிறந்த வாழ்க்கை வாழ முடியும்.

சி.அருள்நேசன்...✍
கல்வியியல் பட்டதாரி
மனித உரிமை செயற்பாட்டாளர்

சங்கைக்குரிய கலாநிதி அஷ்ஷெய்கு முஹமது இப்றாஹிம் அல்–பாஸி (ரஹ்)

ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் மர்ஹூம் சங்கைக்குரிய ஷெய்கு ஸஜ்ஜாதா மர்ஹூம் கலாநிதி அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸி பின் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி அஷ்ஷாதுலி (ரஹ்) அல் மக்கி அஷ்ஷாதுலி (ரஹ்) அவர்களின் 25 வருட ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் இன்று 10.12.2021 முதல் 17.12.2021 வரை நாட்டில் ஷாதுலிய்யா தரீக்காவை பின்பற்றும் ஊர்களில் உள்ள பள்ளிவாசல்கள் ஸாவியாக்களில் கொவிட் 19 சுகாதார வழிகாட்டலுக்கு அமைய வரையறுக்கப்பட்டோரின் பங்குபற்றலுடன் நடைபெறுகிறது.

ஷாதுலிய்யாத் தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவராக இருந்து தரீக்காவின் வளர்ச்சிக்காக அழியாத சேவைகளைச் செய்தார் பெரியார் சங்கைக்குரிய ஷெய்கு ஸஜ்ஜாதா மர்ஹூம் கலாநிதி அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸி பின் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி. அஷ்ஷாதுலி (ரஹ்) இவ்வுலகை விட்டு பிரிந்து 25 வருடங்களாகின்ற போதிலும் இப் பெரியார் இஸ்லாத்திற்கு விசேடமாக ஷாதுலிய்யாத் தரீக்காவின் வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் என்றும் அழியாததே. சுமார் எட்டு தசாப்தங்களுக்கு மேலாக இவ்வாறு சேவையாற்றிய அறிவுக்கடல் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸி அல் மக்கி அஷ்ஷாதுலி (ரஹ்) அவர்கள் 07.09.1997 தங்களது 102 ஆவது வயதில் புனித மக்கமா நகரில் உள்ள ஷாதுலிய்யா தரீக்காவின் தலைமையகமான 'பைத்துல் பாஸி' யில் காலமானார்.

ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் இன்று ஆரம்பம்

சங்கைக்குரிய சேகு நாயகம் அவர்கள் நபிகள் கோமான் முஹம்மது (ஸல்) அவர்களின் நேரடி வழித் தோன்றலில் மக்காவில் பிரபல்யமும் கௌரவமும் மிக்க அல்பாஸி குடும்பத்தில் பிறந்தார்கள். உலக ஷாதுலிய்யாத் தரீக்காவின் தலைவராகப் பல்லாண்டுகள் அரும்பெரும் பணியாற்றிய அன்னார் எகிப்து அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் இறையியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்கள். அன்னார் இஸ்லாமிய சட்டத்துறையில் வல்லுநராகவும் ஒரு சிறந்த இஸ்லாமிய கவிஞராகவும் தலைசிறந்த சன்மார்க்க போதகராகவும் இஸ்லாமிய தத்துவ ஞானத்தில் தேர்ச்சி பெற்ற சன்மார்க்க பெரியாராகவும் தலை சிறந்த பேச்சாளராகவும் கல்விமானாகவும் திகழ்ந்தார்கள். ஆன்மீகத் துறையில் அன்னாரது சேவைகள் சவுதி அரேபியா மன்னர்களினதும் உலக இஸ்லாமிய தலைவர்கள் இஸ்லாமிய பேரறிஞர்கள் உட்பட முழு உலக முஸ்லிம்களின் கவனத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றிருந்தது என்றால் அது மிகையாகாது. அன்னார் 'முஅத்தா ' எனும் ஹதீஸ் கிரந்தம் முழுவதும் மனனஞ் செய்திருந்தார்கள். சங்கைக்குரிய செய்கு நாயகம் கலாநிதி அல் பாஸி அவர்கள் சவுதி அரேபியா அரச ஆலோசனைச் சபையின் முன்னாள் உறுப்பினராகவும் உலக முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்கள்.

பல முறை இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அன்னார் இலங்கையில் தனது இருஇஹ்வான்களையும் ஏனைய முஸ்லிம்களையும் சந்தித்து அவர்களுக்காக பிரார்த்தித்து வந்தார். குறிப்பாக இலங்கைத் திருநாட்டில் சாந்தி சமாதானம் நிலை பெற அன்னார் அடிக்கடி புனித கஃபாவில் பிரார்த்தித்து வந்தார். சங்கைக்குரிய ஷெய்கு நாயகம் அவர்களின் பணிகள் மூலம் இலங்கையில் மாத்திரமன்றி மொரோக்கோ, அல் ஜீரியா, துருக்கி, திருப்பாலிடானியா, எகிப்து, இந்தியா, சூடான், லிபியா உட்பட பல உலக நாடுகளிலும் பெரும் பான்மையான முஸ்லிம்கள் ஆன்மீக ஒளியை பெற்றவர்களாக திகழ்கிறார்கள். இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்காவின் கோட்டையாகத் திகழும் சீனன் கோட்டை பள்ளி சங்கத்தின் கோஷகராகவும் அன்னார் திகழ்ந்தார்.

பேருவளை
பீ.எம்.முக்தார்...✍

வெளிநாட்டில் வேலை...

(03 ஆம் பக்கத் தொடர்)

பொறியியலாளர் பிரியந்த குமாரவின் மரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பத்துக்கு தொழில் அமைச்சு எவ்வாறான உதவிகளை மேற்கொள்ளப் போகின்றது என்பதை தொழில் அமைச்சர் சபையில் தெளிவுபடுத்தவேண்டும் என்றார். அமைச்சர் அதற்கு பதிலளிக்கையில்,

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் சட்ட நியதிகளுக்கமைய பணியகத்தில் பதிவு செய்துள்ளவர்களுக்கே அவர்கள் தொழில் புரியும் வெளிநாடுகளில் பாதிப்புகள் ஏற்பட்டால் அதற்கான இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

அவ்வாறான நிலையிலும் பாகிஸ்தானில் கொடூரமாக படுகொலைசெய்யப்பட்டுள்ள பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் 25இலட்சம் ரூபா நிதி உதவியை பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான விசேட அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் இவ்வாறான ஆபத்தான நிலைமைகளுக்கு உள்ளாகும் போது அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக விசேட காப்புறுதித்திட்டம் ஒன்றை தொழிலமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. எனினும் சட்டபூர்வமற்ற விதத்தில் திருட்டுத்தனமாக சிலர் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்கின்றனர். அவர்களுக்கு இத்தகைய பாதுகாப்புக் காப்புறுதியை வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை.

அதேபோன்று வெளிநாட்டு தொழில்களுக்காக செல்லும் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை மூன்றுமாதங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசேடமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்லும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் நாம் சிறந்த நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விசாரணை அறிக்கை...

(03 ஆம் பக்கத் தொடர்)

உரிமை மீறல் மனு பரிசீலனைக்கு வந்திருந்த சந்தர்ப்பங்களில், பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அறிக்கை சட்ட மாஅதிபருக்கு கிடைக்கவில்லையென்ற காரணத்தின் அடிப்படையில் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் இம்மனு (08) பரிசீலனைக்கு வந்தபோது, மனுதாரர் உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் சார்பில் சட்டத்தரணி சுமையா ஜிப்ரியின் ஆலோசனைக்கமைய சட்டத்தரணிகளான பாரிஸ் சாலி, எம்.சி.எம். முனீர், மொஹம்மட் ரிஸ்வான், சனேஸ் திஸாநாயக்க ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம். சுஹைர் ஆஜரானார்.

பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் நரின் புள்ளே, நேற்று நீதிமன்றில் ஆஜராகாததையடுத்து, அரச சட்டத்தரணி சஜின் பண்டார ஆஜரானார்.

இந்நிலையில் நீதிமன்றத்தில் ஆஜரான அரச சட்டத்தரணி சஜின் பண்டார, இந்த விவகாரத்தில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் விசாரணைக் கோவை சட்ட மா அதிபருக்கு கிடைத்துள்ளதாகவும் அதனை ஆராய்ந்துவரும் நிலையில், சட்ட மா அதிபரின் நிலைப்பாட்டை அறிவிக்க திகதி ஒன்றை அளிக்குமாறும் கோரினார். அதன்படியே மனு மீதான பரிசீலனைகள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த...

இவ்விசாரணைகள் குறித்து தாம் உன்னிப்பாகக் கண்காணிக்கவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றது.

இதுகுறித்து இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஊடாக அந்நாட்டுப் பிரதமர் இம்ரான்கானுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சட்டத்தரணிகள் சங்கம் இலங்கையிலுள்ள 21 ஆயிரத்திற்கும் அதிகமான சட்டத்தரணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மீயுயர் கட்டமைப்பாகும்.

பாகிஸ்தானின் சியல்கோட் நகரில் கடந்த 03 ஆம் திகதி இலங்கைப் பிரஜையான பிரியந்த குமார தியவதன மிக கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மிகுந்த கவலையடைந்துள்ளோம். இந்த மிலேச்சத்தனமான படுகொலையை உடனடியாகக் கண்டனம் செய்த உங்களுடைய நடவடிக்கையைப் பாராட்டுகின்றோம்.

அதேவேளை பிரியந்த குமார தியவதனவின் படுகொலை தொடர்பில் எவ்வித பக்கச்சார்புமற்ற முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதன் ஊடாக பாதிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும் பாகிஸ்தான் அரசாங்கத்தையும் அதன் சட்ட அமுலாக்கக்கட்டமைப்புக்களையும் வலியுறுத்துகின்றோம்.

மேலும் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டியதன் அவசியத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களென்பதில் எவ்வித ஐயமுமில்லை என்பதுடன் அதற்காக நாம் பாகிஸ்தான் சட்டத்தரணிகள் சங்கத்தின் உதவியையும் நாடியிருக்கின்றோமென்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடப்பு தமிழருக்காக...

பிரதேச சமூக பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சில் (08) சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இதன்போது உடப்பு நகரை சூழவுள்ள பிரதேசத்தில் சுமார் 10,000 ற்கும் அதிகமான தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றதையடுத்து தமிழ் பிரதேச சபை ஒன்றை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கையை முன்வைத்தனர்.

அத்துடன் உடப்பு நகருக்கு அச்சுறுத்தலாக விளங்கும் கடலரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்மீனவர்இறங்குதுறை ஒன்றுக்கான தேவை இருப்பதனால் அதனை அமைத்துத் தருமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி தமிழ் பிரதேச சபையை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் பற்றி ஆராய்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததுடன் கடலரிப்பு மற்றும் இறங்குதுறை போன்ற விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் உறுதியளித்தார்.

2022 வரவு செலவுத் திட்டம்:

நாளான இன்று காலை 9.30 முதல் மாலை 05 மணி வரை குழுநிலை விவாதம் நடைபெற்று மாலை 05 மணிக்கு வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

நிதியமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சுக்கள், அதனோடு தொடர்புடைய இரண்டு இராஜாங்க அமைச்சுக்கள் ஆகியவற்றின் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதம் இன்றைய தினம் நடைபெறவுள்ளது. விவாதங்களின் முடிவில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பதிலளித்து உரையாற்றவுள்ளார். அதனையடுத்து வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு சபையில் நடைபெறவுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் கடந்த நவம்பர் 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நவம்பர் 22 ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றதுடன் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு அதற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்று ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதன்படி வரவு செலவு திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றப்பட்டது.

அதனையடுத்து நவம்பர் 23ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் ஆரம்பமானது. தொடர்ந்து இன்று டிசம்பர் 10ஆம் திகதி வரை விவாதம் நடைபெற்று இன்று மாலை 5 மணிக்கு அதன் மீதான இறுதி வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

கவிஞர் அஹ்னாபின்...

நேற்று முன்தினம் (08)அறிவித்தார்.

அஹ்னாபின் கைதும் தடுப்புக் காவலும் சட்டவிரோதமானதெனக் கூறி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்ப்ட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு (8) பரிசீலனைக்கு வந்தபோது, சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் நரின் புள்ளே குறிப்பிட்டார்.

மனு மீதான பரிசீலனைகள்(08) உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ். துறைராஜா தலைமையிலான குமுதினி விக்ரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது, மனுதாரரான அஹ்னாப் ஜஸீம் சார்பில் நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. எம். இல்யாஸ், சட்டத்தரணிகளான சஞ்சய வில்சன் ஜயசேகர, லக்ஷ்மனன் ஜயகுமார்,ஸ்வஸ்திகா அருலிங்கம், தரிந்து ரத்நாயக்க ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கணக. ஈஸ்வரன் ஆஜரானார்.

இதன்போது மனுவின் பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நரின் புள்ளே, அஹ்னாப் ஜஸீமுக்கு புத்தளம் மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு முன் வைக்கப்பட்டுள்ள பிணை கோரிக்கைக்கு சட்ட மாஅதிபர் எதிர்ப்புகளை முன்வைக்க போவதில்லையென தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார். அந்த வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி அங்கு விசாரணைக்கு வருவதாகவும் அவர் கூறினார்.

சித்தி பெற்ற 9,000...

(03 ஆம் பக்கத் தொடர்)

ஸ்ரீயான் டி சில்வா விஜயரத்னவினால பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டது. பிரதமர் குறித்த காசோலையை அச்சந்தரப்பத்திலேயே மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை உறுப்பினர்களின் 9,000 பிள்ளைகளுக்கு ஒருவருக்கு தலா 15,000 ரூபாய் வீதம் புலமைப்பரிசில் வழங்கப்படும். 1994ஆம் ஆண்டு தொழில் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கமைய இந்த புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய அன்று முதல் இன்று வரை தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்நிய செலாவணியை...

(03 ஆம் பக்கத் தொடர்)

மேற்கத்தேய,சுதேச மற்றும் ஆயுர்வேத மருத்துவமுறைகளைச் சரியான ஒருங்கிணைப்புடன் ஒருங்கிணைந்த சேவையாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலை ரீதியிலும் வீட்டுக்கு வீடு சென்றும் தொற்றாநோய்களைத் தடுப்பதற்கான பாரிய வேலைத்திட்டமொன்றை ஆயுர்வேத பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனரென்று தெரிவித்த சுதேச மருத்துவ அபிவிருத்தி, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் பொதுச் சுகாதார இராஜாங்க அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகர, தேசிய உணவு முறைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துதல் மற்றும் நச்சுத் தன்மையற்ற உணவை உண்ண ஊக்கப்படுத்துதல் உள்ளிட்ட பல திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன என்றார்.

ஆபத்தில் சிக்கியிருந்த...

(03 ஆம் பக்கத் தொடர்)

பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்டு, இலங்கை கப்பலை காட்டுப்பள்ளியிலுள்ள அதானி துறைமுகத்துக்கு வெற்றிகரமாக இழுத்துச் சென்றது. அதிலிருந்த நான்கு இலங்கை மீனவர்களும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்திய அதிகாரிகள் வழங்கியுள்ளதாக இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

வழக்குகளை...

(03 ஆம் பக்கத் தொடர்)

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் என் மீது 11 வழக்கு தொடரப்பட்டது. எனினும் அந்த அரசாங்கத்தின் காலத்திலேயே சிறையிலிருந்து வெளியில் வந்துவிட்டேன். நல்லாட்சி காலத்தில் நீதித்துறையை அந்த அரசாங்கம் எவ்வாறு உபயோகித்தது என்பது எமக்குத் தெரியும். சானி அபேசேக்கரவையும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயசையும் அவர்கள் கையில் வைத்துக் கொண்டு சட்ட மாஅதிபர் திணைக்களத்தை எவ்வாறு கையாண்டார்கள் என்பதையும் நாம் அறிவோம். அதன்படி சபையில் உரையாற்றும் போது நீதியாகவும் மிக கவனமாகவும் உரையாற்ற வேண்டும் என்பதை நான் எரான் விக்ரமரட்ன எம் பிக்கு குறிப்பிட விரும்புகின்றேன். நாம் எதையும் எதிர்கொள்ள தயாராக உள்ளோம் எந்த சந்தர்ப்பத்திலும் ஓடி ஒளியவில்லை. நான் சிரித்துக்கொண்டே சிறைச்சாலைக்குச் சென்றவன். அந்த வகையில் பாராளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையில் எமது அரசாங்கத்திற்கு எதிராக சேறு பூச நினைக்க வேண்டாம். எமது அரசாங்கம் அதிகாரத்தைப் பாவித்து எந்த வழக்கையும் வாபஸ் பெறவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சாணக்கியனின் கருத்துக்கு...

புலிகள் வடக்கில் இராணுவத்தைக் கொல்லும்போது, அதனால் கொதிப்படைந்த தெற்கு மக்கள் குழப்பமடைந்திருக்கலாம்.

அதேபோல் யாழ். நூலகம் எரிப்பு உள்ளிட்ட சம்பவங்கள் அரசியல் பிளவுகளால் திட்டமிட்ட அடிப்படையில் இடம்பெற்றன.

ஆனால், பாகிஸ்தானில் நடந்த சம்பவம் அவ்வாறல்ல. சுவரில் இருந்த போஸ்டரை அகற்றியதால் அந்த நபரைக் கொடூரமாகக் கொன்றுள்ளனர். இலங்கையில் நடந்தவை சரியென நான் கூற விளையவில்லை. ஆனால், இரண்டையும் ஒப்பிட்டு சமப்படுத்த முற்பட வேண்டாம்.

"சாணக்கியன் நீங்கள் கண்டியில் படித்த எம்.பி., கண்டி மக்கள் உங்களுடன் எப்படிப் பழகினார்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். எனவே, நியாயமாக உரையாற்றுங்கள்" எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

வெலிங்டனில் பூதவுடல்...

வைக்கப்பட்டுள்ளன. கோவையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் குன்னூர் வெலிங்டன் இராணுவ கல்லூரிக்கு செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் முப்படை தலைமைத் தளபதி விபின் ராவத், அவரது மனைவி உள்ளிட்ட 13 பேர் (08) பலியாகினர்.

இதையடுத்து வெலிங்டன் இராணுவ மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த அவர்களின் உடல்களை அங்கிருந்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மூன்று இராணுவ வாகனங்கள் மூலம் மெட்ராஸ் ரெஜிமெண்டல் சென்டரிலுள்ள மேஜர் நாகேஷ் அரங்கிற்கு கொண்டு வரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இராணுவத் தளபதி எம்.எம். நரவணே, கடற்படை தளபதி ஹரிகுமார், விமானப்படை தளபதி சௌத்ரி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அவர்களின் உடல்கள் சூலூருக்கு கொண்டு சென்று இராணுவ விமானம் மூலம் தில்லிக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

முன்கூட்டியே தகவல்...

சிதம்பரநாதன் இளங்குன்றன் என்பவர், வாடகைக்கு தங்கியிருந்து கல்வி கற்று வந்த வன்னியசிங்கம் வீதி கோண்டாவில் கிழக்கிலுள்ள வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பான வழக்கு, யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பீட்டர் போல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா மரணமடைந்த மாணவன் சார்பில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் சந்தேகம் இருப்பதாகவும் ஒரு புலன் விசாரணையை மேற்கொள்ளுமாறும் அவர் கோரினார்.

முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் தகவல்களை வழங்குமாறு நீதவான் பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையில் வழக்கு மீண்டும் (08) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான தகவல்கள் பதியப்பட்டுள்ளதாகவும் தொலைபேசி இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லையெனவும் அதனை துரிதமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து தொலைபேசியின் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையை பெறுவதற்கு இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அறிவிப்பதாகவும் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும் வரை...

மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி தமது கேள்வியின் போது, நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள வெடுக்குநாறிமலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழாவை கடந்த இரண்டு ஆண்டுகளாக தொல்பொருள் திணைக்களம் நடத்த விடாமல் தடை செய்துள்ளது. அது தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் என்ன என அவர் கேள்வி எழுப்பினார்.

இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாம் இந்துக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அவர்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கும் நோக்கமும் எமக்கு கிடையாது. ஆனால் தொல்பொருள் இடங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதேவேளை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாடுகள் தொடர்பில் வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது. எனவே அந்த வழக்கு முடியும் வரை இந்துக்கள் பொறுமை காக்க வேண்டும். இலங்கையில் உள்ள தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாக்கும் உரிமை எம் அனைவருக்கும் உள்ளது என்பதனை தமிழ் எம்.பிக்களும் விளங்கிக்கொள்ள வேண்டும். அந்த வகையில் நாம் பொறுமையாக இந்த விடயங்களை கையாள்வது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டை முழுதாக முடக்காது

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் இவ்விடயத்தை அமைச்சர் தெரிவித்தார். இதேவேளை, நாட்டின் சகல பிரஜைகளுக்கும் இரண்டு தடுப்பூசிகளையும் வழங்குவதைக் கட்டாயமாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் இன்று...

விசேட கண்டன தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, இக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 08 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் 140 இற்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 34 பேர் பிரதான சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பல்வேறு அரசியல் தலைவர்களும் பாகிஸ்தானிடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

பாடசாலைகளில் கொரோனா...

ஆளாகியுள்ளனர். பாடசாலை மாணவ, மாணவியர் மத்தியில் கொரோனா தொற்று வேகமாக பரவுவதில்லை. பாடசாலைகளில் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றினால் கொத்தணிகள் உருவாக வாய்ப்பில்லை என்றும் அவர் கூறினார். இதற்கிடையில், பாடசாலைகளில் கொரோனா சுகாதார வழிகாட்டல்கள் முறையாக அமல்படுத்தப்படவில்லையென்று ஆசிரியர் சங்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

100 அடி பள்ளத்தில்...

விபத்தில் சாரதி படுங்காயமடைந்ததுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். நுவரெலியா பகுதியிலிருந்து கொட்டகலை நோக்கிச் சென்ற கார் நுவரெலியா – ஹட்டன் பிரதான வீதியில் சென்.கிளயார் பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.காரில் சாரதி மட்டும் பயணித்துள்ளார்.

சாரதி மது அருந்தியிருந்ததாகவும், இதனால் அவரின் கவனயீனம் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும் தலவாக்கலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சபரிமலை யாத்திரீகர்களுக்கு...

சீட்டில் சலுகைகள் வழங்குவதற்கு உறுதியளித்துள்ளார். இது தொடர்பான மேலதிக விபரங்களை அறியவிரும்பும் ஐயப்ப சுவாமிகள், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பிரத்தியேக உதவியாளர் தயாளனை 070 5300000 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புக்கொள்ள முடியுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள்...

சிறையிலுள்ளனர். 1994 ஆம் ஆண்டு கைதானவர்களும் உள்ளனர். இது தொடர்பில் பல முறை சுட்டிக்காட்டப்பட்டது. அவர்களின் வழக்குகளை துரிதப்படுத்துவதாக அமைச்சர் உறுதியளித்தாலும் வழக்கு தவணைகள் தொடர்ச்சியாக நீடிக்கப்படுகிறது. குற்ற ஒப்புதல் அடிப்படையில் வழக்கு நீடிக்கிறது. அவர்களை விடுவிக்கவோ புனர்வாழ்வளிக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் வாக்குறுதி அளித்திருந்தார். பிரதமருக்கு நான் கடிதமொன்றை அனுப்பியிருந்தேன். 12 கைதிகள் வேறு வேறு சிறைச்சாலைகளில் உள்ளனர்.சிலர் தனி ஒரு நபராக சிறையில் உள்ளார்கள். அவர்களை மாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றார்.

இதன் போது குறுக்கீடு செய்த நீதி அமைச்சர் அலி சப்ரி,

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 16 பேரை விடுதலை செய்திருக்கிறோம். முன்னாள் நீதியரசர் அசோக்க டி சில்வா தலைமையில் ஆலோசனை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைபடி 46 பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விடயங்களை நாளாந்தம் விசாரிக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் பிரதம நீதியரசர் அறிவித்துள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர்கள் தொடர்பில் முக்கியமான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.இதில் சாதகமான மாற்றம் நடக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் இதன் போது கருத்துத் தெரிவித்ததோடு சட்ட நடைமுறைகளுக்கமையவே கைதிகளை விடுவிக்க வேண்டும். அது தொடர்பில் நீதி அமைச்சர் தேவையான நடவடிக்கை எடுக்கிறார். நாம் அரசியல் ரீதியில் எந்த வாக்குறுதியும் வழங்கவில்லை. அரசியல் ரீதியில் உங்கள் தரப்பு ஒரு போதும் எமக்கு உதவவில்லை. ஆனால் இந்த நாட்டு பிரஜைகளின் நலனுக்காக செயற்படுவோம் என்றார்.

சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

கடந்த 06 மாதமாக வெளியில் செல்லும் கைதிகளை விசேட அதிரடிப்படையினர் பரிசோதனை செய்கின்றனர். கைதிகளின் ஆடைகளை அவிழ்த்து கீழ்த்தரமாக நடத்துகின்றனர். இதுதொடர்பில் ஆராயுமாறு கோரினார்.

அவை தொடர்பான ஆவணங்களை தனக்கு அனுப்புமாறு நீதி அமைச்சர் தெரிவித்தார்.(பா)

இலங்கையில் 'ஒமிக்ரோன்'...

தென்னாப்பிரிக்க விஞ்ஞானிகள் குழுவொன்று நடத்திய பரிசோதனையில் ஒமிக்ரோன் பற்றிய இந்தத் தகவலைக் கண்டுபிடித்துள்ளதாக அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வைரஸ் நோய்த்தடுப்பு மருந்துகளுக்கு கட்டுப்படவில்லை என்றாலும், பூஸ்டர் தடுப்பூசி மூலம் அதிலிருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியுமென்று ஆய்வில் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இந்த வைரஸ் குறித்து இன்னும் உறுதியான முடிவுக்கு வர முடியாதெனவும், அதனை ஆய்வு செய்வதற்கு அதிக நேரமும் தரவுகளும் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசை கவிழ்ப்பது...

இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (08) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"ஒருநாடு – ஒரு சட்டம் என்பதனூடாக இலங்கையில் பௌத்த அடிப்படைவாதம் தலைத்தூக்கியுள்ளது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிழக்கு மக்கள் அனைவரும் இந்த செயலணிக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். ஒரு நாடு – ஒரு சட்டம் என்பதை வைத்து நாட்டை ஒரு போதும் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்பதை அனைவரும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

நாம் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டுமென்றோ, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்றோ ஒரு போதும் நினைக்கவில்லை. மாறாக பொருளாதாரத்தை வளர்க்கவும் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இணைந்து செயற்படத் தயார் என்பதையே கூற விரும்புகிறோம்" எனக் குறிப்பிட்டார்.

தண்டப்பணம் அறவிடும்...

பெற்றுக்கொள்ள இரண்டு அல்லது மூன்று நாட்கள் செல்கின்றன. அதனால், "SPOT PAID" என்ற புதிய முறையை அறி

செலிங்கோ லைஃப்பின் 'எடியுகேஷன் ப்ரொட்டேக்டர்' காப்புறுதி

ஒற்றைக் கட்டுப்பணக் காப்புறுதியான 'எடியுகேஷன் ப்ரொட்டேக்டர்' பெற்றோரின் மரணம் அல்லது இயலாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் 2 முதல் 12 வயதான குழந்தையொன்றுக்கு மாதாந்தம் 50,000 ரூபாய் வரை வழங்குகிறது.

சமூகத்தின் மிகவும் அக்கறைக்குரிய விடயங்களில் ஒன்றான, சிறுவரின் தொடர்ச்சியான கல்வியை உறுதிப்படுத்துவதற்காக தனித்துவமாக காப்புறுதித்திட்டத்தை செலிங்கோ லைஃப் வடிவமைத்துள்ளது. சிறுவர் ஒருவரது அல்லது சிறுமியுடைய பெற்றோரின் இறப்பு அல்லது முழுமையான அல்லது நிரந்தர இயலாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவர்களது எதிர்கால கல்வி வாய்ப்புக்களை உறுதிப்படுத்தும் விதமாக, பெற்றோருக்கு ஒரே நேரத்தில் ஒற்றைக் கொடுப்பனவு மூலமாக செயற்படுத்தக்கூடிய வாய்ப்பை வழங்குகிறது செலிங்கோ லைப் 'எடியுகேஷன் ப்ரொட்டேக்டர்'.

'எடியுகேஷன் ப்ரொட்டேக்டர்' இதனை ஒத்த காப்புறுதித் திட்டங்களில் மிக எளிதானதும் செலவு குறைவானதுமானவற்றில் ஒன்றாக இருப்பதுடன், ஒரு குழந்தையின் கல்வி தொடர்வதற்கு இடையூறின்றிய நிதியை வழங்குவதற்கான பாதுகாப்பு வலையமைப்பாக கருவுருவாக்கப்பட்டிருப்பதாக சந்தையின் முன்னணி காப்புறுதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் சட்டவிரோத மதுபான விற்பனையை தடுக்க பொலிசார் தீவிர நடவடிக்கை

மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

சட்டவிரோத மதுபான பாவனையை தடுக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிசார் தீவிர நடவடிக்கையில் இறங்கி வருகின்றனர்.

பொலிஸ் மாஅதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ் டி எல். கே. டபிள்யூ. கே.சில்வாவின் ஆலோசனைக்கமைய மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் யூ.பி ஏ.டி.ஜி.பி கருணா நாயக்கவின் வழிகாட்டுதலில் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகாவின் சுகத் மாசிங்கஹவின் மேற்பார்வையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 13 பொலிஸ் நிலைய பிரிவுகளிலும் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வவுணதீவு பொலிஸ்பிரிவு பொறுப்பதிகாரி நிஷாந்த அப்புகாமி தலைமையில் விசேட பொலிஸ் குழு நடத்திய திடீர் வேட்டையின் போது ஈச்சந்தீவு, இருட்டுசேலை மடு பகுதிகளில் சட்ட விரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 6 பேரை சந்தேகத்தின் பேரில் பொலிசார் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து சுமார் 107 லீட்டர் சட்ட விரோத மதுபானமும் மதுபான விற்பனைக்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சட்டவிரோத மதுபான பாவனை மற்றும் விற்பனையை தடுப்பதற்கு 13 பொலிஸ் பிரிவுகளிலும் விசேட தடுப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த தடுப்பு நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறும் என பொலிஸ் வட்டாரம் தெரிவிக்கின்றது.

பதிவாளர் நாயகம் திணைக்களம்

கடுவெல காணிப் பதிவகத்தினை கொண்டு நடாத்துவதற்கான கட்டிடத்தினை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக விலைமனுகோரல்

கட்டிட சூழல்,

அலுவலகம்	வர்க்க அடியின் அளவு
கடுவெல காணிப்பதிவகம்	11500-12500

காணிப் பதிவகத்திற்காக தேவையான அடிப்படை விபரக்குறிப்பு

* நகர எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
* வாகனங்களுக்காக தடையின்றி உட்பிரவேசிக்கும் பாதை இருத்தல்
* குறைந்தது 15 வாகனங்கள் நிறுத்திவைக்கக்கூடியவாறு இடவசதி இருத்தல் வேண்டும்.

காணிப் பதிவகம் மற்றும் பன்னிப்பிட்டிய பதிவேட்டறைக்காக தேவையான பொது விபரக்குறிப்பு

- வேறுப்படுத்தப்பட்ட இரட்டை மின் வசதி மற்றும் நீர் வசதி இருத்தல் வேண்டும்.
- அலுவலக ஆளனியினருக்கு மற்றும் பொது மக்களுக்கு போதுமானளவு மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டும். (பெண்கள்/ ஆண்கள்/அலுவலக ஆளனியினர் என்ற வகையில்)
- உட்பிரவேசித்தல் பாதை மூடப்படக்கூடியவாறு வாயிற்கதவு இருத்தல்
- பாதுகாப்பு அலுவலர் தங்குவதற்காக கட்டிடத்திற்கு வெளியில் குடில் மற்றும் வெளிப்புற மலசலக்கூட வசதி இருத்தல்.
- அங்கவீனர்களுக்காக பிரவேச பாதை இருத்தல்.
- மாடிக் கட்டிடமாயின் கீழ் மாடி மற்றும் முதலாவது மாடியினுள் தேவையான இடவசதி இருத்தல் வேண்டும் என்பதுடன் தேவையான இடவசதியினை பூர்த்தி செய்வதற்கு இரண்டாவது மாடியினைப் பயன்படுத்துவதற்கு தேவையாயின் மின்தூக்கி இருத்தல் வேண்டும் மற்றும் அனைத்து மாடிகளுக்கும் மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டும்.
- மாடிகளுக்கு இடையில் வேறு நிறுவனங்கள் நிறுவப்பட்டிருத்தல் கூடாது.
- குறைந்தது 03 வருடங்கள் உடன்படிக்கைக்கு உட்படல் வேண்டும்.
- அரசாங்கத்தின் மதிப்பீட்டுக்கு உட்படல் வேண்டும்.

கட்டிடத்தின் உள்ளக வரைப்படம் மற்றும் கட்டிடத்தின் உரித்து பற்றிய தகவல்கள் அடங்கியதாக தங்களது விலைமனுவினை இரண்டு பிரதிகளுடன் தயாரித்து அச்சிட்டு 2021.12.24ஆந் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பதாக பத்தரமுல்லை,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல.234/ஏ3 இல் அமைந்துள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் சமர்ப்பிப்பதற்கு அல்லது நேரடியாக மேற்படி நேரத்திற்கு முன்பதாக இந்த திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். விலைமனு வைக்கப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கடுவெல காணிப் பதிவகத்திற்காக கட்டிடத்தினை வாடகை அல்லது குத்தகைக்கு பெறல்-2021"** என குறிப்பிடல் வேண்டும்.

2021.12.24 ந் திகதி பி.ப.02.00 கேள்விகள் திறக்கப்படுவதுடன் அந்நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் தள்ளுபடி செய்யப்படும்.

பதிவாளர் நாயகம்,
கேள்விச் சபையின் தலைவர்.

மக்கள் வங்கி

5124/ MB ம் இலக்க வழக்குடன் தொடர்புடைய சிலாபம் மாவட்ட நீதிமன்றின்

11/2021ம் இலக்கத்தின் கீழ் பிஸ்கல் மூலம் செய்யப்படுகின்ற ஏல விற்பனை

பெறுமதியான ஆதனம் ஒன்றினை பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்தல்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப் பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட ஆனவிலுந்தான் பத்துவ, ஆரச்சி கட்டுவ பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆரச்சிகட்டுவ பிரதேச செயளாலர் பிரிவுக்கு உட்பட்ட, அந்தனன்கட்டுவ கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்டு அமைந்துள்ள "வெவ இஹலகெலே" என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எம். கே. மஞ்சு ஸ்ரீ பிரியங்கர அவர்களால் 2012.03.02 ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1783ம் இலக்க வரைபடத்தின் 1A1 ம் இலக்க காணிக்கான எல்லைகள்

வடக்கு:- பிரதேச சபைப் பாதை

கிழக்கு:- மேற் கண்ட வரைபடத்தின் 1A02 இலக்கமுடைய 10 அடி அகலப் பாதை

தெற்கு:- உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. ஜி. எஸ். பி. பராக்கிரம அவர்களின் 1477 ம் இலக்க வரைபடத்தின் 01 B என்று அடையாளம் இடப்பட்ட 10 அடி அகலப் பாதை

மேற்கு:- 10 அடி அகலப் பாதை

என்ற எல்லைகளுக்கு உட்பட்ட ஒரு ரூட், முப்பத்தி ஆறு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச் (ஏ.00, ரூட். 01, பேர்ச் 36.50) விஸ்தீரனமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி கொடி பழவகை , கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக.

காணியின் அளவு ஏ.00, ரூட். 01, பேர்ச் 36.50
இது சிலாபம் காணிப் பதிவகத்தில் R 82/75 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதனத்துக்குச் செல்லும் பாதை:

சிலாபம் நகரத்திலிருந்து 15 கிலோ மீற்றர் செல்லும் போது அகப்படும் ஆரச்சிகட்டுவ சந்தியின் இடது பக்கமாக இருக்கும் அடிப்பல பாதையின் 2.5 கிலோ மீற்றர் அளவு சென்றவுடன் அடிப்பல தபால் அலுவலகத்தை தாண்டி மேலே செல்லும் போது அடிப்பல பன்சலையும் வயலும் அகப்படும். அதைத் தாண்டிச் செல்லும் போது தார் பாதையின் இடது பக்கமாக விசாலமான தேக்கு மரங்கள் அடங்கிய தோட்டம் அகப்படும். அந்த தேக்கத் தோட்டம் (அடிப்பல பாடசாலையின் முன்பாக) இடது பக்கமாக அமைந்துள்ள இரண்டாவது ஆதனம் குறிப்பிட்ட ஆதனம் ஆகும். ஆரச்சி கட்டுவையிலிருந்து சுமார் 7 கிலோ மீற்றர் ஆகும்.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி மு. ப. 11.00 மணிக்கு
ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பிரதி பிஸ்கால் மூலம் ஏல விற்பனை செய்யப்படும்.

பணம் செலுத்தும் முறை:-

ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணமாகச் செலுத்தல் வேண்டும்.

1. வாங்கிய விலையின் (நூற்றுக்கு இருபத்தி ஐந்து) 25%
2. மாகாண அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி
3. பிஸ்கல் கமிஷன் சிவில் நடைமுறைச் சட்டத்தின் 258ம் ஷரத்தின் பிரகாரம் பிஸ்கல் கமிஷன்
4. அனைத்து விளம்பர கட்டணங்கள்
5. எழுதுவினைஞர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா. 50/-
6. விற்பனைச் செலவுகள், வேறு ஏதும் கட்டணங்கள் இருப்பின் அந்தக் கட்டணங்கள்.
7. விற்பனை அத்தாட்சிப் பத்திரத்துக்கான முத்திரைக் கட்டணம்.

● குறிப்பிட்ட ஆதனத்தின் விற்பனை நீதிமன்றின் அங்கீகாரத்துடன் நடைபெறுகின்றது.

வாங்கிய விலையின் மிகுதி 75% (நூற்றுக்கு எழுபத்தி ஐந்து) வீத பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வழக்கின் கணக்கில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட முழுத் தொகையையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமைப் பத்திரம் மற்றும் வேறு விபரங்களை பரிசீலிப்பதற்கும் மேலதிக விபரங்களையும் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி. பிராந்திய பிரதான அலுவலகம், மக்கள் வங்கிக் கட்டிடம், (முதலாம் மாடி) இல. 79, மாரவில வீதி, நாத்தான்டிய என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி - 032 - 2253300, 012 - 2253301, பெக்ஸ் - 032 - 2255247

பதிவாளர்/பிரதி பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
சிலாபம்

மக்கள் வங்கி PEOPLE'S BANK www.peoplesbank.lk

திகதி 2021.12.08 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4610
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,084,090.00
ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கங்கள் 8 4 7 0 7 0 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.26,067,663.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2905
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,281,540.00
ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கங்கள் 26 41 43 54 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,614,612.96

மேல் மாகாண மெகா பவர் Mega POWER மெகா பவர் 10
சீட்டிழுப்பு இலக்கம் 958
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,983,240.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 158,423,444.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து O | சுப்பர் இலக்கம் 08 | வெற்றி இலக்கங்கள் 11 13 37 39

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 640
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,893,460.00
X | 01 19 22 43 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,025,951.60
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1178
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,042,160.00
வெற்றி இலக்கம் சிம்மம் | வெற்றி இலக்கங்கள் 7 3 8 4 6 0 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,795,826.40

08.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 597,648
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 24,284,490.00
ரூ.2,000,000.00 பரிசு 01 ரூ.1,000,000.00 பரிசுகள 01 ரூ. 100,000.00 பரிசுகள 18

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

அழைத்தல்!

பெறுகை அறிவித்தல்

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்ளல்

பெறுகை இலக்கம் : CHA/ACC/14/12/2021

இத்திணைக்களத்தின் அலுவலகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2022 பெப்ரவரி 01ஆம் திகதி முதல் இரண்டு வருட காலத்திற்கு (02 வருடங்கள்) வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் பிரகாரம் கோரப்படுகின்றது.

01. கட்டிடமானது, பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
    i. கொழும்பு மாநகர சபை அதிகாரப்பிரிவில் கொழும்பு 01,02,03,07,08,10 மற்றும் 12 ஆகிய வலயங்களில் இலகுவில் சென்றடையக் கூடிய வீதியொன்றிற்கு அண்டியதாக அமைந்திருத்தல் வேண்டும்.
    ii. கட்டிடத்தின் விஸ்தீரணம் 3500 - 4000 ச.அடிகளாக இருத்தல் வேண்டும்.
    iii. கட்டிடத்தின் வளாகத்தில் குறைந்தபட்சம் மூன்று வாகனங்களை பாதுகாப்புடன் நிறுத்தி வைக்கக்கூடிய போதியளவான இட வசதிகள் இருத்தல் வேண்டும்.
    iv. குடிநீர், மின்சாரம், முத்திரையிடப்பட்ட கழிவறைகள், உட்பட சுகாதார பாதுகாப்பு வசதிகள் மற்றும் உயர்ந்தபட்ச நீர் வழங்கல் வசதிகள் கொண்ட, மிக உயர் பாதுகாப்புள்ள நிலையமொன்றில் அமைந்திருத்தல் வேண்டும்.
    v. திணைக்களமானது, எதிர்காலத்தில், அரச கட்டிடமொன்றிற்கு இடமாற்றம் செய்யப்படும் பொழுது 03 மாத கால முன்னறிவித்தலின் பின்னர், வாடகை கட்டிடத்திலிருந்து வெளியேறக்கூடியவாறு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு, வாடகைக் கட்டிட உரிமையாளர் உடன்படுதல் வேண்டும்.
    vi. நிலைபேறான தொலைபேசிகள், கராஜ், கூட்ட மண்டபம், வளிச்சீராக்கிகள், மின் விசிறிகள் போன்ற வசதிகளுடன் கூடிய கட்டிடங்களிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

02. உங்கள் கேள்விகளுடன், திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தை பூரணப்படுத்தி சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அதனை திணைக்களத்திற்கு நேரில் சமுகமளித்து அல்லது முகவரியுடன் கூடிய தபாலுறையொன்றைத் திணைக்களத்திற்கு அனுப்பி அல்லது திணைக்களத்தின் இணையம் (www.christian.gov.lk) இலிருந்து பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். உரித்தான நகர சபையினால், அனுமதிக்கப்பட்ட கட்டிடத்தின் திட்ட வரைபடத்தின் பிரதியொன்று மற்றும் உரித்து உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன், 2021.12.30 அன்று மு.ப.11.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ளல் - 2022" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். 2021.12.30 அன்று விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும்.

03. விலைமனு ஒன்றை அல்லது அனைத்தையும் அல்லது பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை திணைக்களப் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும். வாடகை கட்டிடம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தி திணைக்களத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கு கட்டிட உரிமையாளர் உடன்படுதல் வேண்டும்.

பணிப்பாளர்,
கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு - 08
தொலைபேசி : - 0112665584. **திகதி :.....**

பெறுகை அறிவித்தல்

விலைமனுக்களுக்கான அழைப்பு

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் செயற்றிட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்
பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகை குழுத் தலைவர் அழைக்கின்றார்

நீர் வழங்கல் திட்டங்களில் CBO இற்காக பம்பிகள் மற்றும் துணையுறுப்புக்களை வழங்கல்

கீழே விபரிக்கப்பட்டவாறு பம்பிகள் வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெறுகை குழுவானது அழைக்கின்றது.

Name of Contract	Qualifications	Non-Re fundable Fee (Rs)	Bid Security in Rs. (Bank Guarantee)	Place of issuing of document & contact person and bid closing date
1.Supply of Pumps & accessories to CBOs in Districts Contract No.: **DNCWS/ PRO/2021/PUMP/08**	Pump Suppliers	30,000.00	**For Lot A** 600,000.00 **For Lot B** 600,000.00 **For Lot C** 600,000.00	Director (Procurement) Department of National Community Water Supply, No./ 1114, Pannipitiya Road, Thalwathugoda TP – 0112774927 **Bid closing date and time** 24th of December 2021, at 10.00 AM

மேலேயுள்ள செயற்றிட்டத்திற்கான பொதுவான பணிப்புரைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. விண்ணப்பதாரியின் தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றும் மீளளிக்கப்படாத கட்டணத்தின் பணவைப்புத் துண்டும் (பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல், கணக்கிலக்கம்: 0007040440 இலங்கை வங்கி) தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கானது.)
2. நாட்டில் நிலவும் தொற்று சூழ்நிலையில் அமுல் நடாத்தப்படும் பயண கட்டுப்பாடுகள் காரணமாக பணவைப்பு துண்டின் பிரதியொன்றுடன் கோரிக்கை கடிதத்தையும் **dncwsfortender@gmail.com** என்ற மின்னஞ்சலூடாக ஆவணங்களை சேகரிப்பதற்காக தொலைபேசி மூலமாக தயவு செய்து முன்னேற்பாட்டு சந்திப்பொன்றை ஆயத்தம் செய்து 2021 டிசம்பர் 23 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்க இயலும்.
3. ஆர்வமுள்ள விமைனுதாரர்கள் மேலதிக தகவலை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்று கீழேயுள்ள முகவரியில் சாதாரண வேலை நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2021 டிசம்பர் 24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் திணைக்களத்தின் 2 ஆம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பப்படலாம்.
5. அனைத்து விலைமனுக்களும் 2021 டிசம்பர் 24 ஆம் திகதியன்று மு.ப. 10.15 மணிக்கு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அதே முகவரியில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
6. விலைமனுப்பிணையானது பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல.1114, பன்னிப்பிட்டிய வீதி, தளவத்துகொட என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் 2022 ஏப்ரல் 23 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 120 நாட்களுக்கு) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தளவத்துகொட.
10.12.2021.

வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022

காசநோய்த்தடுப்பும் மார்பு நோய்களுக்குமான தேசிய செயற்றிட்டம்

இந்நிறுவனம் மற்றும் இந்நிறுவனத்தின் கீழ் நிருவகிக்கப்படும் பொரள்ள மத்திய மார்புநோய் மருத்துவமனை, கம்பஹா மார்பு நோய் மருத்துவமனை, தேசிய வெலிசற தேசிய காசநோய் ஆய்வுகூடங்களிற்கு பின்வரும் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2021.12.10 முதல் 2022.01.01 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூளையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022' எனத் தெளிவாகக் குறிப்பிட்டுப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
02. உருப்படி ஒன்றிற்கான பதிவுக் கட்டணம் மீளிக்கப்படாத ரூபா 500.00 என்பதுடன் வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இந்நிறுவனத்தின் கணக்காளரிடம் இதனைச் செலுத்தலாம். இந்நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்டு பூரணப்படுத்திய உங்கள் விண்ணப்பங்களை கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன் 2022.01.03 அன்று பி.ப. 3.00 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் மேற்கொள்ளலாம். காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
03. தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பண்டங்களை வழங்கல்

01. அலுவலக எழுதுகருவிகள் (கணனி எழுது கருவிகள் உட்பட)
02. தளபாடங்கள் (.'.பைபர், உருக்கு, பலகை)
03. அனைத்து வகையான சவர்க்காரங்கள், கழுவும் தூள்கள் வாகனங்களைக் கழுவும் திரவங்கள்
04. பிளாஸ்டிக் பாத்திரங்கள் (யோகட் கோப்பைகள்)
05. மின்சார உபகரணங்கள் - குளிரூட்டிகள், வளி சீராக்கிகள், மின் விசிறிகள், டியுப்லைட் மற்றும் உதிரிப்பாகங்கள்
06. ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
07. வாகனங்களிற்கான டயர், டியுப் மற்றும் பெற்றறிகள்
08. அனைத்து வகையான அச்சு வேலைகள் (கையேடுகள், பதாதைகள், போஸ்டர்கள், பெயர்ப்பலகைகள்)
09. கணனி இயந்திரங்கள், நிழற்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், அச்சுப் பொறி கூட்டல் பொறி மற்றும் உதிரிப்பாகங்கள்

சேவை வழங்கல்

01. வளிச்சீராக்கிகள், குளிரூட்டிகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்
02. வாகனங்களைப் புதுப்பித்தல்
03. கணனிகள், அச்சுப் பொறிகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள்
04. ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள்
05. மின்சாரப் புதுப்பித்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்
06. பலகை மற்றும் உருக்குத் தளபாடங்களைப் புதுப்பித்தல் (குஷன் வேலைகள் உட்பட)
07. கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் (C06, C07, C08, C09)
08. மின் பிறப்பாக்கி இயந்திரங்களைப் பராமரித்தல் மற்றும் சேவை செய்தல் (Cummins Diesel 150 KVA)
09. சிற்றுண்டி வகைகள், பானங்கள் மற்றும் சமைத்த உணவுப் பொதிகள்

நிபந்தனைகள்

01. பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்களிற்குப் புறம்பாகவும் விலைமனுக் கோரும் உரிமை இந் நிறுவனத்திற்கு உரித்தாகும்.
02. வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்பவர்கள் தம் தகைமைகளை உறுதிப்படுத்து வதற்காக எழுத்துருவ ஆவணங்களை (பதிவுச் சான்றிதழ் உட்பட) சமர்ப்பித்தல் வேண்டும்.
03. ஒரு வருட காலத்திற்காக வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவதுடன் அது 2022.01.04ஆம் திகதி முதல் ஆரம்பமாகும்.

பணிப்பாளர்,
காசநோய்த்தடுப்பும் மார்பு நோய்களுக்குமான தேசிய செயற்றிட்டம்,
பொது மருத்துவக் கட்டிடத் தொகுதி, (4ஆம் மாடி),
இல. 555/5, எல்விட்டிகல மாவத்தை,
நாரஹேன்பிட்ட.

தொலைபேசி இல. 011 2368274

பெறுகை அறிவித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு சமைக்காத உணவுப் பதார்த்தங்களை வழங்கல்

Q 811/21

- உள்ளக நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலையின் ஊழியர்களின் நுகர்வுக்காக 2022/2023 ஆண்டில், நுகேகொட, தலபத்பிட்டிய இல் அமைந்தள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக உணவுப் பதார்த்தங்களை வழங்கலை உறுதிப்படுத்தக்கூடிய இலங்கை பிரசைகள், வர்த்தக நிறுவனங்கள் உற்பத்தியாளர்கள் (வழங்குநர்கள்) இடமிருந்து பெறுகைக்குழுத் தலைவரினால் 2021.12.30 அன்று மு.ப.10.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அதன் பிரகாரம் குறித்த வழங்குநருக்கு புதிய மரக்கறிகள், புதிய பழ வகைகள், இறைச்சி மற்றும் முட்டை, உலர் உணவுப்பதார்த்தங்கள், பேக்கரி உற்பத்திகள் மற்றும் பொதியிடப்பட்ட உணவுப்பதார்த்தங்கள் (பெக்கற்றுக்கள், டின்கள் மற்றும் போத்தல்கள்) வழங்குவதற்கான இயலுமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் (NCB) முறைமையின் கீழ் இவ்விலைமனுவானது கோரப்படும். இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுவைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத ரூபா 3500.00 இற்கான படிவக்கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் தம் நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் பணிப்பாளருக்கு வழங்கப்படும் எழுத்துருவ விண்ணப்பமொன்றை வழங்கல் பிரிவில் சமர்ப்பித்து 2021.12.11 முதல் 2021.12.29 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப.3.00 வரையான காலப்பகுதியில் விலைமனுப்படிவங்களை வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
- 2022/2023 வருடத்திற்கான அண்ணளவான உணவுப் பதார்த்தங்களின் அளவு மற்றும் தகவல்கள் விண்ணப்பப்படிவங்களுடன் வழங்கப்படும்.
- பின்வரும் தகைமைகளைப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இதற்காக கவனத்திற் கொள்ளப்படுமென்பதுடன், பின்வரும் I முதல் (VIII) வரையான தகவல்கள், உரித்தான விலைமனுக்களுடன் சமர்பிக்கப்படல் வேண்டும்.
  - i. அரச வைத்தியசாலைகள், முப்படைகள் அல்லது சிறைச்சாலைகள் அல்லது 500 இற்கு மேற்பட்ட தொகையினருக்கு தினசரி உணவு வழங்கும் வளாகமொன்றிற்கு உணவு வழங்கல் தொடர்பாக மூன்று வருட கால அனுபவம் மற்றும் திருப்திகரமான செயற்பாடு தொடர்பான அறிக்கை.
  - ii. வியாபாரமொன்றாகப் பதிவு செய்யப்பெற்ற சான்றிதழின்/கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழின் பிரதியொன்று மற்றும் அவ்வாறு பதிவு செய்யப்பட்டதன் பின்னர் மூன்று வருடகாலம் உரித்தான துறையில் ஈடுபட்டமைக்கான அறிக்கை போதியளவு பணிக்குழாம் ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் அலுவலக வசதிகளைக் கொண்டிருத்தல்.
  - iii. குறைந்தபட்சம் மூன்று மாதங்களிற்கு தொடர்ச்சியாக உணவு வழங்களிற்கான, திருப்திகரமான நிதிப்பலம் பெற்றிருத்தல்.
  - iv. நிதி நிலைமை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள விபரங்களிற்கான வரி செலுத்தல் அறிக்கைகள் பொருந்துதல் வேண்டும்.
  - v. போதியளவு தொடர்பாடல் வசதிகள் பெற்றிருத்தல். (தொலைபேசி, கைபேசி, தொலைநகல், மின்னஞ்சல்)
  - vi. போதியளவு களஞ்சிய வசதிகள் (குளிர் அறைகள், பண்டசாலைகள் மற்றும் குளிரூட்டி வசதிகள் போன்றவை)
  - vii. குளிரூட்டப்பட்ட ட்ரக் உட்பட போதியளவு ஏற்றி இரக்கல் வசதிகள் இருத்தல்.
  - viii. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் சமாகம் மெதுர (PCA 03 Form)
- உரியவாறு ஒப்பமிட்டு உத்தியோக இறப்பர் முத்திரையிட்டு விண்ணப்பங்கள் தபாலுறையொன்றில் சேர்த்து, அதன் இடதுபக்க மேல் மூலையில், "2022/2023 ஆண்டிற்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு உணவு வகைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம்" எனக்குறிப்பிட்டு 2021.12.30 அன்று மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புவதற்கு அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு முடியும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
- விண்ணப்பதாரர்கள், விலைமனுப்படிவங்களை வழங்கல் பிரிவில் இலவசமாக பரிசீலனை செய்து கொள்ளலாம்.
- மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல : 011-2778610 - நீடிப்பு 3142 அல்லது 011-2778624

தலைவர்
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
தலபத்பிட்டிய,
நுகேகொட

சூரியசக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி
கருத்திட்ட இராஜாங்க அமைச்சு
இலங்கை அனுசக்தி சபை

2022 ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

இலங்கை அனுசக்தி சபைக்காக 2022 ஆம் ஆண்டிற்குள் பொருட்களை வழங்குதல் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக பதிவு செய்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து 2022.01.31 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வழங்க வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய விபரங்களை தெரிந்துகொள்வதற்கு மற்றும் வழங்குநர்களைப் பதிவுசெய்து கொள்வதற்கு மாதிரி விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்வதற்காக எமது உத்தியோகபூர்வ இணையதளமான www.aeb.gov.lk (English ⟶ Procurement supplier ⟶ Registration 2022) இற்கு பிரவேசியுங்கள்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை அனுசக்தி சபை
60/460, பேஸ்லைன் வீதி,
ஒருகொடவத்த, வெல்லம்பிட்டி
தொலைபேசி : 0112533427
பெக்ஸ் : 0112533448

ஆசிரியர் தேவை

மாகொல முஸ்லிம் அநாதை நிலையம் – மாகொல

கற்பித்தலில் ஆர்வமும் ஈடுபாடும் உள்ள தியாக மனப்பான்மை கொண்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்வரும் பாடங்கள் கற்பிப்பதற்கு பட்டதாரி/பயிற்றப்பட்ட/ ஓய்வு பெற்ற (60 வயதிற்குட்பட்ட) ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

பாடங்கள்:

1. ஆங்கிலம்
2. சிங்களம்
3. விஞ்ஞானம்
4. வரலாறு
5. தகவல் தொழில் நுட்பம்

(ஆரம்பப் பிரிவு முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை)

கவர்ச்சிகரமான சம்பளம், இலவச உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் தங்களின் சுய விபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

The Secretary,
Makola Muslim Orphanage,
No. 142, 6th Floor, "YATHAMA BUILDING",
Galle Road, Colombo -03.

இலங்கை வங்கி

ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டுதல் (REOI)

COBIT 2019 தகவற் தொழில்நுட்ப முகாமைத்துவக் கட்டமைப்பினைச் செயற்படுத்துவது தொடர்பான ஆலோசனைச் சேவை

ஆர்வத்தை வெளிப்படுத்தல் இல. P/PROC/2021/243

இலங்கையின் முதற்தர வங்கியான இலங்கை வங்கியானது அதன் COBIT 2019 தகவற் தொழில்நுட்ப முகாமைத்துவக் கட்டமைப்பைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்குத் தகவற் தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகளை வழங்கும் ஆலோசனை நிறுவனம் / தனி ஆலோசகரிடமருந்து சேவையினைப் பெற விரும்புகின்றது.

இது தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் தகைமைகளை உடையவர்களாகக் காணப்பட வேண்டும். இத் தகவல்களை வழங்கத் தவறுபவர்களின் முன்மொழிதல்களானவை நிராகரிக்கப்படும்.

1. ஏலவிலை கூறுபவர் குறைந்தபட்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஒன்றையாவது கொண்டிருக்க வேண்டும்
   - i. COBIT மற்றும்
   - ii. கீழ்க்காண்பவற்றில் ஏதாவதொன்று CISA, CISM, CRISC, CGEIT, ITIL

   (மேலும், திட்ட முகாமைத்துவ தொழில்முறைச் சான்றிதழ் மற்றும் முதுமாணிப் பட்டம் போன்றவை மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.)
2. ஏலவிலை கூறுபவர் கடந்த 10 ஆண்டுகளாக தகவற் தொழில்நுட்ப முகாமைத்துவ ஆலோசகராகப் பணிபுரிந்த அனுபவத்தினை குறிப்பாக தகவற் தொழில்நுட்பம் பிரதான வியாபாரமாக அன்றி துணை / ஆதரவுச் சேவையாகக் காணப்படும் நிறுவனத்திற்கு ஆலோசனை சேவையை வழங்கிய அனுபவத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.
3. ஏலவிலை கூறுபவர் கடந்த 10 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 3 COBIT செயற்பாடுகளைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டியதுடன் அவற்றுள் குறைந்தபட்சம் இரண்டினை வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் செயற்படுத்தியிருக்க வேண்டும்.
4. ஏலவிலை கூறுபவர் COBIT செயற்பாடுகளுக்குரிய உத்திகள், ஒத்துழைப்பு மற்றும் திட்ட முகாமைத்துவங்களை உள்ளடக்கிய ஆரம்பத்திலிருந்து இறுதிவரையான ஆலோசனை சேவைகளை வழங்கியிருக்க வேண்டும் அல்லது தற்போதும் வழங்கிக்கொண்டிருக்க வேண்டும்.

ஆங்கில மொழியிலான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான படிவத்தினை 2021.12.30ஆம் திகதி 1600 மணிக்கு முதல் பிரதான முகாமையாளரின் procurement@boc.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

நகலுடனான முத்திரையிட்ட ஆர்வத்தை வெளிப்படுத்தும் படிவங்களை 2021.12.31ஆம் திகதி 1000 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்" இலங்கை வங்கியின் தரைத் தளத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும்.

ஏலவிலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்காமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

கடித உறையில் "ஆர்வத்தினை வெளிப்படுத்தக் கோரல் இல. P/PROC/2021/243 என்றும் COBIT 2019 தகவற் தொழில்நுட்ப முகாமைத்துவக் கட்டமைப்பினைச் செயற்படுத்துவது தொடர்பான ஆலோசனைச் சேவையை வழங்குவதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்தல்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

இறுதி முடிவானது வங்கியினாலேயே மேற்கொள்ளப்படும் என்பதோடு இது தொடர்பான முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எந்தவிதமான காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

எந்த விதத்திலேனும் ஆதரவு திரட்டுவதானது தகுதி நீக்கத்திற்குக் காரணமாக அமையும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம்,
இலங்கை வங்கி தலைமையலுவலகக் கட்டடம்,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.

பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டம் கடுவெல பிரதேச செயலகப் பிரிவு 8-D/170 ஜயவடனகம, பத்தரமுல்ல என்ற முகவரியில் வசிக்கும் பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள **நூர்மெனால்கான்** ஆகிய நான் இன்று முதல் **நூர்மினால் லியா.'.ப்டீன்** என்று அழைக்கப்படுவேன் என இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத் தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

நூர்மினால் லியா.'.ப்டீன்

பெயர் மாற்றம்

உடங்கா 01, UD 3/1 அம்பாறை வீதி, சம்மாந்துறை விலாசத்தில் வதியும் எனது பெயர் **முகம்மது ராசிக் முகம்மது ராயிதுல் அத்தா** என பிறப்பு அத்தாட்சியில் பதியப்பட்டுள்ளது. (அ. அ. இல. 913432355V) எனது பெயரை **முகம்மது ராசிக் முகம்மது ராயிதுல் அத்தார்** என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

முகம்மது ராசிக் முகம்மது ராயிதுல் அத்தார்

வாகனங்கள் விற்பனைக்கு

வாகன இல.	வகை	மாதிரி	வருடம்
கார்			
017 -5XXX	DAIHATSU	CHARADE	1990
CAC -5XXX	HONDA	FIT GP5	2014
ஜீப்			
CAG -7XXX	HONDA	VEZEL RU3	2015
பஸ்			
ND -1XXX	LANKA ASHOK LEYLAND	MITR	2017
முச்சக்கர வண்டிகள்			
JX -7XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2005
QL -4XXX	BAJAJ	AUTO AR4S	2007
YN -0XXX	BAJAJ	RE205	2011
YR -8XXX	BAJAJ	RE 205	2011

வாகன பரிசீலித்தல்களுக்கு:
மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2021 டிசம்பர் 10ஆம், 13ஆம், 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2021 டிசம்பர் 15ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

www.skillsads.com

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இ லக்க காணி சுவீகரிக்கும் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்பு சட்டத்தின் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இ ல : DSM/RT/LND/1/3/83
காணி அமைச்சின் குறியீட்டு இ ல : 4-3/7/2012/ඊවිඩබ්/65

இ ங்கு கீழ் குறிப்பிடப்படும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை மாத்தளை - இ லுக்கும்புர - பல்லேகம வீதி விசாலமாக்கப் படுவதற்கான அரசாங்கம் சுவீகரிக்க ஏற்பாடுளைச் செய்கின்றது. மேலதிக விபரங்கள் தொடர்பாக இ ல 2235/23 கொண்ட 2021.07.06 திகதி இ லங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட கசாட் பத்திரிகையைப் பார்க்கவும்.

மாவட்டம்	: மாத்தளை
பிரதேச செயலாளர் பிரிவு	: இ றத்தோட்டை
கிராம சேவை அலுவலர் பிரிவு	: இ றத்தோட்டை
ஊர் பெயர்	: இ றத்தோட்டை
காணியின் பெயர்	: வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளபடி
அளவு	: 084199 ஹெக்டயார்
துண்டு இலக்கம்	: 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60
திட்டமிடல் இ லக்கம்	: ஆரம்ப வரைபட இல மா. 1757
முகவரி	: பிரதேசச் செயலகம், இறத்தோட்டை.

திகதி : 2021/11/29

பிரதேச செயலாளர்
இறத்தோட்டை

மலைச்சாரலி

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் 2500 ரூபாவாக அதிகரிக்க வேண்டும்'

வடிவேல் சுரேஷ் எம்.பி

காலத்தின் சூழ்நிலைக்கேற்ப மக்களின் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 2,500 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் கருத்து தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (8) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

சம்பள நிர்ணய சபையின் மூலம் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் அடிப்படை வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற வர்த்தமானி அறிக்கை வெளியிடப்பட்டு 24 மணித்தியாலயத்திற்குள்,

மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் முதலாளிமார் சம்மேளனத் தினால் வர்த்தமானி அறிக்கைக்கு எதிராக, வழக்கு தொடரப்பட்டது.

இதற்கிடையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் பெருந்தோட்ட நிறுவன முகாமையாளர்களுக்கும் இடையே பலதரப்பட்ட தொழில் பிணக்குகளும் போராட்டங்களும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

விமான வேகத்தில் செல்லும் வாழ்க்கை செலவுக்கு மத்தியில் ஆயிரம் ரூபாய் அடிப்படை வேதனம் என்ற கோரிக்கை ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இருந்த வாழ்க்கை செலவுக்கு போதுமானதாக இருந்தமையினால் முன்மொழியப்பட்டது. தற்போதைய வாழ்க்கை செலவுக்கு 2,500 ரூபாய் அதிகரிக்கப்பட வேண்டும். மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியிலும் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப மக்களின் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு தூர நோக்குடன் செயற்பட வேண்டும். அதன் காரணமாகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 2500 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்திருந்தேன். விமர்சனங்கள் ஆயிரம் எழலாம். ஆனால் என் தொப்புள் கொடி உறவுகளுக்காக பாராளுமன்றம் முதல் பாதையோரம் வரை என் குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும் என கருத்து தெரிவித்தார்.

சுற்றுலா நகரமாக மாறும் தலவாக்கலை

நூறு மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள்

ஹற்றன் விசேட நிருபர்

நூறு நகரங்கள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் தலவாக்கலை நகரை சுற்றுலா நகரமாக மாற்றுவதற்காக சுமார் நூறு மில்லியன் ரூபாவை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பெற்றுக் கொடுத்துள்ளதாக தலவாக்கலை லிந்துலை நகரசபையின் தலைவர் லெச்சுமணன் பாரதிதாசன் தெரிவித்தார்.

இது குறித்து தலைவர் பாரதிதாசன் கருத்து தெரிவிக்கையில்,

இந்த அபிவிருத்தித்திட்டம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஸ்வரன் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தலவாக்கலை லிந்துலை பகுதியில் இரண்டு கிலோமீற்றர் தூரம் நடை பாதையும் பாரம்பரிய ஆரோக்கியமான உணவுகளை வழங்கும் சாலையோர உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

உள்ளூர் விவசாயிகளின் நஞ்சற்ற உணவு பொருட்கள்,உள்ளிட்ட பல பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.. பொழுது போக்கு அம்சங்களும் மேல் கொத்மலை ஆற்றின் நகரபகுதியில் படகுச் சேவைகளும் இத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்திட்டத்தினால் பல குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதுடன் இப்பிரதேச மக்களின் பொருளாதார பிரச்சினைகளுக்கும் தீர்வுகிடைக்கும் என பாரதிதாசன் தெரிவித்தார்.

இராகலையில் நேற்று எரிவாயு அடுப்பு வெடிப்பு

இராகலையில் சமையல் எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு முதலாவது சம்பவம் நேற்றுக் காலை இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்திரிதன்ன கிராமத்தில் பதிவாகியுள்ளதாக இராகலை பொலிசார் தெரிவித்தனர்.

வீட்டில் பெண் ஒருவர் சமையலுக்கு தயாராகி அடுப்பை இயக்கிய வேளையில் திடீரென அடுப்பு வெடித்து தீ பற்றியதாக பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது எரிவாயு சிலிண்டரில் நுரை தோன்றியதாகவும் தெரிவித்த பெண், அடுப்பு வெடிப்பில் ஏற்பட்ட தீ சமையல் அறையின் சிவிலிங்வரை உயரத்திற்கு பரவியதாகவும் அவர் தெரிவித்தார். அதேநேரத்தில் வெடிப்பு சம்பவத்தையடுத்து கூச்சலிட்டதாகவும் பின் அயலவர்கள் ஓடிவந்து தீப்பரவாமல் கட்டுப்படுத்தியதாகவும், கேஸ் அடைப்பின் ரெகுலேட்டர் மற்றும்இணைப்பு குழாய் ஆகியவை எரிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த இராகலை பொலிசார் நிலைமையை பார்வையிட்டு விசாரணைகளை செய்து வருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

மொரகொல்ல பாடசாலைக்கான

பாதையை நிர்மாணித்து கொடுத்த செந்தில் தொண்டமான்

மழை காலத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டு மாணவர்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்ட மொரகொல்ல பாடசாலைக்கான பாதையை இ.தொ.கா உபத் தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் புனரமைத்து கொடுத்துள்ளார்.

மாணவர்களே நாட்டின் நாளைய சொத்துக்கள். மாணவர்களை பாதுகாத்து அவர்களை வழிநடத்த வேண்டியது நமது பொறுப்பாகும்.

மொரகொல்ல பாடசாலைக்கான பாதை மழை காலப்பகுதியில் பாதிக்கப்பட்டு வழுக்கும் காரணத்தினால் மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து செல்ல முடியாத சூழல் தொடர்ந்து காணப்பட்டது.

இது குறித்து அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் செந்தில் தொண்டமானிடம் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் இப்பாதை புனரமைக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உணவுக்காக அலையும் குரங்குகளால் பலாங்கொடையில் மக்கள் அசௌகரியம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை பகுதியில் உணவுக்காக அலையும் குரங்குகளால் மக்கள் அசௌகரித்துக்குள்ளாகின்றனர். இம்புல்பே, அலுத்நுவர, பெலிஹுல்ஓய, பம்பஹின்ன, தென்னதியவின்ன, வேலிஓய, கல்தோட்ட உட்பட பல பிரதேசங்களிலும் மரக்கறி, பழவகை, சேனைப்பயிர், வாழைத்தோட்டங்கள் மற்றும் ஏனைய பயிர் நிலங்களை தேடி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

உணவுக்காக வருகை தரும் குரங்குகள் பயிர்களையும் நாசம் செய்வது மட்டுமன்றி இவற்றின் செயற்பாடுகள் மக்களின் அன்றாட நடவடிக்கைகளை பாதிப்படைய செய்வதுடன் வீடுகளை ஆக்கிரமித்து உணவுப் பொருட்கள், உபகரணங்களுக்கும் சேதத்தை விளைவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தோட்டை பிரதேச சபையின் 2022 பட்ஜட் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை மாவட்டம் இரத்தோட்டை பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 24 மேலதிக வாக்குகளால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரத்தோட்டை பிரதேச சபை தலைவர் யு.ஜி.பி. குமார சேனாவினால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று (9) சபையில் முன்வைக்கப்பட்டது

இதன்போது வரவு செலவுத் திட்டத்திற்கு ஜேவிபி கட்சி உறுப்பினர் ஒருவரை தவிர அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் 24 உறுப்பினர்கள் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால் வரவு செலவுத்திட்டம் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டன. அடுத்த வருடத்திற்கான மொத்த வருமானமாக 94,386,180.00 ரூபாவாகவும் மொத்த செலவு 94,385,480.00 ரூபாவாகும் என சபை தலைவரால் சபையில் இதன்போது அறிவிக்கப்பட்டது.

இரத்தினபுரியில் எலிக்காய்ச்சல் அதிகரிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த 11 மாதங்களில் எலிக்காய்ச்சலுக்குள்ளாகி 19 பேர் பலியாகியுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட தொற்று நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சேற்று நிலங்கள் மற்றும் அவற்றை அண்மித்த இடங்களில் தொழில் புரிவோர் எலிக்காய்ச்சலுக்கான தடுப்பு மருந்துகளை உட்கொள்ளாமல் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையினால் இந்நிலைமை தீவிரமடைந்துள்ளது.

இவர்களில் குருவிட்ட பொதுச் சுகாதாரப் பிரிவில் 168 பேரும் பெல்மதுளை பொதுச் சுகாதார வைத்திய பிரிவில் 131 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சேற்று நிலங்கள் சார்ந்த இடங்களில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் நடமாடுபவர்களே எலிக்காய்ச்சலால் அதிகமாக பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே பதவியேற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு பல்லேபொல பிரதேச சபையினால் ஆளுநரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதேச சபை தலைவர் ஜகத் திஸாநாயக்க மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களால் நினைவுச் சின்னம் ஒன்றை ஆளுநருக்கு வழங்குவதை படத்தில் காணலாம்.

படம் மாத்தளை சுழற்சி நிருபர்

வயோதிப கொடுப்பனவுகள்;

பதுளை மாவட்ட அரச செயலகங்களில் அசமந்த போக்கு

அரவிந்தகுமார் எம்.பி குற்றச்சாட்டு

வயோதிபர்களுக்கு அரசினால் வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுகள் விடயத்தில், பதுளை மாவட்ட அரச செயலகங்கள் செயற்படும் விதம் திருப்தியைத் தரவில்லை என்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தி, 70 வயதைத் தாண்டியவர்கள் அனைவருக்கும், மாதாந்த வயோதிபத் கொடுப்பனவுகளை வழங்க ஆவன செய்யவும் என அவர் தெரிவித்துள்ளார்.

அ. அரவிந்தகுமார் எம்.பியால், இலங்கை சமூக சேவை திணைக்களத்தின் கீழ் இயங்கும் தேசிய வயோதிப செயலகப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

லுணுகலை பிரதேச செயலகம் உள்ளிட்ட பதுளை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வரும் மாதாந்த வயோதிபக் கொடுப்பனவுகள், புதிதாக வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

வயோதிப கொடுப்பனவுகள் வழங்கப்படும் பட்டியலில் ஒருவர் இறந்தால் மட்டுமே, புதிய ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டு, அவருக்கு மாதாந்தக் கொடுப்பனவு புதிதாக வழங்கப்படுகிறது. அதைவிடுத்து புதியவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளன. இது விடயமாக பிரதேச செயலாளர்களிடம் வினவிய போது,

வயோதிபர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. இதனால் 70 வயதுகளைத் தாண்டிய புதியவர்களை இணைத்துக்கொள்ள முடியாதுள்ளது. ஆகையினால், இதனை நிறுத்தியுள்ளோம் என்று பதில் கிடைக்கின்றது.

70 வயதுகளைத் தாண்டியவர்களுக்கு வழங்கப்படும் வயோதிபச் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருப்பதால், வயோதிபர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். ஆகவே, இது விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தி, 70 வயதைத் தாண்டிய அனைவருக்கும் மாதாந்த வயோதிபக் கொடுப்பனவுகளை கிரமமாக வழங்குவதுடன், அக்கொடுப்பனவுகளை அதிகரிக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளியை தாக்கிய பெண் உதவி முகாமையாளர்

சட்ட நடவடிக்கைக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் பணிப்பு

வலப்பனை எனிக் கீழ் பிரிவில் தோட்டத்தில் பெண் உதவி முகாமையாளர், தோட்டத் தொழிலாளி ஒருவரை தாக்கியுள்ளார்.தாக்குதலுக்குள்ளான தொழிலாளி உடபுசல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளி ஒருவருக்கும் தோட்ட உதவி பெண் முகாமையாளர் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையையடுத்து இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து இராஜாங்க அமைச்சர் குறித்த விடயத்தை விசாரணை செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உடபுசல்லாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிடம் அமைச்சர் கேட்டுக் கொண்டார். இதனையடுத்து எனிக் தோட்ட பெண் தோட்ட உதவி முகாமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

'கெண்டியன் கிங்டம்' வரலாற்று திரைப்படத்தின் அறிமுகம்

அக்குறணை குறூப் நிருபர்

கலாநிதி லொனா தேவராஜனின் 'கெண்டியன் கிங்டம்' என்ற வரலாற்று ஆய்வு நூலை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படம் இன்று (10) கண்டியில் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. இதனையடுத்து எதிர்காலத்தில் 25 திரையரங்குகளில் திரையிடப்பட உள்ளது.

'பவதரன' என்ற இப்படத்தில் இலங்கையின் முன்னணி நடிகை நடிகைகளான மாலினி பொன்சேக்கா , பிரியந்த மெண்டிஸ், மகேந்திர பெரேரா, ரொசான் பிலபிட்டிய போன்ற பிரபலங்கள் உட்பட இன்னும் பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்துள்ளனர்.

கண்டி கே.சி.சி.நவீன திரையரங்கில் இது திரையிடப்படவுள்ளது. கி.கி.1747 1760 வரையான காலப்பகுதி சம்வங்கள் இதில் இடம் பெறுகின்றன.

மீகம்மன சிறுவர் இல்லத்தில் தப்பிச்சென்ற ஐவரில் மூவர் கண்டுபிடிப்பு

அக்குறணை குறூப் நிருபர்

வத்துகாமம் மீகம்மன சிறுவர்கள் காப்பகத்திலிருந்து தப்பிச்சென்ற ஐவரில் மூவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தப்பிச் சென்றவர்களில் ஒருவர் தவுளகளை பொலிஸ் பிரிவில் உறவினர் வீடு ஒன்றில் இருந்தும், மற்றொருவர், நாவலப்பிட்டியவில் உள்ள வீடொன்றில் இருந்தும் சிறுமி ஒருவர் வத்துகாமத்தில் இருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பெலிஸார் தெரிவித்தனர்.

தவுளகளை கண்டு பிடிக்கப்பட்ட சிறுமியை வேறொரு சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் ஒப்படைக்கும்படி கண்டி மாவட்ட நீதவான் உத்தரவிட்டதுடன் மற்ற இருவரும் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட உள்ளனர். இரங்களை மற்றும் உடபுசல்லாவ பகுதிகளைச் சேர்ந்த சிறுமிகளை தேடும் பணியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கடந்த 6ம் திகதி இந்த காப்பகத்திற்கு அண்மையில் உள்ள பாடசாலைக்குச் சென்ற சமயம் தப்பிச்சென்றதாக வத்துகாம் பொலிசில் முறைப்பாடு செய்யபட்டிருந்தது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 டிசம்பர் 10
வெள்ளிக்கிழமை

நிரந்தர அரசியல் தீர்வு வரும் வரைக்கும் கிழக்கு தீமோர் கொள்கைகள் அவசியம்

ஓமந்தை விஷேட நிருபர்

தமிழர்களை பாதுகாப்பதற்கு கிழக்குத் தீமோரைப் போன்று சில பொறிமுறைகளை அமைக்குமாறு, ஐ.நா.விடம் கோரிக்கை விடுப்பதாக காணாமல்போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த 1757 வது நாளாக தொடர் போராட்டத்தை மேற்கொள்ளும் இவர்கள்,

நேற்றும் (09) ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவாறு, இதைத் தெரிவித்தனர். இதுபற்றி, அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

டிசம்பர் பத்தாம் திகதி, மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. 1948 இல், மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஏற்றுக்கொண்டது. வாழ்வதற்கான உரிமை, கருத்துச்சுதந்திரம், சித்திரவதையிலிருந்து விடுதலை, கல்வி உட்பட சகல உரிமைகளும் சகலருக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான பாரிய அட்டூழியங்களை சர்வதேச சமூகம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழர் தாயகமான, வடக்கு, கிழக்கிற்கு நிரந்தரமான அரசியல் தீர்வு அவசியம். இந்தத் தீர்வு வரும் வரையில், கிழக்குத் தீமோரைப் போன்று சில பொறிமுறைகளை அமைக்குமாறு ஐ.நா. விடம் கோரிக்கை விடுக்கிறோம்.

இதேவேளை, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கலிபோர்னியாவில் பரமேஸ்வரி கனகசுந்தரம் உயிரிழந்தார்.

அவரது நான்காண்டு நிறைவை முன்னிட்டு, காணாமலாக்கப்பட்டோரின்ஒவ்வொருகுடும்பத்துக்கும் உலருணவுப்பொதி மற்றும் மதிய உணவுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியை, அவரது மகன் வழங்கியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தேசிய உடற்தகுதி நிகழ்ச்சித் திட்டம் அரம்பம்

மாங்குளம் குறூப் நிருபர்

"ஆரோக்கியமான நாளை" எனும் தொனிப் பொருளில் இருநாட்களைக் கொண்ட தேசிய உடற்தகுதி நிகழ்ச்சித்திட்டம் நேற்று (08) மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில், இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் கலந்து கொண்டு, இந்த தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இங்கு கருத்துத்தெரிவித்த அவர்,

இப்பயிற்சிப்பட்டறை, மன வலிமையை அதிகரிக்கச் செய்யும். மேலும், தற்கொலைகளைத் தடுப்பதற்கும் இப்பயிற்சி உதவும்.

இதை விட தொற்றாநோய்களை இல்லாதொழிக்கும் நோக்குடன், இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றாநோய்களுக்கு உணவுப்பழக்க வழக்கங்கள், போதிய உடற்பயிற்சியின்மையே அடிப்படைக் காரணங்களாகின்றன. சிறந்த மன வலிமையின்மையால் தற்கொலைகள் அதிகரித்துச் செல்கின்றன. எனவே இங்கு தாங்கள் பெற்றுக்கொண்ட அறிவினை இத்துடன் முடித்துக் கொள்ளாமல், அதனை பரவசெய்வதன் மூலமாக சிறந்த இளைஞர் சமூகத்தை கட்டியெழுப்பமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

வளவாளர்களாக யாழ், பல்கலைக்கழகத்தின் விளையாட்டு விஞ்ஞானப்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி. கே.கேதீஸ்வரன் மற்றும் கலாநிதி சபானந்த் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலாநிதி.கே.கேதீஸ்வரன், மனநலம் மற்றும் மனத் தளர்ச்சியை மேம்படுத்தவதற்கான அடிப்படை உடற்பயிற்சிகளை செயன்முறையாக விளக்கமளித்தார்.

காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு

வவுனியா விஷேட நிருபர்

வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு ஒன்று இடம்பெற்றது.

வவுனியா, மில் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இரு தினங்கள் பால்நிலை சமத்துவம் தொடர்பில், இந்த செயலமர்வு இடம் பெற்றிருந்தது.

நீதிச்சேவை அமைச்சின் கீழ் உள்ள மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில், ஆசிய வங்கியின் நிதி உதவியில் இச்செயலமர்வு இடம் பெற்றது.

இதன்போது மத்தியஸ்தர்கள் சபையின் சட்ட ஆலோசகர் சிரேஸ்ட சட்டத்தரணி திருநாவுக்கரசு, மத்தியஸ்தர் சபைகள் பயிற்சிவிப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் வளவாளராக காலந்து கொண்டனர்.

மத்தியஸ்தர் சபையில் ஆண், பெண் சமத்துவம் பேணல், அதனைக் கையாளல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மத்தியஸ்தர் சபை பொறுப்பு உத்தியோகத்தர் விமல் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில், வவுனியா மாவட்ட உதவிச் செயலாளர் திருமதி மு.சபர்ஜா, வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபை தவிசாளர், உப தவிசாளர், மத்தியஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயனாளிக் குடும்பத்துக்கு புதிய வீடு

சாவகச்சேரி விஷேட நிருபர்

"கிராமத்திற்கு ஓர் வீடு" திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் மத்தி ஜே/312 கிராம அலுவலர் பிரிவில், தெரிவு செய்யப்பட்ட குடும்பத்துக்கு வீடு வழங்கப்படவுள்ளது.

இதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு, அண்மையில் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் சிபாரிசுக்கு அமைய, இந்த வீட்டுக்கான அடிக்கல்லை சாவகச்சேரி பிரதேச சபை சுதந்திரக்கட்சி உறுப்பினர் தி.தங்கவேலு நட்டு வைத்தார். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஆறு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இந்த வீடு நிர்மாணிக்கப்படும்.

யாழ், மாநகர சபை பட்ஜட்டுக்கு சகல உறுப்பினரும் ஆதரவளிப்பர்

யாழ். விஷேட நிருபர்

யாழ் மாநகர சபையின் பட்ஜட், உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக, யாழ் மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ் நாயன்மார்கட்டு குளப்புனரமைப்பு பணிகளை, நேற்று ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். இங்கு அவர் தெரிவித்ததாவது,

வரவு செலவுத் திட்டத்தை தயாரித்த போது அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்துரையாடப்பட்டது. உறுப்பினர்களது கருத்துக்களும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன. எனவே, இந்த வரவு செலவுத்திட்டத்தை அவர்களே தோற்கடிப்பார்களென, நான் நினைக்கவில்லை.

யாழ் மாநகர சபையில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைமைகளிடமும் "மாநகர சபையில் முன்வைக்கப்படுகின்ற வரவு செலவு திட்டத்தை ஆதரிக்க வேண்டும்" என நான் பகிரங்கமாகவும், அன்பாகவும் கோரிக்கை விடுக்கின்றேன்.

மாநகர சபை வரவு செலவுத் திட்டத்தை, தோற்கடிக்கும் நோக்கில், கட்சித்தலைவர்கள் செயற்படமாட்டார்கள் என, தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனர்த்த முகாமைத்துவ செயன்முறை பயிற்சி செயலமர்வு

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனர்த்த காலங்களில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை குறைக்கும் முகமாக, சர்வோதயா நிறுவனத்தினால் யு எஸ் எயிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில், பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஒருங்கிணைப்பில் இரு வருட காலத்துக்கு இது நடாத்தப்படவுள்ளது. இதன் முதல்நாள் செயலமர்வு அண்மையில் (07) ஆரம்பமானது. முதல்நாளில், அனர்த்த காலங்களில் கிராம மட்டங்களில் பணிபுரியும் வகையில் கிராம மட்ட அமைப்புக்களின், அங்கத்தவர்களுக்கு கோட்பாடு ரீதியாக விளக்கமளிக்கப்பட்டது. அனர்த்த களத்தில், பயன்படுத்தும் வகையில் பிரயோக ரீதியிலான செயன்முறை பயிற்சிகள் இங்கு வழங்கப்பட்டன.

வளவாளராக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப்பாளர் இ.லிங்கேஸ்வரகுமார் கலந்து கொண்டார்.

கொடிகாமம் பிரதேசத்தில் தெருவிளக்குகள் பொருத்தல்

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸின் நிதிஒதுக்கீட்டில் தெருவிளக்குகள் பொருத்தப்பட்டன.

கொடிகாமம் மத்தி பிரதேசத்தில் உள்ள சில வீதிகளில், இந்த தெருவிளக்குகள் பொருத்தப்பட்டன. பகல் வேளைகளிலும் மின்விளக்கை ஒளிரவிட்டு மின்சாரத்தை விரயம் செய்யாது, பாதுகாக்குமாறும் உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

விளையாடிய வேளையில் தவறி விழுந்த சிறுவன் உயிரிழப்பு

யாழ்.விஷேட நிருபர்

சகோதரனுடன் விளையாடிக் கொண்டிருந்த வேளையில், தவறி விழுந்த சிறுவன் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை தொல்புரம் பகுதியை சேர்ந்த ஜெயச்சந்திரன் தஜிதரன் (வயது 11) எனும் சிறுவனே உயிரிழந்தவராவார். வீட்டின்மேல் தளத்தில், சகோதரனுடன் விளையாடிக்கொண்டிருந்த வேளையிலே சிறுவன் தவறி விழுந்துள்ளான்.

அதனையடுத்து மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு,அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிறுவன் மாற்றப்பட்ட நிலையில், உயிரிழந்தான்.

இச்சம்பவம் தொடர்பில், வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அளம்பில் கடற்கரையில் உயிரிழந்த டொல்பின்கள் கரை ஒதுங்கல்!

புதுக்குடியிருப்பு விஷேட நிருபர்

முல்லைத்தீவு அளம்பில் கடற்கரை பகுதியில் உயிரிழந்த நிலையில் டொல்பின்கள் கரைஒதுங்கியுள்ளன.

நேற்று (09) காலை மீனவர்கள் தொழில் நடவடிக்கைக்கு சென்றபோது இவற்றை அவதானித்ததாக தெரிவித்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில், செம்மலை, கொக்குளாய் கடற்கரை பகுதியில் கடந்த காலங்களிலும் உயிருடன் டொல்பின் வகை கடல் வாழ் உயிரினங்கள் கரை ஒதுங்கியமை குறிப்பிடத்தக்கது.

குறித்த டொல்பின்கள் உயிரிழப்பு குறித்து வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் விசாரணைகளை மேற்கொண்டு அடக்கம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று நீர்வேலியில் சமயச் சொற்பொழிவு

யாழ். நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் வாரந்தோறும் நடைபெற்றுவரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில், இன்று (வெள்ளிக்கிழமை) 'வேலை வணங்குவது நமக்கு வேலை' என்ற விடயப் பொருளில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இளம்சைவப் புலவர் க.கைலைநாதன் இச்சொற்பொழிவை ஆற்றுகிறார்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், இன்று மாலை 5.00 மணிக்கு ஆலய சண்முகவிலாச மண்டபத்தில் மேற்படி இச்சொற்பொழிவு இடம்பெறுகிறது.

மருத்துவ மாணவன் கொலை, முன்கூட்டி தகவல் வெளியானமை பற்றி விசாரணை

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியானது பற்றி, அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பீட்டர் போல் கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றன், வாடகைக்கு தங்கியிருந்த வீட்டில், தூக்கில் தொங்கிய நிலையில் (17) சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை, யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பீட்டர் போல் முன்னிலையில் கடந்த 13. 10. 2020 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இங்கு,சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா மரணமடைந்த மாணவன் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்தார். கொலை தொடர்பில், முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் சந்தேகம் இருப்பதாகவும் ஒரு புலன் விசாரணையை மேற்கொள்ளுமாறும் மன்றில் அவர் கோரினார்.

இதையடுத்து, முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் தகவல்களை வழங்குமாறு நீதவான் பணிப்புரை விடுத்திருந்தார். மீண்டும் விசாரணை நேற்று புதன்கிழமை(08) எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நிலையில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான தகவல்கள் பதியப்பட்டு உள்ளதாகவும் தொலைபேசி இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனவும் அதனை துரிதமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து தொலைபேசியின் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையை பெறுவதற்கு இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அறிவிப்பதாகவும், முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் நீதவான், பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கிழக்கின் குரல்

பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லொதொழிக்க ஒன்றிணைவோம்

மட்டக்களப்பில் விழிப்புணர்வு நடைபவனி

கல்லடி குறூப், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்

பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில், 16 நாள் செயல்வாத வாரத்தினை முன்னிட்டு, மட்டக்களப்பில் பாரிய விழிப்புணர்வு நடைபவனியொன்று வியாழக்கிழமை (09) முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் வலையமைப்பினால் இவ் விழிப்புணர்வு நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டிருந்து. இந்த நடைபவனியானது கல்லடி பாலத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதி வழியாக அரசடி சந்தியை அடைந்து, அங்கிருந்து மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பிடத்தை அடைந்தது.

இதன்போது நடைபவனியில் கலந்துகொண்டிருந்தவர்கள் தற்போதைய விலையேற்றத்தை பிரதிபலிக்கும் முகமாக தேங்காய், மரக்கறி, அரிசி மற்றும் பசும் பால் போன்றவற்றினை தாங்கிச் சென்றிருந்தனர்.

அத்தோடு வன்முறைகளற்ற ஒரு கௌரவமான சமூகத்தை உருவாக்க ஒன்றிணைவோம், நீதி கோரும் சகோதரிகளாக நாம், ஒன்றிணைவோம், வன்முறைகளற்ற வீடும் நாடும் வேண்டும், அரசியல் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரம் வேண்டாம், பசியும் பட்டினியும் வன்முறையே! போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் தாங்கியவாறு நடைபவனியில் ஈடுபட்டிருந்தனர்.

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள் நாட்டின் பாரிய பிரச்சினையாகவுள்ளதுடன், இவ் வன்முறைகள் தொற்றுநோய்ச் சூழலினால் மறைக்கப்படுகின்றன.

இலங்கையில் ஐந்துக்கு ஒரு பெண் என்ற வகையில் தினமும் உடல் ரீதியான, பாலியல் வன்முறைகளுக்குள்ளாகின்றனர் என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் கூறியுள்ளது. இத்துடன் தற்போது பெண்களுக்கு பாரபட்சமாகவுள்ள சட்டங்களான பொதுத் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம் மற்றும் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் ஆகியன உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்ற கோஷங்கள் எழுதப்பட்ட, பதாகைகளை ஏந்தியவாறு நடைபவனியில் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் செயற்றிட்டம்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் செயற்றிட்டத்தின் ஒன்றாக சித்தாண்டி வந்தாறுமூலை பிரதேசங்களை கருத்தில் கொண்டு மட்/வந்தாறுமூலை விஸ்ணு மகா வித்தியாலயம், மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் க.பொ.த உயர் தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் 2022இல் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு, இலவசமாக விசேட மேலதிக வகுப்புக்கள் நடத்தும் செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வு வியாழக்கிழமை (09) வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி தக்ஷஜானந்தர் மகராஜ் , கல்குடா வலயத்தின் திட்டமிடல் பிரிவு பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.துஸ்யந்தன் , இச் செயற்பாட்டினை ஒருங்கிணைப்பு செய்த விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்று பணிப்பாளர் க.பிரதீஸ்வரன், இரண்டு பாடசாலையின் அதிபர்களான எஸ்.மோகன் மற்றும் ரி.முரளிதரன் ஆகியோரும் இச்செயற்பாட்டினை முன்னெடுக்கவிருக்கும் வளவாளர்களும், பயனாளிகளான மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கல்குடா வலயத்தில் கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்கள் உயர் தரத்தில் சித்தியடையும் வீதத்தினை அதிகரிக்கும் நோக்குடனே இலண்டன் மனிதநேய நம்பிக்கை நிதியம் இதற்கான நிதியினை வழங்க முன்வந்துள்ளதாக அறக்கட்டளை பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபை பட்ஜெட் 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

பெரிநீலாவணை விசேட ,கல்முனை விசேட நிருபர்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கான விசேட சபை அமர்வு புதன்கிழமை (08) பிற்பகல் 02.30 மணியளவில் மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தலைமையில் ஆரம்பமாகி பிற்பகல் 04.45 மணியளவில் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இந்த அமர்வுக்கு மாநகர சபையின் மொத்த உறுப்பினர்கள் 41 பேரில் 32 உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர். இவர்களில் 21 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 06 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 05 உறுப்பினர்கள் நடுநிலை வகித்திருந்தனர்.

மாநகர முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு ஆளும் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசியக்

கட்சியின் 12 உறுப்பினர்களுடன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 04 உறுப்பினர்கள், சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 03 உறுப்பினர்கள், ஹெலிகொப்டர் சுயேட்சைக் குழுவின் ஒரு உறுப்பினர் மற்றும் மான் சுயேட்சைக்குழு உறுப்பினர் ஒருவருமாக 21 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 03 உறுப்பினர்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 02 உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஒரு உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 06 உறுப்பினர்களும் தேசிய காங்கிரஸின் ஒரு உறுப்பினரும் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் பலரும் மாநகர முதல்வருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மீனவர்களுக்கு கடல்சார் அனர்த்த தவிர்ப்பு தொடர்பாக விளக்கமளிப்பு

பெரிநீலாவணை விசேட, ஒலுவில் விசேட நிருபர்கள்

தென்கிழக்கு பல்கலைக்கழக அனர்த்த தவிர்ப்பு தொழிநுட்ப வியல் ஆய்வு மையம் மற்றும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த, அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கான கடல்சார் அனர்த்த தவிர்ப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வு தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்ப பீடத்தின் கூட்ட மண்டபத்தில் புதன்கிழமை (08) நடைபெற்றது.

தொழிநுட்ப பீடத்தின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி எம்.ஜீ. எம். தாரிகின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் கலந்துகொண்டு மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு கடல்சார் அனர்த்த தவிர்ப்பு தொடர்பிலான விடயங்

களை தெளிவுபடுத்தினார்.

கடலில் மீனவர்கள்படும் கஷ்டங்கள், மீனவர்களுக்கு பயிற்சி வழங்குவது, கடலில் மூழ்கி காணாமல் போகும் நிலை, கடல்சார் அனர்த்தங்கள், மீன்பிடி துறைமுகம் இயங்காமை போன்ற பல விடயங்கள் குறித்தும் மீனவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக அனர்த்த தவிர்ப்பு தொழிநுட்பவியல் ஆய்வு மையம் மற்றும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மூலமாக நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

மட்டு. மாநகர முதல்வரின் தாயார் காலமானார்

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவனின் தாயார் ரஞ்சிதம் சொர்ணலெட்சுமி தியாகராஜா புதன்கிழமை மாலை (08) தனது 85 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் முன்னாள் கல்லடி சிவானந்தா வித்தியாலய அதிபரும், மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வரும், முன்னாள் மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளரும் மற்றும் கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் முன்னாள் செயலாளருமான அமரர் கந்தையா தியாகராஜாவின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் மின் துண்டிப்பு

ஒலுவில் விசேட நிருபர்

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசர திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, கல்முனை பிராந்திய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை (11) கல்முனை, நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் நிலையத்திற்குட்பட்ட நீதிமன்ற வீதி, ரெஸ்ட் ஹவுஸ் வீதி, வீட்டுத்திட்டம் குறுந்தயடி, பாலமுனை, அட்டாளைச்சேனை, ஒலுவில் வீட்டுத்திட்டம், ஹிச்ரா பிரதான வீதி அம்பாறை வீதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை மின் தடைப்படும்.

திங்கட்கிழமை (13) சின்னாபாலமுனை மற்றும் கோணவத்தை ஆகிய பகுதிகளிலும், செவ்வாய்க்கிழமை (14) அம்பாறை வீதி, வங்கலாவாடி சென்னல்கிராமம் ஆகிய பகுதிகளிலும், சனிக்கிழமை (18) கல்முனை, சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட வைத்தியசாலை வீதி இருந்து தாளவெட்டுவான் ப்ரதர் ஹவுஸ் வீதி, மணல்சேனை, மருதமுனை, துரவந்தியமேடு பெரியநீலாவனை, பாண்டிருப்பு, சென்னல்கிராமம் மலையடிகிராமம் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை மின் தடைப்படும்.

செவ்வாய்க்கிழமை (21) சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட மைகாட்டி இருந்து நைனாகாடு ஆகிய பகுதிகளிலும், புதன்கிழமை (29) சின்னாபாலமுனை மற்றும் கோணவத்தை ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட "நோயற்ற ஆரோக்கிய வாழ்வு" இலவச மருத்துவ முகாம் வியாழக்கிழமை (09) கோணாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்றது. இதன்போது சிகிச்சை பெறுவதற்காக வருகை தந்தவர்கள் பரிசோதிக்கப்படுவதனைப் படத்தில் காணலாம். (படம்; பாலமுனை விசேட நிருபர்)

மட்டு. சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல், மாவட்ட அரசாங்க அதிபர் கே கருணாகரனுக்கும் ,அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்க மாவட்ட பிரதிநிதிகளுக்குமிடையில் திங்கட்கிழமை (06) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், மாவட்டத்திலுள்ள முகாமையாளர் வெற்றிடங்களை நிரப்புதல், உத்தியோகத்தர்களின் நலன்புரி நடவடிக்கைகள், சம்பள அதிகரிப்பு வழங்களில் தாமதங்கள் சம்பள சீராக்கங்கள் மேற்கொள்வதில் உள்ள விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்த விடயங்கள் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. இதற்கான தீர்வுகளை எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி பெற்றுத்தருவதாக மாவட்ட செயலாளர் இதன் போது தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் சமுர்த்தி மாவட்ட செயலகம் சார்பில் சமுர்த்தி கணக்காளர் எம். பஷீர் , சமுர்த்தி மாவட்ட சிரேஷ்ட முகாமையாளர் ஜே. எப். மனோகிதராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்க தலைவர் என் ரவீந்ரகுமார், செயலாளர் எம். எச். எம். அன்வர், பொருளாளர் யூ. குருபரன் உப தலைவர் எம். ஐ. ஐயூப்கான் உப செயலாளர் எஸ். குகன் மற்றும் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார்

aalamulislam.tkn@lakehouse.lk

அல்லாஹ்வின் வழிகாட்டல்

இஸ்லாம் மிகவும் தெளிவான இறைவேதமாகும். இது மனிதனைப் படைத்து அவனது வாழ்வுக்கு தேவையான அத்தனை வசதிகளையும் ஏற்பாடு செய்து தந்துள்ள சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வினால் வகுத்தளிக்கப்பட்டுள்ளதாகும். தன் படைப்புக்களில் மேலான படைப்பாக விளங்கும் மனிதன் மீது அல்லாஹ் கொண்டுள்ள இரக்கம் கருணையின் வெளிப்பாடாக அவனது ஈருலக வாழ்வின் சுபீட்சத்திற்காக இவ்வழிகாட்டலை முழுமையாக வகுத்தளித்துள்ளான். இம்மை மறுமை என்ற ஈருலக வாழ்வு கிடைக்கப்பெற்றுள்ள மனிதனின் விமோசனமும் சுபீட்சமும் தான் இந்த இறைவழிகாட்டலின் இலக்கும் நோக்கமும் ஆகும். அதற்கு தேவையான அத்தனை வழிகாட்டல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது இந்த இறை வழிகாட்டல்.

என்றாலும் தான் படைத்து பரிபாலிக்கும் மனிதன் இவ்வழிகாட்டலைத்தான் பின்பற்றியாக வேண்டும் என்று அல்லாஹ் இதனைத் திணிக்கவில்லை. அதற்கான அனுமதியை அவனது இறைத்தூதர்களுக்கும் அவன் வழங்கவில்லை. மனிதனுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுச் சுதந்திரத்தை வழங்கியுள்ள அல்லாஹ், இந்த இறை வழிகாட்டலை தெளிவாகவும் நளினமாகவும் எடுத்துரைக்கும்படியே கூறியுள்ளான்.

இதனை தன் அருள் மறையில், '(நபியே) நீங்கள் (மனிதர்களை) நளினமாகவும், அழகான நல்லுபதேசத்தைக் கொண்டுமே உங்கள் இறைவனின் வழியின் பக்கம் அழைப்பீராக..!' **(அல் குர்அன் 16:125)** என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முற்பட்ட இறைத்தூதர்கள் அல்லாஹ்வின் இறைத்தூதை மக்களிடம் கொண்டு சென்ற விதத்தை குறிப்பிட்டு வைக்கவும் அவன் தவறவில்லை.

அந்த வகையில் நூஹ் (அலை) அவர்கள், 'நூஹ் தன்னுடைய (இனச்) சகோதரர்களை நோக்கி நீங்கள் (அல்லாஹ்வுக்கு) பயப்பட வேண்டாமா?' என்று கூறினார். மெய்யாகவே நான் உங்களிடம் (இறைவனால்) அனுப்பப்பட்ட மிகவும் நம்பிக்கை உள்ள ஒரு தூதராவேன். ஆகவே அல்லாஹ்வுக்கு பயந்து நீங்கள் எனக்கு கட்டுப்பட்டு நடவுங்கள். (இதற்காக) நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை. என்னுடைய கூலி யாவும் உலகத்தாரைப் படைத்து காப்பாற்றி வளர்ப்பவனிடமே இருக்கின்றன'.

(அல் குர்ஆன் 26:106-109)

என்று குறிப்பிட்டதை அல்லாஹ் சுட்டிக்காட்டியுள்ளான்.

அதேபோன்று இப்றாஹீம் (அலை) அவர்கள் இறைத்தூதை மக்களிடம் கொண்டு சென்ற விதத்தையும் அல்லாஹ் எடுத்துக்கூறியுள்ளான். அதாவது ஒரு தடவை இப்றாஹீம் (அலை) அவர்களின் தந்தை, தன் மகனான இப்றாஹீமை கடுந்தொனி வசனங்களைப் பாவித்து கல்லால் அடிப்பதாக ஏசி விரட்டிய போது, 'இப்றாஹீம் (அலை) அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதையும் அல்குர்ஆனில் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான். 'அதற்கு (இப்றாஹீம் இதோ நான் செல்கிறேன்) உங்களுக்கு சாந்தி உண்டாவதாக..! பின்னர் நான் உங்களுக்காக என் இறைவனிடத்தில் மன்னிப்புக் கோருவேன். நிச்சயமாக என் இறைவன் என் மீது மிக்க இரக்கமுடையவனாக இருக்கின்றான்' என்று கூறினார்.

(அல் குர்ஆன் 19:46,47)

இதன் ஊடாக தம்மை எச்சரித்து விரட்டிய தந்தையிடம் தனயன் எவ்வாறு நடந்து கொண்டுள்ளார் என்பதை இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது. அல்லாஹ்வின் தூதை முன்னெடுப்பதில் நளினமும் மென்மையும் சகிப்புத்தன்மையும் தான் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இதை விடுத்து, தான் இறைத்தூதர் எனக்கூறி இப்றாஹீம் (அலை) அவர்கள் தந்தைக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அது தான் அல்லாஹ்வின் வழிகாட்டலின் வெளிப்பாடாகும்.

அதேநேரம் அல்லாஹ்தஆலா மூஸா (அலை) அவர்கள் காலத்தில் வாழ்ந்த பிர்அவ்ன் என்ற கொடுங்கோல் ஆட்சியாளனுக்கு இறைதூதை எடுத்துச்சொல்ல மூஸா (அலை) அவர்களையும் அவர்களது சகோதரர் ஹாரூன் (அலை) அவர்களையும் அனுப்பி வைத்தான். பிர்அவ்னுக்கு எவ்வாறு இறைசெய்தியை எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் அவன் கூறியே அனுப்பினான்.

அதாவது 'நீங்கள் இருவரும் பிர்அவ்னிடம் செல்லுங்கள். நிச்சயமாக அவன் மிக்க வரம்பு கடந்து விட்டான். நீங்கள் அவனுக்கு நளினமாகவே உபதேசம் செய்யுங்கள். அவன் நல்லுணர்ச்சி பெறலாம் அல்லது அச்சம் கொள்ளலாம் என்று கூறினோம்'.

(அல் குர்ஆன் 20:43,44)

இதன் ஊடாக கொடுங்கோல் ஆட்சியாளன் என்றால் கூட, அவனும் நல்லுணர்ச்சி பெற வேண்டும் என்பதையே அல்லாஹ் விரும்புகிறான் என்பதையே இவ்வசனம் எடுத்துக்காட்டுகின்றது. அவ்வாறான கொடுங்கோலனுக்கு இறைச் செய்தியை எடுத்துச் சொல்லவும் நளினம் கடைபிடிக்கப்பட வேண்டும் என்பது தான் அல்லாஹ்வின் கட்டளை.

நபி(ஸல்) அவர்களுக்கு முற்பட்ட காலத்தில் இறைத்தூதர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப இறைத்தூதை மிகவும் நளினமாகவும் தெளிவாகவும் மென்மையாகவும் மக்கள் மத்தியில் முன்னெடுத்துள்ளார்கள். இதனை அல்லாஹ் தன் அருள்மறையில் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான். ஏனெனில் அதே ஒழுங்கை தான் நபி (ஸல்) அவர்களும் அவர்களது சமுதாயத்தினரும் கடைபிடிக்க வேண்டும். அதற்கு தேவையான வழிகாட்டல்களையும் அறிவுரைகளையும் அல்லாஹ் நபி (ஸல்) அவர்கள் ஊடாக உலகிற்கு அருளி இருக்கின்றான்.

இவ்வாறான நிலையில் நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதை எடுத்துக்கூறியும் அன்றைய காலகட்டத்தில் நிறைய பேர் அதனை எதிர்ப்பவர்களாக இருந்தனர். அதனால் நபி (ஸல்) அவர்கள் பெரிதும் கவலையடைந்தார்கள்.

அப்போது அல்லாஹ்தஆலா, '(நபியே) அவர்கள் (உங்களை) நம்பிக்கை கொள்ளாததன் காரணமாக (துக்கத்தால்) நீங்கள் தற்கொலை செய்து கொள்வீர்கள் போலும்'

(அல் குர்அன் 26:03)

என்ற வசனத்தை அருளினான்.

அதேநேரம் மற்றொரு வசனத்தில் '(நபியே) நிச்சயமாக நீங்கள் இவர்களில் விரும்பியவர்களை நேரான வழியில் செலுத்த உங்களால் முடியாது. எனினும் தான் விரும்பியவர்களை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறான். நேரான வழியில் செல்லத் தகுதியுடையவர் யார் என்பதை அவனே நன்கறிவான்' **(அல்குர்ஆன் 28:56)**

என்றும் 'உங்கள் இறைவன் எண்ணி இருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே வகுப்பினராக ஆக்கி இருப்பான். (அவ்வாறு நாடவில்லை) அவர்கள் தங்களுக்குள் மாறுபட்டுக் கொண்டே இருப்பார்கள். **(அல் குர்அன் 12:118)** என்றும் மற்றொரு வசனத்தில் 'அல்லாஹ் நாடி இருந்தால் அவர்கள் இணை வைத்திருக்க மாட்டார்கள். அவர்கள் மீது காப்பாளர்களாக நாம் உங்களை ஏற்படுத்தவில்லை. நீங்கள் அவர்களை கண்காணிக்க வேண்டிய பொறுப்புடையவருமல்லர்' **(அல் குர்ஆன் 06:107)** என்றும் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

இந்த வசனங்களின் படி அல்லாஹ்வின் இறைத்தூதைத் தெளிவாகவும் நளினமாகவும் எடுத்து செல்வது தான் இறைத்தூதரதும் அவரது சமுதாயத்தினரும் பணியாகும். அத்தோடு '(இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை. ஏனென்றால் வழிகேட்டிலிருந்து (விலகி) நேர்வழி (அடைவது எவ்வாறென்று) தெளிவாகி விட்டது. **(அல் குர்ஆன் 2:256)** என்றும் கூறியுள்ளான். அதனால் இந்த இறைவழிகாட்டலை எவர் மீதும் திணிக்கவும் முடியாது.

அதன் காரணத்தினால் மனிதனின் ஈருலக விமோசனத்தை இலக்காகவும் நோக்காகவும் கொண்டுள்ள இந்த இறைவழிகாட்டலை மனிதனுக்கு எடுத்து சொல்வது மாத்திரம் தான் இறைத்தூதரின் பொறுப்பாகும். இதனை நளினமாகவும் தெளிவாகவும் மென்மையாகவும் மேற்கொள்ள வேண்டும். அது தான் நபி(ஸல்) அவர்களதும் அவர்களது சமூதாயத்தினரதும் பணியாகும்.

இதனை நபி (ஸல்) அவர்களின் நபிமொழிகளும் தெளிவாக எடுத்துக்கூறுகின்றன. அல்லாஹ் விரும்புகின்றவர்கள் தான் நேர்வழியைப் பெறலாம்.

ஆகவே அல்லாஹ்வின் கட்டளைகள், வழிகாட்டல்களுக்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கும் ஏற்பவே அவனது இறைதூதை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இதைவிடுத்து அவரவர் விருப்பதற்கு ஏற்ப இப்பணியை மேற்கொள்ள முடியாது.

அத்தோடு பலாத்காரத்தைப் பிரயோகித்தும் சலுகைகளைக் காண்பித்தும் வழங்கியும் எவரையும் இஸ்லாத்தை ஏற்கச் செய்யவும் கூடாது.

இவற்றுக்கு இஸ்லாம் கிஞ்சிற்றும் இடமளிக்கவில்லை. இவை தெளிவான உண்மைகளாகும்.

மர்லின் மரிக்கார்...

இளமையின் முக்கியத்துவம்

மனித வாழ்வில் இளமைப்பருவம் மிக முக்கியத்துவம் மிக்கதாகும். இப்பருவத்தின் உடல், உள வளர்ச்சி வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. இதனை மிகக் கவனமாகவும் ஒழுங்காகவும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

அதனால் தான் நபி(ஸல்) அவர்கள் இளமைப் பருவம் குறித்து குறிப்பிடும் போது, முதுமை வருமுன் இளமையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்றார்கள். அந்தளவுக்கு முக்கியமானதே இளமைப் பருவம். மறுமையில் வினவப்படும் நான்கு வினாக்களில் ஒன்று, 'உனது வாலிபத்தை எவ்வாறு பயன்படுத்தினாய்?' என்பதாகும். மேலும், நிழல் இல்லாத அந்த மஹ்ஷர் மைதானத்தில் அர்ஷின் நிழல் கிடைக்கப்பெறுகின்ற ஏழு கூட்டத்தாரில், ஒரு கூட்டத்தினர் அல்லாஹ்வுக்கான வழிபாட்டில் வளர்ந்த இளைஞர்களாவர்' என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

இதேவேளை நபிமார்களின் வரலாற்றை எடுத்து நோக்கினால் இப்ராஹீம் (அலை), யூசுப் (அலை), மூஸா (அலை) மற்றும் மர்யம் (அலை) போன்றோர் இளைஞர்களாக இருந்து இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு குறித்தும் அல்குர்ஆன் சிலாகித்து கூறியுள்ளது.

இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூட முன்மாதிரியான இளைஞராக திகழ்ந்த வரலாற்றை அவரது ஸீராவில் காணலாம். அவரது இளமைப் பருவம், குணப்பண்புகள், சீரான ஒழுக்க விழுமியங்கள், அழகான முன்மாதிரிகள் போன்றன இளைஞர்களுக்கான சிறந்த முன்மாதிரிகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. நபி(ஸல்) அவர்களுக்கு நபிப்பட்டம் கிடைத்ததும் அவர்களது நற்பண்புகள் பக்கபலமாக இருந்தன. அவர்களை ஏற்றவர்கள், ஆதரித்தவர்கள் சூழ இருந்தவர்கள் போன்ற அணியில் இருந்தவர்கள் பெரும்பான்மையினர் இளைஞர்களாவர். அவர்களில் அலி (ரலி), முஆத் (ரலி), அர்கம் (ரலி), ஜஃபர் (ரலி), முஸ்அப் (ரலி), ஸஃத் இப்னு அபீவக்காஸ் (ரலி), இப்னு அப்பாஸ் (ரலி), இப்னு உமர் (ரலி) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இளமையின் முக்கியத்துவத்தை அறிந்து இளைஞர்களை நபி(ஸல்) அவர்கள் பயிற்றுவித்து, நெறிப்படுத்தியதன் பயனாகவே இஸ்லாத்தைப் பலப்படுத்த இளைஞர்களான ஸஹாபாக்கள் பெரிதும் உதவினார்கள். 'வயதானவர்கள் என்னைப் பொய்ப்பித்துக் கொண்டிருந்த போது இளைஞர்களே என்னை விசுவாசித்து உண்மைப்படுத்தினர் என குறிப்பிட்டு இந்த இளைஞர்களை நபி (ஸல்) அவர்கள் பாராட்டினார்கள்.

இளைஞர்களிடம் ஈமானியப்பலம், சீரான சிந்தனை, ஒழுக்கக் கட்டுப்பாடு, இலட்சிய மோகம், சிரமங்களை எதிர்கொள்ளும் மனோதைரியம், அறிவுத்தாகம், கட்டுப்பாடான வாழ்வு, கடின உழைப்பு, அர்ப்பண சிந்தனை போன்ற குணநலங்கள் காணப்படல் வேண்டும். உன்னத ஆட்சியாளர் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்), ஸ்பெய்ன் நாட்டை வெற்றி கொண்ட தாரிக் இப்னு ஸியாத் (ரஹ்), சிந்துவை வெற்றி கொண்ட முஹம்மது இப்னு காசிம் (ரஹ்), ஸஹீஹுல் புகாரியைத் தொகுத்த இமாம் புகாரி (ரஹ்), உஸூலுல் பிக்ஹை தொகுத்த இமாம் ஷாபிஈ (ரஹ்) மற்றும் அரபு இலக்கண வல்லுனரான இமாம் ஷீபவைஹி (ரஹ்) போன்றோர் இளமைப் பருவத்திலேயே சாதனை படைத்த மேதைகள் அவர்.

இளமை மிகவும் முக்கியத்துவம் மிக்க பருவம். இப்பருவத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திட வேண்டும். இதைவிடுத்து வாழ்வை சீரழிக்கும் பாதையில் இளமையை செலவிட்டிடலாகாது. அதனால் இளமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு மட்டுமல்லாது, சமூகத்துக்கும் பெரும்பங்கு உண்டு. நல்ல நண்பர்கள் தொடர்பு, நல்ல முன்மாதிரிகளை இனம் காணல் போன்ற பொறுப்புக்கள் இளைஞர்களுக்கும் இனங்காட்ட வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கு உண்டு.

இளமையை இனியவழியில் இட்டுச் செல்ல சமய பக்தியும் சமயத் தொடர்பும் அவசியம். இளமையை தீயசெயல்களிலிருந்து பாதுகாக்க இறைபக்தி (தக்வா) அவசியம். இவைகளை வளர்த்துக் கொள்ள ஆன்மீக செயற்பாடுகளான ஸலவாத், தவ்பா, இஸ்திஃபார், திலாவதுல் குர்ஆன், ஸுன்னத்தான தொழுகைகள் போன்றவற்றிற்கு தினமும் நேரம் ஒதுக்கப்படல் வேண்டும். மேலும் வாசிப்பு, கற்றல் ஆகியவற்றில் ஈடுபடல் வேண்டும். பெரியோர்கள், உலமாக்கள், உபதேசங்களைப் பெறல் வேண்டும். நாட்டுக்கும், சமூகத்துக்கும் பயன் தரக்கூடிய தொழிற் கல்வியைத் தேடிப்பெற்றுக்கொள்ள வேண்டும். இவற்றின் ஊடாக இளமையை உரியமுறையில் பயன்படுத்தி நற்பேறு அடைவோம்.

மௌலவி எம்.யூ.எம். வாலிஹ்
(அல்அஸ்ஹரி), வெலிகம

வன்முறைக்கு இடமளிக்காத வாழ்க்கை நெறி

இன்றைய காலகட்டத்தில் இஸ்லாம் வன்முறையை துண்டுகிறது, முஸ்லிம்கள் வன்முறையாளர்கள் என்று குற்றம் சுமத்தப்படுகிறது. இதற்கு ஒரு சில முஸ்லிம்களது வாழ்வொழுங்கும் செயற்பாடுகளும் சில சமயம் காரணமாக அமைந்துவிடுகின்றன. ஆனால் இஸ்லாம் வன்முறையை தூண்டுவதுமில்லை. அதற்கு இடமளிப்பதுமில்லை, ஒரு உண்மையான முஸ்லிம் வன்முறையாளனாக இருக்கவும் முடியாது.

இஸ்லாம் தொடர்பில் போதிய தெளிவைப் பெற்றிராதவர்களில் சிலர் இஸ்லாத்தின் மீது குற்றம் சுமத்துகின்றனர். இவர்கள் இஸ்லாத்தின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ள வழி செய்ய வேண்டும். இன்னும் சிலர் இஸ்லாத்தை அறிந்திருந்தும் அது தொடர்பில் உரிய தெளிவுபடுத்தல்களை வழங்கத் தவறியுள்ளனர். இது தொடர்பில் நினைவூட்ட வேண்டிய தேவையும் கூட நிலவுகிறது. வன்முறை என்பது அன்புக்கு முரணானதாகும். கடுமை, கடுகடுப்பு போன்ற கருத்தை இது சுட்டி நிற்கிறது. ஒருவன் பொருத்தமற்ற இடத்தில், பொருத்தமற்ற காலத்தில், அவசியத்தை விட அதிகமாய் தேவையற்ற பிரகாரம், பேண வேண்டிய வரையறைகளை மீறி கடுமையாக கடும்போக்குடன் நடப்பதனை வன்முறை எனலாம்.

'நிச்சயமாக அல்லாஹ் அன்பாளன் ஆவான். அவன் அன்பை விரும்புகிறான். வன்மத்துக்கு கொடுக்காதவற்றை அவன் அன்புக்கு கொடுக்கிறான்' (ஆதாரம்: முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்களும் அன்பை விரும்பினார்கள், வன்முறையை வெறுத்தார்கள், அனைத்து விடயங்களிலும் அன்பை வெளிப்படுத்துமாறு தோழர்களுக்கு வழிகாட்டினார்கள்.

'ஒரு விடயத்தில் அன்பு காணப்படும் போது அது அலங்காரமானதாக இருக்கும். ஒரு விடயத்திலிருந்து அன்பு நீக்கப்படும் போது அது அவலட்சணமானதாக மாறிவிடும். (ஆதாரம்: முஸ்லிம்)

நிச்சயமாக அல்லாஹ் அனைத்து விடயங்களிலும் அன்பு காட்டுவதை விரும்புகிறான். (ஆதாரம்: புகாரி)

யாரிடம் அன்பு காணப்படவில்லையோ அவர் அனேக நலன்களை இழந்துவிடுவார். (ஆதாரம்: ஸஹீஹுல் ஜாமிஹ்)

நிச்சயமாக அல்லாஹ் வன்மத்துக்கு கொடுக்காத பல விடயங்களை அன்புக்கு கொடுக்கிறான். ஒரு அடியானை அல்லாஹ் நேசித்தால் அவனிடம் அன்பை ஏற்படுத்துகிறான். ஒரு குடும்பத்தார் அன்பை இழந்து விடுவார்களாக இருந்தால் அவர்கள் அநேக நலன்களை இழந்து விடுவார்கள். (ஆதாரம்: ஸஹீஹுத் தர்கீப்)

எவ்வித நியாயங்களை முன்வைத்த போதிலும் இஸ்லாம் வன்முறையை ஏற்றுக்கொள்வதில்லை. வன்முறையான எண்ணங்கள், பேச்சுகள், செயல்பாடுகள் போன்ற அனைத்தையும் அது கடுமையாக கண்டித்திருக்கின்றது.

இஸ்லாத்தை அடுத்த மனிதர்களுக்கு முன்வைக்கும் போது கூட இங்கிதமாகவும் மென்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்று தான் இஸ்லாம் கூறுகிறது. உலக வரலாற்றிலேயே மிக மோசமான கொடுங்கோலனாகக் கருதப்படும் பிர்அவ்ன் போன்ற ஒருவனிடம் இஸ்லாத்தை முன்வைக்க சென்ற மிக சிறந்தவர்களான மூஸா (அலை), ஹாரூன் (அலை) போன்றோரிடம் "நீங்கள் இருவரும் பிர்அவ்னிடம் சென்று மென்மையாக மிருதுவாக சொல்லுங்கள்' (தாஹா: 44) என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

மூஸா நபி போன்ற ஒருவருக்கே பிர்அவ்ன் போன்ற ஒருவனிடம் இங்கிதமாக நடக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்தால் எமது நிலை என்ன என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் மூஸா நபியை விட சிறந்தவர்களும் அல்லர். எம்முடன் மாற்று நம்பிக்கைகளை கொண்டிருப்பவர்கள் பிர்அவ்னை விட மோசமானவர்களும் அல்லர். இப்படியான ஒருவருடன் கூட வன்முறையாக நடந்து கொள்ள இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

நபி (ஸல்) அவர்கள் உம்ரா செய்யும் நோக்கில் மக்காவை நோக்கி செல்லும் போது யுத்த மேகம் சூழ்ந்து கொண்டது. குறைஷியர்களும் யுத்தத்துக்கு தயாரானார்கள். ஆனால் ஹுதைபிய்யா என்ற இடத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு யுத்தம் தவிர்க்கப்பட்டதோடு, சமாதான ஒப்பந்தமும் அங்கு நிறைவேறியது. இந்நிகழ்வை அல் குர்ஆன் சூறா பத்ஹில் விளக்கும் போது, 'உங்களுக்கு நாங்கள் தெளிவான வெற்றியை தந்து விட்டோம்' என்றுள்ளது. இதனை அவதானித்த ஒரு ஸஹாபித் தோழர், 'அல்லாஹ்வின் தூதரே.. இது ஒரு வெற்றியா? என்று கேட்டதற்கு 'ஆம்' இது ஒரு வெற்றி" என்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம்).

யுத்தமும் போராட்டமும் நடைபெற்றால் மாத்திரமே வெற்றி என்று கருதியவர்களிடம் சமாதானம் என்பது ஒரு பெருவெற்றி என்ற ஒரு ஆழமான கருத்தை அல் குர்ஆன் முன்வைத்தது.

அல்லாஹ் தன்னை ஒருவன் முறையாளனாக அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. அவனது பலம் தொடர்பான பண்புகளை விட அன்பு தொடர்பான பண்புகள் அதிகமாக விளக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் (அர் ரஹ்மான், அர் ரஹீம்) என்று 113 அத்தியாயங்கள் ஆரம்பிக்கின்றன. இவற்றை ஒரு முஸ்லிம் நாளாந்தம் 17 தடவை திரும்ப திரும்ப தொழுகையில் ஓதுகிறான். இதற்கு மேலதிகமாக அல் குர்ஆனில் 5 இடங்களில் இவ்விரு சொற்களும் இடம்பெற்றுள்ளன. தனியாக 57 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரஹ்மான் என்ற பெயரில் அல் குர்ஆனில் தனியான ஒரு அத்தியாயமும் உள்ளது. அர்ரஹீம் (நிகரற்ற அன்பாளன்) என்ற சொல் 95 இடங்களில் இடம்பிடித்துள்ளது. 'அருளாளர்களுக்கெல்லாம் அருளாளன் (அர்ஹமுர் ராஹிமீன்)' என்று 5 தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் ஒருவன் முறையாளர் அல்லர். அவர் அகிலத்தாருக்கே அன்பாக வந்தவர் (அன்பியா 107), 'அல்லாஹ்வுடைய அருளால் நீங்கள் அன்பான ஒருவராக இருக்கிறீர். நீங்கள் கடின சித்தம் கொண்ட கடுகடுப்பானவராக இருந்திருந்தால் மக்கள் உங்களை விட்டு விலகியிருப்பர்' (ஆலு இம்ரான் 159) என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

'இரக்கத்தோடு நடந்து கொள்கின்றவர்களுக்கு கருணையாளனான அல்லாஹ் அன்பு காட்டுவான். பூமியில் இருப்பவர்களுக்கு அன்பு காட்டுங்கள். வானத்தில் இருப்பவன் உங்களுக்கு அன்பு காட்டுவான்' (ஆதாரம்: திர்மிதி) பூமியில் இருப்பவர்கள் என்ற சொற்பிரயோகத்தின் மூலம் முஸ்லிமல்லாதவர்கள் ஏனைய படைப்புகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே உண்மையான முஸ்லிமிடம் வன்முறை எண்ணமோ, நடத்தையோ தோன்ற முடியாது. வன்முறையை மார்க்கமாகக் கருதவும் முடியாது. இதன்படி இஸ்லாத்துக்கும் வன்முறைக்கும் தொடர்பில்லை என்பதனை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். அதனால் வன்முறை எண்ணங்களையும் செயற்பாடுகளையும் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். வன்முறை எந்தவடிவில் வந்தாலும் அதற்கு எதிராக நிற்க வேண்டும். அதுவே ஒரு முஸ்லிமின் உயரிய பண்பாடு என்பதனை உணர்ந்து வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வோம்.

யூ.கே. றமீஸ் எம்.ஏ (சமூகவியல்)

தினகரன் THINAKARAN தினகரன்

SLBC Sri Lanka Broadcasting Corporation

இணைந்த கல்விச் சேவை 11.12.2021

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்

த. பேரின்பராஜா
கொழும்பு முன்னணி ஆசிரியர்

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி -1

நேரம் : 1 மணித்தியாலம்

✖ **தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைக் காண்க.**

✖ **01ஆம், 02ஆம் வினாக்களில் முதல் உருவுக்கு பொருத்தமான சொற் கூட்டம் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

01.

1) அழகு, நீர், அலங்காரம்
2) தண்ணீர், உணவு, சுத்தம்
3) வடிவு, மருந்து, பாதுகாப்பு

02.

1) விலை, தூக்கம், மரம்
2) தச்சன், மரம், உருக்கு
3) பலகை, இருக்கை, வீடு

✖ **இரு பக்கமும் சமனான வடிவங்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

03. 

04. 

✖ **கீழ்வரும் வினாக்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொற்களின் பொருளைத் தரும் சொல் அமைந்த விடையைத் தெரிவு செய்க.**

05. வாழ்நாளில் **உண்மை** பேசுவோர் **உயர்வு** அடைவார்.
1) நேர்மை - ஏற்றம் 2) மெய் - ஏற்றம் 3) வாய்மை - தாழ்வு

06. மற்றவர்களுக்கு **தீங்கு** செய்தோர் **பழிக்கு** அஞ்சுவர்
1) பாவம் - புகழ் 2) தீமை - குற்றம் 3) அநியாயம் - பயம்

✖ **பின்வரும் விடயத்தை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

ஒருவர் வாங்கிய பந்துகளில் சிவப்பு, நீலம், பச்சை ஆகிய பந்துகளை சிந்து என்பவருக்கும் நீலம், பச்சை, வெள்ளை ஆகிய பந்துகளை இந்து என்பவருக்கும் ஊதா, நீலம், பச்சைஆகிய பந்துகளை ஹிந்து என்பவருக்கும் பகிர்ந்தளித்தார். இதன்படி

07. சிந்து, இந்து, ஹிந்து ஆகிய மூவர்களிடமும் எத்தனை வகையான நிறப்பந்துக்கள் காணப்படுகின்றன.
1) 9 வகை 2) 5 வகை 3) 6 வகை

08. ஹிந்து என்பவரோ இந்து என்பவரோ பெற்றுக்கொள்ளாத சிந்து என்பவர் மட்டும் வைத்திருக்கும் நிறப்பந்து எது?
1) வெள்ளை 2) நீலம் 3) சிவப்பு

09. ஹிந்து. சிந்து, இந்து ஆகிய மூவரிடமும் உள்ள நிறப்பந்துகள் யாவை?
1) நீலமும், பச்சையும் 2) நீலமும், ஊதாவும் 3) பச்சையும் வெள்ளையும்

✖ **இடைவெளிக்கு வரவேண்டிய பகுதிகையைத் தெரிவு செய்க.**

10. 

11. 

✖ **பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

12. ஆனந்தாக் கல்லூரியில் பெண்கள் மட்டுமே படிக்கிறார்கள். என்னுடைய பிள்ளைகளும் அந்தப் பாடசாலையில் தான் படிக்கிறார்கள் என ஒருவர் கூறினார். ஆகவே
1) என்னுடைய பிள்ளைகள் எல்லாம் பெண்பிள்ளைகள்
2) என்னுடைய பெண்பிள்ளைகள் அந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள்
3) எல்லோருடைய பெண்பிள்ளைகளும் அங்கு தான் படிக்கிறார்கள்

13. காருண்யாவை விட தாருண்யா ரூ. 40.00 குறைவாக வைத்திருக்கிறாள் இருவரிடமும் உள்ள மொத்தப் பணம் ரூ. 80.00 ஆகும். எனின் தாருண்யாவிடம் இருக்கும் பணம் எவ்வளவு?
1) ரூ.10.00 2) ரூ. 20.00 3) ரூ. 30.00

14. விலங்குகள் எல்லாம் ஓடக் கூடியன. மான் ஓடக்கூடிய விலங்கு ஆகும் எனின்,
1) விலங்குகள் எல்லாம் மான்கள் ஆகும்
2) ஓடக்கூடிய மான்கள் சில உண்டு.
3) மான்கள் எல்லாம் ஓடக்கூடியன.

15. ஆறு மனிதர்கள் 8 நாட்களில் செய்யும் வேலையை நான்கு நாட்களில் முடிக்க எத்தனை மனிதர்கள் தேவை.
1) 10 மனிதர்கள் 2) 8 மனிதர்கள் 3) 12 மனிதர்கள்

16. 2012 ஆம் ஆண்டு 366 நாட்களும் 2013ம் ஆண்டு 365 நாட்களும் உள்ளன. 2012 ஜனவரி முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். 2013 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும். எனின் 2014 ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி
1) புதன்கிழமை 2) வியாழக்கிழமை 3) வெள்ளிக்கிழமை

✖ **பின்வரும் எண்கோலத்தை அவதானித்து இடைவெளிக்கு வரவேண்டிய பெறுமானத்தைத் தெரிவு செய்க.**

17.

6	8	12
10	6	15
12	?	30

1) 7
2) 10
3) 8

18. 

1) 5 2) 6 3) 7

✖ **வித்தியாசமான உருச்சோடியைக் கொண்ட விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

19. 

(1) (2) (3)

20. 

(1) (2) (3)

✖ **21 தொடக்கம் 23 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள எண்கள், எழுத்துக்களை அவதானித்து விளங்கிக் கொண்டு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6	b	B	R	6	S	n	n	5	n
S	6	9	S	U	B	8	P	U	n

21. இங்கு அதிகமாகக் காணப்படும் எழுத்து எது?
1) S 2) n 3) 6

22. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது எது?
1) எழுத்துக்கள் 2) எண்கள் 3) சொல்ல முடியாது

23) இங்குள்ள எழுத்துக்கள் சிலவற்றை பொருத்தமாக ஒழுங்கமைப்பதன் மூலம் வினைச் சொல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுத முடியும். அவ்வெழுத்துக்களின் எண்ணிக்கை எத்தனை
1) 3 2) 4 3) 5

✖ **பின்வரும் தகவல்களை பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.**



24. மாம்பழம் இரண்டினதும் அப்பிள் ஒன்றினதும் விலை யாது?
1) ரூ. 60.00 2) ரூ. 80.00 3) ரூ. 100.00

25. பின்வருவனவற்றில் சரியான தொடர்பை கொண்ட உரு எது?

✖ **தாயக்கட்டை ஒன்றின் எவையேனும் எதிர்ப்பக்கச் சோடிகளில் காணப்படும் புள்ளிகளின் எண்ணிக்கையினது கூட்டுத்தொகை ஏழு ஆகும். அவ்வாறு அமைந்த 4 தாயக்கட்டைகள் ஒன்றை ஒன்று நோக்கும் வண்ணம் ஒட்டப்பட்டுள்ள பக்கச் சோடிகளில் காணப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகை எட்டு ஆகும். இத்தகவல்களைக் கொண்டு விடை காண்க.**



26. B பக்கத்தில் காணப்படும் புள்ளிகள் எத்தனை?
1) 2 2) 3 3) 4

27. C பக்கத்தின் எதிர்ப்பகத்தில் எத்தனை புள்ளிகள் காணப்படும்?
1) 3 2) 4 3) 2

28. A பக்கத்தின் எத்தனை புள்ளிகள் காணப்படும்?
1) 5 2) 4 3) 3

29. சஜந்தன் காலையில் பாடசாலைக்குச் செல்லும் பொது அவனது நிழல் அவனது வலது கைப்பக்கமாக விழுவதைக் கண்டான். அவ்வாறெனின் அவன் எத்திசை நோக்கிச் சென்றான்?
1) வடக்கு 2) மேற்கு 3) தெற்கு

30. நயோனி தனது 10 ஆவது பிறந்தநாளை இற்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் கொண்டாடியதாகக் கூறினாள். அன்று அனித்தாவின் வயது 8 ஆண்டுகளாக இருந்தது. இதற்கேற்ப இருவரின் வயது தொடர்பாகக் கூறக்கூடிய கூற்று எது?
1) இன்று நயோனியின் வயது அனித்தாவின் வயதின் 3 ஆண்டுகள் கூடியதாகும்.
2) இன்று நயோனி அனித்தாவிலும் இரு ஆண்டுகள் மூத்தவள்
3) இன்னும் 5 ஆண்டுகளில் அனித்தா 15 வயதை அடைவாள்.

(14ஆம் பக்கம் பார்க்க)

தினகரன் THINAKARAN தினகரன்

SLBC Sri Lanka Broadcasting Corporation

இணைந்த கல்விச் சேவை

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்

த. பேரின்பராஜா
கொழும்பு முன்னணி ஆசிரியர்

(13ஆம் பக்கத் தொடர்)

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி -1

நேரம் : 1 மணித்தியாலம்

✠ **கீழ்வரும் உருவத்தை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.**



31. இவ்வுருவில் உங்கள் கண்ணுக்கு தென்படும் முக்கோணிகள் எத்தனை?
1) 14 2) 12 3) 11

32. இவ்வுருவிலிருந்து அதிகமாக பெறக் கூடிய செவ்வகங்கள் எத்தனை?
1) 8 2) 7 3) 9

✠ **இங்கு பல சிறிய திண்மங்கள் அடுக்கப்பட்டுள்ளன. அதை நன்கு அவதானித்து 33ம் 34ம் வினாக்களுக்கு விடை காண்க**



33. இவ்வுருவில் அடுக்கப்பட்டுள்ள சிறு திண்மக்குற்றிகள் எத்தனை?
1) 30 2) 28 3) 29

34. இங்கு அரைகுறையாக உள்ள உருவை பூரணமாக அடுக்கி சமப்படுத்துவதற்கு தேவையான குற்றிகள் கொண்டு அடுக்கப்பட்ட உருவைத் தெரிவு செய்க.

1) 
2) 
3) 

✠ **கீழ்வரும் வினாக்களில் காட்டப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஒவ்வொரு முழு எண் பெறுமானம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்பெறுமானங்களில் கூட்டுத்தொகை நிரையாகவும். நிரலாகவும் தரப்பட்டுள்ளன.**

△	▽	□	△	14
○	▽	○	▽	14
9	6	?	8	

35. இவ்வுருவில் ? உள்ள இடத்திற்கு வரவேண்டிய எண் யாது?
1) 4
2) 5
3) 6

🍍	🍌	🍊	10
🍌	🍌	🍌	09
🍊	🍊	🍍	11
09	11	10	?

36. அன்னாசிப்பழத்திற்கு கொடுக்கப்பட்ட பெறுமானம் யாது?
1) 2 2) 5 3) 3

37. ஒரு தோடம் பழத்திற்கும் இரு வாழைப் பழத்திற்கும் கொடுக்கப்பட்ட பெறுமானத்தின் கூட்டுத்தொகை யாது?
1) 12 2) 10 3) 8

38. பின்வரும் கூற்றுக்கள் ஒரு செயற்பாட்டின் போது நடை பெற்றவைகளாகும். அவை ஒழுங்குமுறைகள் இன்றி உள்ளதனால் அவற்றை ஒழுங்குபடுத்தும்போது வரும் சரியான விடையைத் தெரிவு செய்க.

அ - பூனை மரத்தில் ஏறுவதைக் கண்டது.
ஆ - மேலே பறந்ததும் பூனை கீழே விழுந்தது.
இ - பிடித்து சாப்பிட எண்ணி மரத்தில் ஏறியது.
ஈ - பூனை மரம் ஒன்றில் குருவியைக் கண்டது.
உ - தந்திரமாக அருகில் வரும் வரை பார்த்தது

1) ஈ, உ, அ, இ, ஆ 2) ஈ, இ, அ, உ, ஆ 3) அ, உ, ஆ, ஈ, இ

39. பின்வரும் வாக்கியங்கள் அனைத்துக்கும் பொருந்தக் கூடிய மிக நெருங்கிய இடமாகக் கூறக் கூடியது எது?

✠ வரிசையாக நின்று கருமங்கள் ஆற்றுதல்
✠ கொடுக்கல், வாங்கல் வேலைகள் மேற் கொள்ளல்
✠ இவற்றை இங்கு சேமித்து வைத்து எடுக்கலாம்

1) சுப்பர் மார்க்கட் 2) வங்கிகள் 3) மருந்தகம்

40. என்னிடமிருந்த மிட்டாய்களில் பகுதி அண்ணாவுக்கு கொடுத்த பின் எஞ்சிய தொகையில் $\frac{2}{3}$ பகுதியை தங்கைக்கு கொடுத்துவிட்டதும் எஞ்சிய மிட்டாய்கள் 10 ஆகும். அவற்றை நான் எடுத்துக் கொண்டேன் எனின் அண்ணாவுக்குக் கொடுத்த மிட்டாய்கள் எத்தனை?
1) 30 2) 20 3) 15

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

01) பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

காலிக் கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப்பழமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயின் வழியாக உள்ளே நுழைந்தோம் அங்கே புராதன ஆயுதங்கள் பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன.

1. காலிக்கோட்டை யாரால் அமைக்கப்பட்டது? .....
2. கோட்டையினுள் காணப்பட்டவற்றில் ஒன்றை எழுதுக?
.....
3. புதுமையான என்பதன் எதிர்கருத்து யாது? .....
4. காலிக் கோட்டை பார்ப்பதற்கு எவ்வாறு இருந்தது?
.....
5. காணப்பட்டன என்பதன் ஒருமை சொல்லாக எழுதுக? .....
6. மடக்கேறு, சங்கிலிக் கொம்பு, அரவு, விசிறி என்பன அமைந்த சொல் ஒன்று பந்தியில் இருந்து எழுதுக?
.....

02) பொருத்தமான சொற்களை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
1. தன்மை, பன்மை, வினை - (நாம் / செய்தேன் / வந்தோம்)
2. உயர்திணை, படர்க்கை, பலர்பால் - (மாமிமார் / மனிதன் / பறவைகள்)
3. விளையாடுகிறார்கள் - (பன்மை - இறந்தகாலம் / ஒருமை - நிகழ்காலம் / பன்மை - நிகழ்காலம்)

03) பின்வரும் வாக்கியங்களின் இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை இனங்கண்டு எழுதுக.
1. காட்டில் வாழ்ந்த மான் ..... பட்டு இறந்தது. (பாணம் / பானம்)
2. உடல் ஆரோக்கியத்திற்கு .....உணவுகளை தவிர்ப்போம். (ஊன் / ஊண்)

04) பின்வரும் குறியீடுகள் உணர்த்தும் கருத்தை எழுதுக.

1. _____
2.  _____
3.  _____

05) கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான மிகச் சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
1. குண்டுச் செம்பில் தண்ணீர் இருந்தும் குருவி குடிக்க முடியவில்லை. அது என்ன?
.....
2. நூலகம் எனும் சொல்லில் உள்ள உயிர்க்குறியின் பெயரை எழுத்தில் எழுதுக.
.....
3. யானைக்கு களிறு போல குதிரைக்கு .....
4. முகம் மலர்தல் எனும் மரபுச் சொல்லின் கருத்தை எழுதுக.
.....

06) பின்வரும் ஆங்கில வசனங்களின் கருத்தை தமிழில் எழுதுக.
1. Let us go out - .....
2. Please come here - .....
3. Are you ready - .....

07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
1. நான் நாளை வருவேன் - .....

08) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை எழுத்துக்களால் எழுதுக.
1. ..... 2. .....

09) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.
1. ம(ட்)ட வ(த்)துர தென்ன - .....
2. தும்புரிய ஸ்தானய - .....

10) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.
1. உங்களுடைய வயது எத்தனை? - .....

11) கீழ்வருவனவற்றை சிங்களத்தில் எவ்வாறு கூறப்படுகின்றது என்பதை தமிழில் எழுதுக.
1.

2. 
....

✠ **தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடை எழுதுக.**

12) இலக்கங்களில் எழுதுக.
1. முப்பத்தாறாயிரத்து நானூற்று நான்கு - .....

13) தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக.
1. 1396 - .....

14) வெற்றிடங்களை நிரப்புக.

i)

	மணி	நிமிடம்
	4	36
+	3	45

35.

	வருடம்	மாதம்	நாள்
	2015	4	15
–	2005	6	20

✠ **உருவில் பலகை துண்டுகள் அடுக்கப்பட்டுள்ள விதத்தை அவதானித்து விடை எழுதுக.**



(15ஆம் பக்கம் பார்க்க)

தினகரன் THINAKARAN தினகரன்

SLBC Sri Lanka Broadcasting Corporation

இணைந்த கல்விச் சேவை

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்

த. பேரின்பராஜா
கொழும்பு முன்னணி ஆசிரியர்

(14ஆம் பக்கத் தொடர்)

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

15) A பலகையின் நீளம் யாது? .....

16) B பலகையினதும், C பலகையினதும் மொத்த நீளம் யாது? .....

17) 520 விளையாட்டுப் பொருட்கள் 5 பெட்டிகளில் சமனான எண்ணிக்கைகளில் போடப்பட்டிருந்தன. எனின் ஒரு பெட்டியில் போடப்பட்டிருந்த விளையாட்டுப் பொருட்கள் எத்தனை? .....

அப்பா 5kg விசுக்கோத்து வாங்கி வந்தார். அவற்றில் $\frac{1}{5}$ பகுதியை எங்கள் வீட்டிற்கு தந்தார். மீதியில் 2kg விசுக்கோத்துக்களை பெரியம்மா வீட்டிற்கும் மிகுதியாகவுள்ளவற்றை 4 பகுதிகளாகப் பிரித்து அருகில் உள்ளவர்களுக்கு பகிர்ந்தளித்தார். எனின்

18) எங்கள் வீட்டிற்காக வைத்த விசுக்கோத்தின் நிறை எவ்வளவு? அதனை கிராமில் தருக?

.....

19) பக்கத்து வீட்டுக்காரர்களுக்காக கொடுக்கப்பட்ட விசுக்கோத்தின் ஒரு பகுதியின் நிறை என்ன? .....

பின்வரும் விலைப்பட்டியலை அவதானித்து விடை எழுதுக.

பொருட்கள்	அளவு	விலை	
		ரூ	00
அரிசி	1 kg	88	00
பருப்பு	500g	120	00
தேயிலை	250g	65	00
தே.எண்ணெய்	500ml	130	00
முட்டை	05	75	00

20) 1kg பருப்பின் விலை யாது?

.....

21) 2kg அரிசி, 3 முட்டை ஆகியவற்றை வாங்கினால் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

.....

22) ரூ. 260.00 பணத்திற்கு எத்தனை கிராம் தேயிலை வாங்கலாம்? .....

23) **17 : 48** இந்நியம நேரத்தை சாதாரண கடிகாரம் ஒன்றில் பார்க்கும் போது தோன்றும் நேரத்தை எழுதுக.

.....

பாடசாலை ஒன்றில் கலைவிழாவுக்காக 50ml கொண்ட சிறிய தண்ணீர் போத்தல்கள் 80 கொண்டு வரப்பட்டன. எனின்

24) கொண்டு வரப்பட்ட நீர்ப்போத்தல்கள் அனைத்திலும் உள்ள நீரின் அளவை லீற்றரில் எழுதுக.

.....

25) கொண்டு வரப்பட்ட போத்தல்களில் 35 போத்தல்கள் பயன்படுத்தப்பட்டன. எனின் மீதியாகவுள்ள தண்ணீர் போத்தல்களில் உள்ள நீரின் அளவு யாது?

.....

26) வட மேற்குத்திசைக்கும் வடகிழக்குத் திசைக்கும் இடையிலுள்ள திசையின் எதிர்திசையின் பெயரை எழுதுக.

.....

27)  2cm இடைவெளியில் ஆணிகளில் அமைந்துள்ள கேத்திரகணிதப் பலகை உருவில் காட்டப்பட்டுள்ளது. ஒரு மெல்லிய றப்பர் பட்டியினால் ஆணியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வடிவம் எத்தனை கட்டங்களை கொண்டது?

.....

28) 

1. இவ்வுருவினுள் காணக்கூடிய செங்கோணங்கள் எத்தனை?

.....

2. இவ்வுருவில் செங்கோணத்தை விட சிறிய கோணங்கள் எத்தனை? .....

29) 12 பூக்களில் $\frac{2}{4}$ இல் எத்தனை பூக்கள் உள்ளன? .....

30) ஒரு நாட்டுக்கு வைத்தியர்களது சேவை மிக அவசியமானது என்பதைக் கருத்திற் கொண்டு அரச வைத்தியர் எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (5 சொற்களுக்கு மேல் வாக்கியம் அமைக்க வேண்டும்).

1. .....
2. .....
3. .....

31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

31. எல்லாக் காலங்களிலும் பூக்கும் தாவரங்களை கொண்ட விடை யாது?
1) வேம்பு, தென்னை 2) இலுப்பை, முருங்கை 3) தென்னை, வாழை

32. தாவரங்களில் கூடு கட்டாத பிராணி எது?
1) கொக்கு 2) தூக்கணாங்குருவி 3) குயில்

33. தாவர இலைகளை உணவாக உண்ணும் பிராணிகள் கொண்டமைந்த விடையைத் தெரிவு செய்க.
1) மயிர்கொட்டி, நத்தை 2) நத்தை, புழுணி 3) மாடு, அணில்

34. உணவு பானங்களுக்கு மட்டுமன்றி மருந்தாகவும் இலைகளும், பூக்களும் பயன்படுத்தப்படும் தாவரங்கள் உள்ளன. அவற்றுள் அடங்கக் கூடியன
1) பொன்னாவரைப் பூ, வல்லாரை
2) சாத்தாவாரி, வேப்பிலை
3) வில்வப்பூ, திருக்கொன்றை

35. மனிதரையும் மனிதனுடைய பொருள்களையும் இடத்துக்கிடம் கொண்டு செல்ல உதவும் பிராணி எது?
1) குதிரை 2) புறா 3) யானை

36. ஒரு மாணவன் ஒரு நாட்டுக்காக ஆற்ற வேண்டிய கடமைகளுள் ஒன்றாகக் கருதக் கூடியது பின்வருவனவற்றுள் எது?
1) நாம் பயணம் செய்யுமிடங்களில் பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல்.
2) விஷேட தினம் மற்றும் நிகழ்வுகளின் போது பாடசாலைக்கு சமூகமளித்தல்.
3) இலவசமாக கிடைக்கும் பொருட்களை பேணி வைத்தல்

37. பண்டையக்கால விவசாய நடவடிக்கைகளின் போது பயிர்களைச் சேதப்படுத்தும் நத்தைகளை அழிக்கும் தன்மை கொண்ட பறவை எது?
1) ஆந்தை 2) கழுகு 3) செண்பகம்

38. பல நிறங்களில் உடல் அமைப்பு கொண்ட பிராணிகள் சூழலில் வாழ்கின்றன. அவ்வாறு உள்ள பறவை இனங்களில் கூறக்கூடியது எது?
1) கிளி 2) பாம்பு 3) மயில்

39. பந்தலில் வளரக் கூடிய உணவு வகைத் தாவரங்கள் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
1) பாகல், கத்தரி 2) பயிற்றை, புடொல் 3) புடோல், பாகல்

40. மண்ணரிப்பு காரணமாக ஏற்படத்தக்க விளைவுகளில் அடங்காத ஒன்று
1) அடி மண்ணின் வளம் குன்றும்
2) பயிர்கள் பாதிக்கப்படும்
3) ஆறுகளின் அடியில் மணல் நிரம்பும்

41.  அருகிலுள்ள உபகரணம் செயற்படுவதற்கு அவசியமாக தேவைப்படக் கூடியதாக பின்வருவனவற்றுள் எதைக் கருதலாம்
1) குண்டூசி 2) உலர் மின்கலம் 3) ஆணி

42. நாற்றுப் பண்ணையொன்றில் சிறந்த பழங்களைப் பெறுவதற்காக ஒட்டுக்கன்றுகள் நடப்படுகின்றன. அவ்வாறு ஒட்டு மூலம் நாற்றைப் பெறும் தாவரம் எது?
1) வள்ளிக்கிழங்கு 2) மா 3) றம்புட்டான்

43. தோசம் நீக்கிக் கொள்வதற்காக "பிரித் ஓதிய நீர்" தெளித்தல் எனும் சம்பிரதாயம் கொண்டவர் யார்?
1) பௌத்தர்கள் 2) முஸ்லிம்கள் 3) தமிழர்கள்

44. மஞ்சள் நிறப் பின்னணியுடன் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞையினால் வெளிப்படுத்தப்படும் கருத்து யாது?
1. நேரே செல்லக் கூடாது
2. இந்தப்பக்கம் செல்லத்தடை
3. வாகனம் செல்லத் தடை

45. அதிகமான பற்சில்லுகள் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருள் அல்லாதது எது
1) கடிகாரம் 2) சைக்கிள் 3) மோட்டார் வாகனம்

46. காந்தத்தைக் கொண்டு மகிழ்ச்சிகரமாக விளையாடக் கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்று
1) மின்தூக்கி 2) அசையும் வண்ணத்துப்பூச்சி 3) மின்மணி

47. ஆன்மீகத் தகுதிக்காக ஒவ்வொரு நாளும் பழகிக் கொள்ள வேண்டிய மனதை ஒரு நிலைப்படுத்தல். செயற்பாட்டில் பின்பற்றும் ஒழுங்கு முறைகளைச் சரியாகக் காட்டும் விடை எது?
1) உடலைத் தளர்த்தல் - மனதைத் தளர்த்தல், உறுதிப்பாடு, பிரார்த்தனை, உதிப்பு
2) மனதைத் தளர்த்தல், உடலைத் தளர்ததல், பிரார்த்தனை, உறுதிப்பாடு, உதிப்பு
3) உடலைத் தளர்த்தல், பிரார்த்தனை, மனதைத் தளர்த்தல், உதிப்பு, உறுதிப்பாடு

48. இன்று நகர்ப்புற வீடுகளிலும் சொகுசு வாகனங்களிலும் காற்று வரச் செய்வதற்காக பொருத்தப்படுகின்ற பொருள் எது?
1) மின்விசிறி 2) வளிபதனாக்கி 3) பூக்கற்கள் வைத்தல்

49. பாதையில் எவ்வாறான செயல்கள் மூலம் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.
1) பாதசாரிகள் வலது பக்கமாக செல்லல்
2) வாகனங்கள் இடது பக்கமாக செல்லல்
3) மேம்பாலங்கள் பயன்படுத்தல்

50. மின் - இலத்திரனியல் சார்ந்த பொருட்கள் எனப்படுபவை யாவை?
1) வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகை
2) சஞ்சிகை, கடிதம், பத்திரிகை
3) கணனி, தொலைக்காட்சி, தொலைபேசி

51. வீட்டுத்தோட்டத்திலிருந்து கழித்து ஒதுக்கப்படுகின்ற ஆக்கம் செய்யக் கூடிய தாவர பகுதிகள்.
1) தென்னஞ்சிரட்டை, வெங்காயத்தோல்
2) தேங்காய் உரிமட்டை, யோகட் கோப்பை
3) பூசணி வித்துக்கள், காய்கறிகள்

52.  அருகில் காட்டப்பட்டுள்ள செயற்பாட்டின் மூலம் நீங்கள் அவதானித்த விடயமாக கூறக் கூடியது.
1) மிதக்கும் தன்மை
2) திசையறி செயற்பாடு
3) விளையாட்டு

53. கலங்கல் தன்மை உடைய நீரை தெளிவான நீராகப் பெற நீங்கள் வகுப்பறையில் செய்த செயற்பாடு எது?
1) குளோரின் சேர்த்து நீரை வடித்தல்
2) மணல் படை, பரல்படை இட்டு நீரை வடித்தல்.
3) பஞ்சு, துணிகள் வைத்து நீரை வடித்தல்.

54. காகித பின்னல் வேலை மூலமாக நீங்கள் வகுப்பறையில் அமைத்துக் கொண்ட ஆக்கம் எது?
1) மீன் 2) சேவல் 3) முயல்

55. நெற்றாக விட்டு வித்துக்கள் பெறத்தக்க தாவரம் பின்வருவனவற்றுள் எது?
1) பூசணி 2) வெண்டி 3) புடொல்

56. வீட்டுத்தோட்டப்பயிர்ச் செய்கைபற்றி தகவல் பல தரக்கூடியவர்?
1) சமுர்த்தி அதிகாரி 2) கிராம அதிகாரி 3) விவசாய ஆலோசகர்

57. குறைந்தளவு நீர் அருந்துவதனால் ஏற்படும் அசௌகரியங்களில் ஒன்று.
1) தோல் ஈரத்தன்மை 2) சிறு நீரகச்சிக்கல் 3) பசி இன்மை

58. தாவீது என அழைக்கப்படும் கொங்காலேகொட பண்டாவுக்குரிய வேறு பெயர் ஒன்று.
1) பொலதீசாவ 2) பண்டளாகே டேவிட் 3) தெல்வல எத்தனஹாமி

59. ஊன் உண்ணி பிராணிகள் எனப்படுபவை?
1) நரி, நாய் 2) கோழி, புலி 3) தும்பி, நரி

60. திசைக்காட்டிக்கு அருகே சட்டக்காந்தம் ஒன்றை கொண்டு சென்ற போது அவதானிக்கப்பட்ட விடயம்.
1) திசைக்காட்டி முள் அசைந்தது. 2) அசையவில்லை 3) வடக்கு திசையை காட்டியது

20 வருடத்தில் முன்னெடுக்கப்படாத அளவு 94 சட்டங்களை திருத்த நடவடிக்கை

நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

சட்டங்களை புதுப்பிப்பதற்காக அவற்றை திருத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். கடந்த 20 வருடத்தில் நாம் மேற்கொண்டது போன்று 94 சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்படவில்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நீதி அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு,தொழில்நுட்ப அமைச்சு,அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ் வளிப்பு இராஜாங்க அமைச்சு, கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், அலரி மாளிகையில் கூடித்தான் கடந்த காலத்தில் எம்.பிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. புதிதாக சட்டம் கொண்டு வந்து தினமும் வழக்கு விசாரணை நடத்தினார்கள்.

ஜனாதிபதிக்கும். காமினி செனரத்திற்கும் எதிரான வழக்குகளில் நான் ஆஜரானேன். திலீப பீரிஸ் தான் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் ஆஜரானார். அவர்கள் வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் ஒருநாள் கூட நாம் சட்டமா அதிபருக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. முடிந்தால் அதனை நிரூபிக்கட்டும்.

நீதிமன்ற சுதந்திரம் இல்லாவிட்டால் அஸாத் சாலி விடுதலையாகியிருப்பாரா? சானிக்கு எதிராக வழக்கு தோற்றது. வழக்கு வெல்வதற்கு நாம் தலையிடுவதும் இல்லை தோற்பதற்கு தலையிடுவதுமில்லை. பாராளுமன்றத்தில் பேச இருக்கும் சுதந்திரத்தை பயன்படுத்தி வாய்க்கு வந்தவாறு பேசுகின்றனர். குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த முறைமையை மாற்ற வேண்டும். உங்கள் சிறப்புரிமையை மக்களின் நலனுக்காக பயன்படுத்துங்கள். நீதிமன்றத்தை கணனிமயமாக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது, 11 ஆக இருந்த உச்ச நீதிமன்ற நீதியரசர் குழாமை அதிகரித்துள்ளோம். வழக்கு தீர்ப்புகளை துரிதமாக வழங்க முடிந்துள்ளது. வெளியில் இருந்து யாரையும் நியமிக்கவில்லை. எமக்குத் தேவையான யாரையும் நியமிக்கவில்லை. தகைமைபடியே அனைவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். நீதிபதிகளினதும் நீதிமன்றங்களினதும் தொகையை அதிகரிக்கவும் நீதிமன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டங்களை இற்றைப்படுத்துவதற்காக அவற்றை திருத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். கடந்த 20 வருடத்தில் கூட 94 சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்படவில்லை.

ரவூப் ஹக்கீம் எம்.பி

பாகிஸ்தானில் இலங்கை பிரஜை ஒருவர் கொல்லப்பட்டமை வன்மையாக கண்டிக்கிறோம். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை தந்துள்ளது. இந்த குரூரமான கொலை மதத்தின் பெயரால் நடந்துள்ளது. அப்பாவி நபர் கொல்லப்பட்டுள்ளார். பாகிஸ்தான் பிரதமர் துரிதமாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரும் இதனை வரவேற்றுள்ளார். இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடக்கக் கூடாது. .முஸ்லிம்கள் கொவிட்டினால் இறந்த போதும் அவர் தலையிட்டிருந்தார். இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடக்கக்கூடாது.

பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாட அனைத்து நாடுகளும் பின்வாங்கிய போது எமது அணி அங்கு சென்று விளையாடியது. பயங்கரவாதத் தாக்குதலுக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. இதனையும் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அஸாத் சாலி ஊடக மாநாட்டில் இனங்களுக்கிடையில் முறுகல் ஏற்படுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்ததாக கைதாகி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டார். ஆனால் அவர் சொல்லாத விடயத்தை அடிப்படையாகக் கொண்டே அவர் மீது வழக்கு தொடர்பட்டது நீதிமன்றத்தில் நிரூபணமானது. நானும் இரு தடவைகள் நீதிமன்றம் சென்றேன். தவறான முறைப்பாடு செய்த எம்.பிகளுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் நியாயமாக செயற்பட வேண்டும்.

சுரேன் ராகவன் எம்.பி (பொ.ஜ.பெ)

இலங்கையில் அரசியல் கைதிகள் கிடையாது என எமக்கு தர்க்கத்திற்காக கூற முடியும். சிறையிலுள்ள அனைவரும் குற்றவாளிகளல்லர். வெளியில் உள்ள அனைவரும் நிராபராதிகள். சிறையில் பலர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிலர் தமது வாழ்நாளில் பாதிநாட்கள் சிறையில் உள்ளனர். எந்தக் குற்றச்சாட்டுகளும் இன்றி பலர் உள்ளனர். மக்களுக்கு நீதி தொடர்பில் நம்பிக்கை வர வேண்டும். ஜனாதிபதி தேசிய குழுவொன்றை நியமித்துள்ளார். அதன் செயற்பாடுகள் மெதுவாகவே நடக்கிறது. தமிழ். சிங்களவர், முஸ்லிம் அல்லது வெளிநாட்டவராக இருந்தாலும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

குற்றச்சாட்டற்றவர்களை விடுதலை செய்யவும் ஏனையவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கவும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

எம்.ஏ.சுமந்திரன் எம்.பி (த.தே.கூ)

நீதி அமைச்சர் தனது அமைச்சு பதவியை இராஜினாமா செய்ய முயற்சித்துக் கொண்டுள்ளதாக கடந்த காலங்களில் ஊடகங்களில் செய்தி வெளியாகின.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொடவை வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. காலஞ்சென்ற முன்னாள் ஆளுநர் ராஜா கொல்லுரேவிற்கு பதிலாக இவரை நியமிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காலஞ்சென்ற முன்னாள் ஆளுநர் ராஜா கொல்லுரேவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன். 11 இளைஞர் கடத்தல் மற்றும் திருகோணமலை கடற்படை முகாமில் அவர்களை கொலை செய்த வழக்கில் வசந்த கரன்னகொட சந்தேகநபராக உள்ளார். அவ்வாறான ஒருவரை சட்டமா அதிபர் அவசர அவசரமாக நியாயப்படுத்தி, அவரது வழக்குகளை நீக்கி அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கின்றார்.

இறந்தவர்களின் குடும்பத்தினர் இந்த செயற்பாடுகளுக்கு நியாயம் கோரி போராடிக்கொண்டுள்ள நிலையில் அதற்கான தீர்ப்பு கிடைக்கும் என நீண்ட காலமாக காத்திருந்து ஓரளவேனும் நீதி நிலைநாட்டப்படும் நிலையில் மீண்டும் பின்வாங்கப்பட்டுள்ளது. அவரை ஆளுநராக நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றப்பத்திரங்கள் மீளப்பெற்றுக்கொள்ளப்படுகின்றன. சட்டமா அதிபர் உண்மையில் சுயாதீன நபராக இருக்க வேண்டும், அரசியல் நியமனமாக இருந்தாலும் கூட செயற்பாடுகள் சுயாதீனமாக இருக்க வேண்டும்.

கஜேந்திரன் பொன்னம்பலம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் எம்.பி

கொலையாளிகளுக்கும் திருடர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படுகிறது. பதவி விலகிய முன்னாள் ராஜாங்க அமைச்சர் இன்று நீதி அமைச்சரின் பக்கத்தில் அமர்ந்துள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்றும் நீண்ட காலமாக சிறையில் உள்ளனர். குற்றவாளிகள் வெளியில் உள்ளனர். இதுதான் இலங்கையின் சட்டமாக உள்ளது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் தெரிவித்தார்.

இந்த நாட்டில் பாரிய குற்றவாளிகள், கொலைகாரர்கள், திருடர்களுக்கு குற்றத்தீர்ப்பு வழங்காது விடுதலை செய்யப்படும் நிலைமையே காணப்படுகின்றது. நாட்டின் நீதித்துறையின் தரம் மற்றும் பெறுமதி எந்தளவில் உள்ளது என்பதற்கு இவை நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது.

சிறைக்கைதிகள் முழுமையாக அரச கட்டுப்பாட்டில், அரச பாதுகாப்பில் இருப்பவர்கள். அவர்கள் சந்தேக நபர்கள் என்பது வேறு விடயம், ஆனால் அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்றும் நீண்ட காலமாக சிறையில் உள்ளனர். சர்வதேச நியமனங்களுக்கு அமைய ஏனைய நாடுகளில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் நபர்கள் எந்த காரணமும் இல்லாவிட்டால் நீண்டகாலம் தடுத்து வைக்கமாட்டார்கள்.

அதேபோல் இளம் பராயத்தினருக்கு புனர்வாழ்வு அளிக்கும் முகாம்கள் நாட்டில் பத்து இடங்களில் உள்ளன. ஆனால் வடக்கு கிழக்கில் அவ்வாறான முகாம்கள் இல்லை, இதனை நீதி அமைச்சர் கருத்தில் கொள்ள வேண்டும். அதேபோல் நீதிமன்ற கட்டமை பொறுத்தவரை, வடக்கு கிழக்கில் நீதிமன்றங்கள் உள்ளன. அங்கு சிங்கள மொழியில் அவை இயங்கிக்கொண்டுள்ளன, அங்கு சிங்கள மக்களின் இருப்பு காரணமாக சிங்கள நீதிமன்றமாக இயங்கிக்கொண்டுள்ளது. ஆனால் கொழும்பிலோ அல்லது தெற்கிலோ சகல நீதிமன்றங்களும் சிங்களத்தில் இயங்குவது நியாயமில்லை. தமிழர்கள் வாழும் மலையக பகுதிகளில் கூட முழுமையாக சிங்கள மொழியில் நீதிமன்றங்கள் இயங்கிக்கொண்டுள்ளன. ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு?

நிமல் சிறிபால டி சில்வா: தொழில் அமைச்சர்

தொழில் உரிமைகள் உள்ளிட்ட தொழிலாளர் தொடர்பான வழக்குகளை தாமதமின்றி விசாரணை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தொழில் நீதிமன்றங்களுக்கும் சம அதிகாரம் வழங்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம். அதன் மூலம் வழக்கு தாமதங்களை தவிர்க்க முடியும். நீதிமன்றத்திலிருந்து தொழில் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்ட 1300 வழக்கு விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட முடியும்.

தொழிலாளர்களுக்கு சட்ட உதவியை பெற்றுக் கொடுப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்கென தனி பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு சட்ட உதவி சேவையை அவர்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கு வழி வகை செய்யப்பட வேண்டும் என நான் நீதியமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இணக்க சபைகள் சிறந்த சேவைகளை முன்னெடுத்து வருகின்றன. இணக்க சபைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமானால் நீதிமன்றங்களின் நெருக்கடிகள் வெகுவாக குறையும்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு நவீன பொறிமுறை மாற்றத்தின் அவசியம் உணரப்பட்டுள்ளது

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

நாட்டின் முன்னேற்றத்திற்கு நவீன பொறிமுறை மாற்றத்தின் அவசியம் உணரப்பட்டுள்ளது. அதனை நடைமுறைப்படுத்துவதில் சட்ட ரீதியான தடைகள் இருக்குமானால் அதனை மாற்றுவதற்கும் தயார் என இளைஞர் விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 35 வீதத்தை இளைஞர்களை கட்டியெழுப்புவதற்காக பயன்படுத்துவதே அமைச்சின் நோக்கம் என தெரிவித்த அவர், இளைஞர்கள் தொழிலுக்காக எந்த நாடுகளுக்கு சென்றாலும் அதில் பிரச்சினை இல்லை. அதன் மூலம் நாட்டின் பொருளாதாரமே வளர்ச்சி அடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு, தொழில் நுட்ப அமைச்சு, அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த ராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சு பல்வேறு முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. ஏனைய அமைச்சுக்களோடு இணைந்து அவற்றை மேற்கொள்ள வேண்டிய தேவை இந்த அமைச்சுக்கு உள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் முழு உலகையும் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கி இருந்த நிலையில் கடந்த வருடத்தில் இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சின் மூலம் விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிராமிய மட்ட பயிற்சி நடவடிக்கைகள் அனைத்தும் தடையின்றி முன்னெடுக்கப்பட்டன.

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சும் இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இளைஞர்களின் தேவை கவனிக்கப்படாத நிலையிலேயே கடந்த காலங்களில் பெரும் நெருக்கடிகள் எழுந்துள்ளன. வடக்கிலும் தெற்கிலும் இரண்டு யுத்தங்கள் ஏற்படவும் அதுவே காரணமாக அமைந்துள்ளன.

எமது நாட்டில் தற்போது தொழில் வாய்ப்பற்ற இளைஞர்கள் 30 வீதம் உள்ளனர். அது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சுக்கு திறைசேரி மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 20 வீதத்தை மனித வள அபிவிருத்திக்காக செலவிடப்பட்டுள்ளது. கட்டடங்களை விட மனிதவள அபிவிருத்தியே இன்றைய தேவையாக உள்ளது.

பொறி முறை மாற்றம், இலஞ்ச ஊழல் ஒழிப்பை மேற்கொள்ளப்போவதாக கூறியே அப்போது எதிர்க்கட்சியினர் ஆட்சிக்கு வந்தனர். எனினும் அவர்களால் அதனை மேற்கொள்ள முடியாமல் போனது. அதற்கு காரணம் அரசியல் நோக்கத்தில் அவற்றை நோக்கியமையே. நாம் அதனை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

'ஒரு நாடு ஒரு சட்டம்' தொடர்பான செயலணியில் சுய மரியாதையுடன் தமிழர் எவரும் அங்கம் வகிக்க முடியாது

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

'ஒரு நாடு ஒரு சட்டம்' தொடர்பான செயலணியில் தமிழர் ஒருவர் நியமிக்கப்படாதது நல்ல விடயம். அந்த செயலணியில் சுய மரியாதையுடன தமிழர்கள் எவரும் அங்கம் வகிக்க முடியாதென தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நீதி அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு, அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு, மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

அதேபோல் நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்த, இன்னொரு வழக்கில் சந்தேகநபராக உள்ள ஒருவரை செயலணி ஒன்றின் தலைவராக அரசாங்கம் நியமித்துள்ளது. இதற்கு நீதி அமைச்சர் எதிர்ப்பை வெளிப்படுத்தியும் அதில் மாற்றம் ஏற்படவில்லை, அதேபோல் தமிழர்கள் இந்த செயலணியில் நியமிக்கப்படவில்லை, அது நல்ல விடயம் என்றே கருதுகின்றேன். சுய மரியாதையை கொண்டுள்ள எந்த தமிழரும் இந்த செயலணியில் அங்கம் பெற முடியாது. ஒரு சிலர் தமது சுய மரியாதையை இழந்து இந்த செயலணியில் உள்ளனர். ஆனால் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையிலுள்ள இந்த செயலணி ஒரு அநீதியான செயலணியாகும்.

அதிகார பரவலாக்கலை முன்னெடுப்போமென இந்தியாவுக்கு மூன்று சந்தர்ப்பங்களில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி வழங்கியுள்ளார். ஐ. நா செயலாளர் நாயகத்துடன் வெளியிட்ட கூட்டறிக்கையில் சர்வதேச சமூகத்திற்கும் தொடர்ச்சியாக இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார். அதிகார பரவலாக்கலை கண்டிப்பாக முன்னெடுப்போமென கூறி, 13 ஆம் திருத்தத்தின் மூலமாக இதனை கையாள்வோம், மாகாணங்களுக்கு ஏற்ற சட்டங்களை அவர்களே உருவாக்கும் அதிகாரத்தை வழங்குவோம் எனக்கூறி விட்டு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையை வகுப்பது நியாயமான ஒன்றல்ல. இது தற்போதைய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு முரணானது மட்டுமல்லாது, அத்தோடு சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறும் செயலாகும்.

இந்த செயலணியில் சுய மரியாதையுடன் தமிழர்கள் எவரும் அங்கம் வகிக்க முடியாது, அதுமட்டுமல்ல இந்த செயலணி உருவாக்கப்பட்ட வேளையில் கூட சுயமாக இதற்கு தமிழர்களை ஜனாதிபதி நியமிக்கவில்லை. இந்த நாட்டில் எமக்கும் சம உரிமைகள் உள்ளன, இது எமது நாடு, இங்கு நாம் எந்தவொரு இனத்தவருக்கும் அடுத்த படியான மக்களல்ல. எனவே தான் இதனை நாம் கண்டிக்கின்றோம். அதேபோல் நீதி அமைச்சருக்கு தனது சமூகத்திற்கு எதிராக செயற்பட முடியாது, எனவே நீங்கள் அமைச்சுப் பதவியை துறந்து வர வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

அரசாங்கத்தில் இருந்தவாறு நீதி அமைச்சர் போராட வேண்டும்

பதவி விலகுமாறு கோர மாட்டோம் ரவூப் ஹக்கீம் எம்.பி

நீதி அமைச்சர் அலி சப்ரி பதவி விலக வேண்டும் என சுமந்திரன் எம்.பி கோரினாலும் நாம் அவ்வாறு கோர மாட்டோம். அவர் அரசாங்கத்தில் இருந்து கொண்டு போராட வேண்டும் என்று கோருவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்தார்.

நீதி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர், பாகிஸ்தானில் நடந்த குரூரமான கொலையை வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்தார். இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடக்க இடமளிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

பாகிஸ்தானில் இலங்கை பிரஜை ஒருவர் கொல்லப்பட்டமை வன்மையாக கண்டிக்கிறோம். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை தந்துள்ளது. இந்த குரூரமான கொலை மதத்தின் பெயரால் நடந்துள்ளது. அப்பாவி நபர் கொல்லப்பட்டுள்ளார். பாகிஸ்தான் பிரதமர் துரிதமாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரும் இதனை வரவேற்றுள்ளார். இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடக்காதிருக்கக்கூடாது. முஸ்லிம்கள் கொவிட்டினால் இறந்த போதும் அவர் தலையிட்டிருந்தார். இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடக்காதிருக்கக்கூடாது.

பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாட அனைத்து நாடுகளும் பின்வாங்கிய போது எமது அணி அங்கு சென்று விளையாடியது. பயங்கரவாதத் தாக்குதலுக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. இதனையும் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அஸாத் சாலி ஊடக மாநாட்டில் இனங்களுக்கிடையில் முறுகல் ஏற்படுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்ததாக கைதாகி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டார். ஆனால் அவர் சொல்லாத விடயத்தை அடிப்படையாகக் கொண்டே அவர் மீது வழக்கு தொடர்பட்டது நீதிமன்றத்தில் நிரூபணமானது.நானும் இரு தடவைகள் நீதிமன்றம் சென்றேன். தவறான முறைப்பாடு செய்த எம்.பிகளுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் நியாயமாக செயற்பட வேண்டும்.

மின்சக்தி அமைச்சு
சூரியசக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி
கருத்திட்ட இராஜாங்க அமைச்சு
இலங்கை அனுசக்தி சபை

பெறுகை அறிவித்தல்

இணையதள அடிப்படையிலான தொழில்முயற்சி வள திட்டமிடல் அலுவலக தன்னியக்க அமைப்பை பெறுகை செய்தல்

இலங்கை அனுசக்தி சபையினால் கீழக்காணும் சேவைகளை வழங்குவதற்காக உள்ளூர் மென்பொருள் அபிவிருத்தி கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

* **Design, Development, Installation, Implementation, Hosting & Maintenance of Web Based Enterprise Resource Planning (ERP) Office Automation system**

மேலதிக விபரங்களுக்கு எமது உத்தியோகபூர்வ இணையதளமான www.aeb.gov.lk இற்கு பிரவேசியுங்கள்

தலைவர்,
திணைக்கள பெறுகை குழு,
இலங்கை அனுசக்தி சபை
60/460, பேஸ்லைன் வீதி,
ஒருகொடவத்த, வெல்லம்பிட்டி.
தொலைபேசி : 0112533427 நீடிப்பு 235
பெக்ஸ் : 0112075231
மின்னஞ்சல் முகவரி : procurement@aeb.gov.lk

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

மேட் இன் ஸ்ரீலங்கா வர்த்தக தலைவாயிலுக்காக தூதஞ்சல் கம்பனிகளை பதிவு செய்வதற்காக அழைப்பு

MADE IN SRI LANKA

நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் சந்தை தொடர்புகளை அபிவிருத்தி செய்வதற்கும் அனைத்து மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு ஒன்லைன் சந்தை வாய்ப்பை வழங்குவதற்காக ''மேட் இன் ஸ்ரீ-லங்கா'' என்ற வர்த்தக தலைவாயிலொன்றை தாபிப்பதற்காக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது. நாடளாவியரீதியில் பல பிரதேசங்களிலுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலுள்ள உற்பத்திகளை ஒப்படைத்தல் மற்றும் சேகரிப்பதற்காக தூதஞ்சல் கம்பனிகளுக்கு பதிவை மேற்கொள்ள இயலும். இந்த செயற்றிட்டத்திற்காக விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான தகைமைக்காக பின்வரும் தகைமைத்திறனை தூதஞ்சல் கம்பனிகள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

1. இலங்கையில் தூதஞ்சல் கம்பனியானது உள்ளூர் மற்றும் சர்வதேச செயற்பாடுகளை கொண்டிருத்தல் வேண்டும்.
2. பண்டங்களை சேகரித்து அவைகளை உள்ளூரிலும் பூகோள மட்டத்திலும் எடுத்துச் செல்வதற்காக கம்பனி/குழுமக் கம்பனிகள் தீவின் முழுவதற்கும் பயணம் செய்தல் வேண்டும்.
3. சித்திகரமான கம்பனி/ குழுமக் கம்பனிகள் ''மேட் இன் ஸ்ரீலங்கா'' வர்த்தக தலைவாயிலின் ஒருங்கிணைப்பிற்காக தேவையான அனைத்து API's சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கண்காணித்தல் முறைமை: ஒப்படைத்தல் இற்றைவரையாக்கல் (Proof of delivery) உடன் உள்ளூர்/சர்வதேச கப்பற் சரக்குகளை எடுத்துச் செல்லலை கண்காணித்தல்.
5. ஒப்படைத்தலின் வேகம்: தரமானதும் வேகமானதுமான கப்பற் சேவைகள் 5 இலிருந்து 7 நாட்களில் நிறைவேற்றப்படல் வேண்டும்.

தகுதியுள்ள கம்பனிகள் அவர்களின் விண்ணப்பங்களை 2021.12.24 ஆம் திகதிக்கு முன்னராக **madeinsrilanka.contact@gmail.com** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவலுக்காக, தொழில்முயற்சி ஊக்குவித்தல் அலுவலர் திரு. ரவீன் அவேசுந்தரவுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 071 700 2581.

தலைவர் / பணிப்பாளர் நாயகம்,
தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை,
இல. 561/3,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-05.

0115922990. தொலைநகல்: 011-2368393

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரிக்கும் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்பு சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இ ல : DSM/RT/LND/1/3/82
காணி அமைச்சின் குறியீட்டு இ ல : 4-3/7/2012/ එවිඩබ්/65

இ ங்கு கீழ் குறிப்பிடப்படும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை மாத்தளை - இ லுக்கும்புர - பல்லேகம வீதி விசாலமாக்கப் படுவதற்கான அரசாங்கம் சுவீகரிக்க ஏற்பாடுளைச் செய்கின்றது. மேலதிக விபரங்கள் தொடர்பாக இ ல 2235/24 கொண்ட 2021.07.06 திகதி இ லங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட கசாட் பத்திரிகையைப் பார்க்கவும்.

மாவட்டம்	: மாத்தளை
பிரதேச செயலாளர் பிரிவு	: இறத்தோட்டை
கிராம சேவை அலவலர் பிரிவு	: இறத்தோட்டை
ஊர் பெயர்	: இறத்தோட்டை
காணியின் பெயர்	: வர்த்தமானப் பத்திரகையில் உள்ளபடி
அளவு	: 0.4199 ஹெக்டயார்
துண்டு இ லக்கம்	: 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65
திட்டமிடல் இ லக்கம்	: ஆரம்ப வரைபட இல மா. 1757
முகவரி	: பிரதேசச் செயலகம், இறத்தோட்டை.

திகதி : 2021/11/29

பிரதேச செயலாளர்
இறத்தோட்டை

றுஹுண பல்கலைக்கழகம்

2022 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை/ ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2022 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்பிட்டுள்ள பண்டங்கள் / சேவைகள்/வேலைகளை வழங்குவதற்காக றுஹுண பல்கலைக்கழகத்துடன் பதிவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள்/சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை றுஹுண பல்கலைக்கழக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் விண்ணப்பங்களை அழைக்கின்றார்.

2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக http://www.ruh.ac.lk என்ற இணையத்தளத்தின் ஒன்லைனில் விண்ணப்பங்கள் அச்சடிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படலாம். விண்ணப்பங்கள் ஒன்லைனில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு பண்டங்கள் /சேவைகள்/வேலைகளின் வகுதியை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்கள் வியாபார பதிவின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை (PDF format) உரிய முறையில் ஒன்லைனில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமொன்றையும் இணைத்தல் வேண்டும். மேலதிகமாக, நிர்மாண ஒப்பந்தங்களை பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர் ஸ்கேன் செய்யப்பட்ட CIDA பதிவின் பிரதியொன்றையும் இணைத்தல் வேண்டும்.

அனைத்து வழங்கல்கள்/வேலைகள்/சேவைகளுக்கும் ஒரு மாத கடன் வசதி வழங்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வகுதிக்குமான ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் மீளளிக்கப்படாத கட்டணமாக 750 ரூபாவிற்கான பணக்கொடுப்பனவை செலுத்திய பணவைப்பு துண்டுடன் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் பணவைப்பு துண்டானது மேலேயுள்ள இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாமென்பதுடன் பணக்கொடுப்பனவானது விண்ணப்பத்தை பூர்த்தி செய்த பின்னர் வெளிவரும் கணக்கு குறிப்பீட்டு இலக்கத்தை பாவித்து மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் பணவைப்பு மேற்கொள்ளப்படலாம். பணக்கொடுப்பனவானது 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மேற்கொள்ளப்படல் வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

உரித்தான சான்றிதழ்களுடனான விண்ணப்பத்தின் வன்பிரதியானது பணக்கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஆகியன தேவையேற்படின் பல்கலைக் கழகத்திற்கு சமர்ப்பிப்பதற்காக விண்ணப்பதாரிகளுடன் வைத்திருக்கப்படல் வேண்டும்.

ஆர்வமுள்ள வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்கள்/சேவை வழங்குநர்கள் மேலதிக தகவலை 041-2227027 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக வழங்கலுக்கான சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

றுஹுண பல்கலைக்கழகமானது **Zoom** கூட்டமொன்றை மேலதிக கலந்துரையாடலுக்காக ஒழுங்கு செய்துள்ளது. எனவே, ஆர்வமுள்ள வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்கள்/ சேவை வழங்குநர்கள் பின்வரும் தொடர்பை பாவித்து Zoom கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றனர்.

Topic: Suppliers/Contractors Registration
Time: Dec 22, 2021 at 10.00 A.M. at Colombo.

Join Zoom Meeting:
https://zoom.us/j/92309363900?pwd=bWVqelVDLohmUkFsNTFxMThFSzdlU09

Meeting ID: 92309363900
Passcode : 801263

பிரதான பண்டங்களின் வகுதிகள்:

சி-1. கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள்: மேசைக் கணனிகள், மடிக் கணனி அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், யுபிஎஸ், வலையமைப்பு ஆளிகள் மற்றும் வலையமைப்பு துணையுறுப்புக்கள், சேர்வர்கள் மற்றும் ஏனைய துணையுறுப்புக்கள், இன்னும் பலவும்.

சி-2. அலுவலக உபகரணங்கள்: நிழற்படபிரதியாக்கல் இயந்திரங்கள், டுப்பிளிக் கேட்டிங் இயந்திரங்கள், கொலேட்டர், தொலைபேசிகள் மற்றும் தொலைநகல் இயந்திரங்கள், துணையுறுப்புக்கள், இன்னும் பலவும்.

சி-3. தளபாடம் - உருக்கு மேசைகள், கட்டில்கள், அடுக்கு கட்டில்கள், சுவர் கப்போட்டுக்கள், கதிரைகள், அலுமாரிகள், ஸ்டூல்கள், புத்தக தட்டுக்கள், கோவைகளுக்கான கபினெட்டுக்கள், கப்போட்டுக்கள் மற்றும் ஏனைய உருக்கு தளபாடம்.

சி-4. தளபாடம் - பலகை கட்டில்கள், மேசைகள், கதிரைகள், அலுமாரிகள், ஸ்டூல்கள், சுவர் கப்போட்டுக்கள், ஷோபா, செட்டி மற்றும் ஏனைய பலகையிலான தளபாடம்.

சி-5. இழைநார் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திகள் மேசைகள், கதிரைகள், பெயர் பலகைகள், நீர் தாங்கிகள் மற்றும் ஏனைய இழைநார் / பிளாஸ்டிக் பண்டங்கள்.

சி-6. ஆய்வுகூட உபகரணங்கள் விஞ்ஞானம், கடற்றொழில், பொறியியல் மற்றும் கமத்தொழில் ரீதியிலான ஆய்வு கூடங்களுக்கான உபகரணங்கள்

சி-7. மருத்துவ உபகரணங்கள் அனைத்து வகையான மருத்துவ உபகரணங்கள்

சி-8. கற்பித்தல் மற்றும் வேலைப்பட்டறை உபகரணங்கள் கற்பித்தல் மற்றும் பொது அறிவு ஆகியவற்றில் பாவிக்கப்படும் அனைத்து இன உபகரணங்கள் மற்றும் கருவிகள்.

சி-9. வளிச்சீராக்கிகள் மற்றும் துணையுறுப்புக்கள் அனைத்து இன வளிச்சீராக்கிகள் மற்றும் துணையுறுப்புக்கள்

சி-10. மின்னியல் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் உறையவைப்பான்கள், குளிரூட்டிகள், விசிறிகள், தொலைக்காட்சிகள், நீர் கொதிகலன்கள், சோற்றிற்கான குக்கர்கள், சுவர் மணிக்கூடுகள் மற்றும் மேசை கடிகாரங்கள் இன்னும் பலவும் அயன்கள், கேத்தல்கள், வடிகட்டிகள், கொதிகலன்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், இன்னும் பலவும்.

சி-11. புகைப்படக்கருவிகள் புகைப்படக்கருவிகள், வீடியோ புகைப்படக்கருவி மற்றும் துணைப்பாகங்கள்.

சி12. பாதுகாப்பு முறைமைகள் CCTV புகைப்படக்கருவிகள் மற்றும் துணைப்பாகங்கள்

சி-13. புத்தகங்கள், பருவவெளியீடுகள் மற்றும் ஏனைய பிரசுரங்கள்

சி-14. விளையாட்டுத்துறை பண்டங்கள் மற்றும் உருப்படிகள்

சி-15. சமையலறை, பாத்திரங்கள் மற்றும் வெட்டுக்கருவிகள் மட்பாண்டம் /கண்ணாடி /பிளாஸ்டிக் / துருப்பிடிக்காத உருக்கு /அலுமீனியம் / சமையலறை பாத்திரங்கள் மற்றும் வெட்டுக்கருவிகள்.

சி-16. பல்கலைக்கழக விழாக்களுக்கான உருப்படிகள் மேலாடைகள், மாலைகள் இன்னும் பலவும்.

சி-17. பாதுகாப்பு உபகரணம் தலைக்கவசம், காப்பு மூக்குக் கண்ணாடி, பாதுகாப்பு சப்பாத்துக்கள் மற்றும் ஆடைகள், பூட்சுக்கள், கையுறைகள், உயிர்காக்கும் ஜக்கெட்டுக்கள், இன்னும் பலவும்.

தொடர்ச்சியாக பாவிக்கும் உருப்படிகளின் வகுதிகள்

ஆர்-1. காகிதாதி மற்றும் அலுவலக நுகர் பொருட்கள் கணக்கிடல் இயந்திரங்கள், ஸ்டேப்பிளர்ஸ், பஞ்சர்கள், பென் ட்ரைவ்கள், சி.ஆர். புத்தகங்கள்,நிழற்படபிரதியாக்கல் இயந்திரங்கள், ரவ் தாள்கள் (rough sheets), ஹாவ்சீட்ஸ், தபாலுறைகள், பென்சில்கள், அழிறப்பர்கள், போல்பொயிண்ட் பேனாக்கள், கிளிப்கள், குண்டூசிகள், வெற்று இறுவட்டுக்கள் மற்றும் டிவிடிக்கள், இன்னும் பலவும். அடங்கலான அனைத்து இன காகிதாதிகள்.

ஆர்-2. டோனர் காட்ரிஜ்கள் மற்றும் மாஸ்டர் ரோல்கள் அனைத்து இன டோனர் காட்ரிஜ்கள், மை, மாஸ்டர் ரோல், இன்னும் பலவும்

ஆர்-3 ஆய்வுகூட இரசாயனங்கள் விஞ்ஞானம், மருத்துவ, கடற்றொழில்,பொறியியல் மற்றும் கமத்தொழில் ஆய்வுகூடங்கள் ஆகியவற்றிற்கான அனைத்து இன இரசாயனங்கள்.

ஆர்-4 Cell Culture materials

ஆர்-5 ஆய்வுகூட பொதுவான இரசாயனங்கள்

ஆர்-6 ஆய்வுகூட கண்ணாடிப் பொருட்கள் விஞ்ஞானம், மருத்துவ, கடற்றொழில், பொறியியல் மற்றும் கமத்தொழில் ஆய்வுகூடங்கள் ஆகியவற்றிற்கான அனைத்து கண்ணாடிப் பொருட்கள்.

ஆர்-7 சுத்திகரிப்பு உருப்படிகள் கிருமிநாசினிகள், சலவைப் பொருட்கள், சவர்க்காரம்/ கழிவறைத் தாள்கள்

ஆர்-8 மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்குமான அனைத்து இன உதிரிப் பாகங்கள்.

ஆர்-9 ரயர்கள் மற்றும் ரியுப்புக்கள் மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான இன டயர்கள் மற்றும் ரியுப்புக்கள்.

ஆர்-10 புத்தகங்களை கட்டுவதற்கான பொருட்கள்

ஆர்-11 உரம் மற்றும் அக்ரோ இரசாயனங்கள்

ஆர்-12 விலங்குணவு மற்றும் கால்நடைகளுக்கான ஔடதங்கள்

ஆர்-13 சீருடை துணிகள் மற்றும் சீருடை உருப்படிகள் மழைக்கோட்டுக்கள், பூட்ஸ்கள், சப்பாத்துக்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள்

ஆர்-14 திரைச்சீலை பொருட்கள் மற்றும் உருப்படிகள்

ஆர்-15 மருத்துவ மற்றும் பற்சிகிச்சை உருப்படிகள் மருத்துவ ஔடதங்கள் மற்றும் சத்திரசிகிச்சை உருப்படிகள்

ஆர்-16 மின்னியல் கம்பி பதித்தல் மற்றும் இணைப்புக்கள் ஆளிகள், ஹோல்டர்கள், விளக்குகள் மற்றும் இணைப்புக்கள்,circuit breakers, surge arrestors, விநியோகப் பலகைகள், கம்பிகள் மற்றும் வடங்கள், இன்னும் பலவும்.

ஆர்-17 கட்டிடப் பொருட்கள் செங்கற்கள், கல், ஆற்று மணல், செம்மண், கிறவல், ஓடுகள், அரியப்பட்ட பலகை, பித்தளை இணைப்புக்கள், பிணைச்சல்கள், கதவு பூட்டுக்கள்,casement stays, fasteners, tower bolts, Sheets (asbestos, plastic, formica, zn-aluminium sheets இன்னும் பலவும். வயர் மெஷ், வயர் நெட்டிங்ஸ், கண்ணாடி (Plain, tinted and pin head)கழுவும் பேசன்கள், குளியலறை இணைப்புக்கள், சீமெந்து இன்னும் பலவும்.

ஆர்-18 அரிந்த பலகை (உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்டது)

ஆர்-19 சீமெந்து உற்பத்திகள் சீமெந்து புளொக்குகள், வேலித் தூண்கள், compost bins, பூச்சாடிகள், இன்னும் பலவும்.

ஆர்-20 பொதுவான ஹாட்வெயார் உருப்படிகள் Bolts and Nuts, washers, wire nails, iron screws, padlocks, buckets, rubber hoses etc., bicycles and spares, brushes, tools (agricultural & others), all types of paints, PVC pipes & fittings, GI Pipes etc.,

ஆர்-21 வாகன பட்டரிகள் மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான அனைத்து இன பட்டரிகள்.

ஆர்-22 புளொக்குகள், இறப்பர் சீல்கள் மற்றும் திகதி முத்திரைகள்

ஆர்-23 தீ அணைப்பு கருவிகள் தீ அணைப்பு கருவிகள்,fire hoses etc.,

சேவைகளின் வகுதிகள்

எஸ்-1 புத்தகங்கள் /பதிவுப் புத்தகங்களின் அச்சிடல் மற்றும் கட்டுதல்.

எஸ்-2 அடையாள அட்டைகளை அச்சிடல் மற்றும் வழங்கல்

எஸ்-3 அலுவலக உபகரணங்களை திருத்துதல் நிழற்படபிரதியாக்கும் இயந்திரங்கள், அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், மல்டிமீடியாக புரஜெக்டர்கள், டுப்ளோ இயந்திரங்கள்,o.h.p., தொலைநகல் இயந்திரம், தொலைபேசிகள் மற்றும் தட்டெழுத்து இயந்திரங்கள்.

எஸ்-4 ஆய்வுகூட இயந்திரங்களை திருத்துதல்

எஸ்-5 மோட்டார் வாகனங்களின் சேவை மற்றும் உராய்வு நீக்கம் செய்தல்

எஸ்-6 மோட்டார் சைக்கிள்களின் சேவை மற்றும் உராய்வு நீக்கம் செய்தல்

எஸ்-7 முச்சக்கர வண்டிகளின் சேவை மற்றும் உராய்வு நீக்கம் செய்தல்

எஸ்-8 மோட்டார் வாகனங்களின் திருத்தம்

எஸ்-9 மோட்டார் சைக்கிள்களின் திருத்தம்

எஸ்-10 முச்சக்கர வண்டிகளின் திருத்தம்

எஸ்-11 கணனிகள் மற்றும் வலையமைப்பு துணையுறுப்புக்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு

எஸ்-12 மின்னியல் மற்றும் இலத்திரனியல் சாதனங்களின் திருத்தம்

எஸ்-13 வளிச்சீராக்கிகள்/குளிரூட்டிகள் /உறைய வைப்பான் களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு

எஸ்-14 போக்குவரத்து சேவை கெப் சேவைகள், அனைத்து இன பஸ்கள், பயணிகள் வேன்கள் மற்றும் லொறிகள் இன்னும் பலவும்.

எஸ்-15 வாயு வழங்கல் முறைமையின் திருத்தம் மற்றும் பராமரிப்பு

எஸ்-16 நிழற்படமெடுத்தல் சேவை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இயங்காநிலை நிழற்படமெடுத்தல், வீடியோ, நடமாடும் ஸ்டுடியோ சேவை ஆகியன.

எஸ்-17 Supply of Earth Movers
Renting JCB, forklift etc.,

டபிள்யு. ஒப்பந்தம்/வேலைகளின் வகுதிகள்

டபிள்யு 1. நிர்மாணங்கள், கட்டிடங்களின் புனர்நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டமைப்புக்கள் மற்றும் வீதி. கட்டிடங்கள், வீதிகள், ஆய்வுகூடங்கள், விடுதிகள், இல்லங்கள், உணவுக்கூடங்கள் இன்னும் பலவும்.

டபிள்யு 2. சி-1 இலிருந்து சி-9 வரையும் ICTAD பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.

டபிள்யு 3. ஈஎம்-1 இலிருந்து ஈஎம்-3 வரையுள்ள வகுதி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.

"தயவு செய்து உரித்தான வகுதிக்கு மாத்திரம் பதிவு செய்யவும்"

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
றுஹுண பல்கலைக்கழகம்,
வெல்லமடம,
மாத்தறை.
2021 டிசம்பர் 10 ஆம் திகதியன்று.

விலைமனுக் கோரல்
சீத்தாவக்க பிரதேச சபை - ஹங்வெல்ல

சீத்தாவக்க பிரதேச சபையினால் வருடாந்தம் செயற்படுத்தப்படும் கூரைத்தகடு விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மலசலகூட துணைப் பொருட்களை விநியோகிக்கும் நிகழ்விற்காக தேவைப்படும் கீழ்க்காணும் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- 10 அடி அஸ்பெஸ்டஸ் சீட் - 1000
- மலசலகூட சாடி - 80
- சீமெந்து மூடை - 300
- புளொக்கல் - 6400
- விட்டம் 03 அடி உயரம் 02 அடி மலசலகூட குழிகளுக்கான கொங்கிறீட் சிலின்டர் - 20
- கொங்கிறீட் சிலின்டருக்கான மூடி - 05

உங்களது விலைமனுக்கள் 2021.12.22 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், சீத்தாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தை சீத்தாவக்க பிரதேச சபை, தலைமையகத்தில் வார நாட்களில் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் இது பற்றிய விபரங்கள் விண்ணப்பத்துடன் வழங்கப்படும்.

விலைமனுக்கள் திறத்தல் 2021.12.22 பி.ப. 2.00 இற்கு சீத்தாவக்க பிரதேச சபை கமிட்டி மண்டபத்தில் இடம் பெறுவதுடன் அவ் வேளையில் விலைமனுதாரருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். விலைமனுக்கள் பற்றிய இறுதித் தீர்மானம் சீத்தாவக்க பிரதேச சபையின் கேள்விக் கமிட்டிக்கு உரித்தாவதுடன் குறித்த நேரத்தின் பின்பு கிடைக்கும் விலைமனுக்கல் நிராகரிக்கப்படும்.

ஜீ. ஜயந்த ரோஹன
தலைவர், சீத்தாவக்க பிரதேச சபை,
ஹங்வெல்ல.
2021.12.08

எம்.எஸ். பெரேரா அன்ட் சன்

அடகுப் பொருட்கள் நிலையம், மூடிவிடுதல் பற்றிய அறிவித்தல்

மேலே குறிப்பிடப்படும் எமது நிறுவனம் 2021.12.30ம் திகதி முதல் அடகுப் பொருள் வர்த்தக விடயங்களை முடிவுக்குக் கொண்டுவருவதாக அறிவித்துக்கொள்கிறோம்.

எம். காமினி பெரேரா,
எம்.எஸ். பெரேரா அன்ட் சன்
அடகுப் பொருட்கள் நிலையம்,
345, பியகம வீதி, சிங்காரமுல்லை,
களனி.
2021.12.08

விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருவதாவது மஹரகம, நாவின்ன ரஜமஹ விகார வீதி, இல. 103 என்ற விலாசத்தில் **வசிக்கும் களுஆராச்சிகே ரொஹான் விஜேசிறி** ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு **மத்துமாகே தோன் விஜயபால** அவர்களால் 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 3327 என்ற விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் பாணந்துறை, வெகட, பண்டாரநாயக்க மாவத்தை, இல. 8/2V என்ற விலாசத்தில் வசிக்கும் **கஹபல ஆராச்சிகே நிரோஷன பர்னாந்து** என்பவருக்கு அளிக்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. மேற்குறித்த அற்றோணித் தத்துவக்காரர் மூலம் இதன் பின் எனக்காக செய்யப்படும் சகல செயற்பாடுகளுக்கு நான் பொறுப்பாளியல்ல என்பதை அறியத்தருகிறேன்.

களுஆராச்சிகே ரொஹான் விஜேசிறி
2021.12.02

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரிக்கும் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்பு சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : DSM/RT/LND/1/3/81
காணி அமைச்சின் குறியீட்டு இல : *4-3/7/2012/ එච්ඩබ්/65*

இங்கு கீழ் குறிப்பிடப்படும் உப அட்டணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை மாத்தளை - இலுக்கும்புர - பல்லேகம வீதி விசாலமாக்கப் படுவதற்கான அரசாங்கம் சுவீகரிக்க ஏற்பாடுகளைச் செய்கின்றது. மேலதிக விபரங்கள் தொடர்பாக இல 2235/24 கொண்ட 2021.07.06 திகதி இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட கசாட் பத்திரிகையைப் பார்க்கவும்.

மாவட்டம் : மாத்தளை
மக்கள் வங்கி
பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை
வெலிகம கிளை (077)

காணித்துண்டம்: தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலக பிரிவில் மாத்தறை மாநகர சபை எல்லைகளினுள் வருகின்ற இல. 420-D - ஹிட்டெட்டியா - கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஹிட்டெட்டியாவில் அமைந்துள்ளதும், டிக்கிரி அப்புவேவவத்த மற்றும் அபஞ்சிகேவத்த, மறுபெயர் தேக்கவத்த எனவழைக்கப்படுவதும், நிலஅளவையாளர் தலைமையதிபதியின் 820008 ஆம் இலக்க காணி வரைபடத்தில் இல.01 எனும் தொகுதியிலுள்ள 0204 எனும் காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்று ஒன்பது ஒன்பது ஹெக்டேயர்கள் (H-0.0199) இது மாத்தறை காணிப்பதிவகத்தில் 00170012994 ஆம் இலக்க உரித்து சான்றிதழில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் அதே இடத்தில் 2021 டிசம்பர் 28 ஆந்திகதி பி.ப.3.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

ஏலவிற்பனையானது, கொவிட் 19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக -: 2021.11.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.11.18 ஆந் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

ஆதனத்துக்கான அணுகுவழி -: மாத்தறை நகரத்திலிருந்து ஹக்மன செல்லும் வழியில் 1.5 கிலோமீற்றர் தூரம் பயணித்து, அங்கிருந்து, குமாரதாச மாவத்தைக்குச் சென்று, சுமார் 900 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள முச்சலிந்த பிரிவெனாவுக்குச் செல்லம்போது பினிதிய சந்தி உள்ளது. சொல்லப்பட்ட அச்சந்தியிலிருந்து சுமார் 15 மீற்றர்கள் பயணிக்கும் போது வீதியின் இடப்புறமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

கொடுப்பனவு செய்யும் முறை - ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியின் 01%
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுநர் கட்டணம் 1000/=
5. விற்பனையின் மொத்தச் செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனையின் சான்றுப்படுத்தலுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல. 215, அநகாரிக தர்மபால மாவத்தை, நுபே, மாத்தறை எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி : 041-2223437 / 0414922605
தொலைநகல் : 0412222601

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற் குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

11/55, போகஹவத்த,
குடாபுத்கமுவ, அங்கொட
தொலைபேசி: 011 2053286
072 3207533, 076 9217329

ஈ.எஸ். ராமநாயக்க,
நீதிமன்ற ஆணையாளரும்
உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
மதிப்பீட்டாளர் மற்றும்
(அகில இலங்கை சமாதான நீதவான்)

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான விற்பனை.

மக்கள் வங்கி
பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை
வெலிகம கிளை (077)

காணித்துண்டம்: தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தறை மாநகர சபை எல்லைகளினுள் மாத்தறையின் நான்கு பட்டணங்களினுள் வருகின்ற இல: 411A - மடிஹ - மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள மடிஹயில் அமைந்துள்ளதும், அநகாரிக தர்மபால மாவத்தையில் இல.1004 எனும் வரிமதிப்பீட்டிலக்கத்தை கொண்டுள்ளதும், ராஜபக்ஷ லியத்த எனவழைக்கப்படுவதுமான காணிக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். விமலசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1980-11-14ஆந் திகதிய 2269ஆம் வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கிய இலக்கம் 05 என்ற காணித்துண்டுக்கு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். அபேஸிங்ஹ என்பவரினால் மீண்டும் தயாரிக்கப்பட்ட 2011-10-11ஆந் திகதிய 92/2011 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 5' எனும் காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் பாதையுரிமையுடன் சேர்த்து பத்து தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சுக்கள் (A-0, R-0, P-10.05) இது மாத்தறை காணிப்பதிவகத்தில் A 905/89 எனும் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் அதே இடத்தில் 2021 டிசம்பர் 28 ஆந்திகதி மு.ப.10.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

ஏலவிற்பனையானது, கொவிட் 19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக -: 2021.11.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.11.16 ஆந் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

ஆதனத்துக்கான அணுகுவழி -: மாத்தறை, காலி வீதியிலிருந்து சுமார் 3.3 கிலோமீற்றர் செல்லும்போது வல்கம சந்தியை அடைய முடியும். அங்கிருந்து சுமார் 600 மீற்றர்கள் பயணிக்கும்போது இந்த ஆதனம் வீதியின் தெற்குத் திசை நோக்கி அமைந்துள்ளது.

கொடுப்பனவு செய்யும் முறை - ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியின் 01%
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுநர் கட்டணம் 1000/=
5. விற்பனையின் மொத்தச் செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனையின் சான்றுப்படுத்துகைக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல. 215, அநகாரிக தர்மபால மாவத்தை, நுபே, மாத்தறை எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி : 041-2223437 / 0414922605
தொலைநகல் : 0414922601

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் (10%) தொகையை மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற் குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

11/55, போகஹவத்த,
குடாபுத்கமுவ, அங்கொட
தொலைபேசி: 011 2053286
072 3207533, 076 9217329

ஈ.எஸ். ராமநாயக்க,
நீதிமன்ற ஆணையாளரும்
உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
மதிப்பீட்டாளர் மற்றும்
(அகில இலங்கை சமாதான நீதவான்)

எல் பீ ∴பினான்ஸ் பி.எல்.சி
பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ∴பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலவிற்பனைத் திகதி		முகவரி
03/10/18/24	ஜனவரி 2022	இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 434, ஈடபிள்யூபெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 19, பிரதான வீதி, கேகாலை.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 81, கண்டி வீதி, வரகாபொல.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 149, பிரதான வீதி, தெனியாய.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 66, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம.
03/10/18/24	ஜனவரி 2022	ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம்.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம்.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 26, கண்டி வீதி, மதவாச்சி.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை.
03/10/18/24	ஜனவரி 2022	பிரதான வீதி, மெதிரிகிரிய.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 96, அகலவத்த வீதி, மத்துகம.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 87, பிரதான வீதி, பிட்டிகல.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய.
03/10/18/24	ஜனவரி 2022	இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம்.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம்.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 75A, சிலாபம் வீதி, மாரவில.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 661/A, தேவத்த வீதி, ராகம.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 39, கொழும்பு வீதி, கந்தானை.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை
04/11/19/25	ஜனவரி 2022	இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 145, மலே வீதி, கொழும்பு 02.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 66, காலி வீதி, கல்கிசை.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 54, டி.எஸ்.சேனநாயக்க மாவத்தை, பொரளை.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 10, ஸ்டேசன் வீதி, மொரட்டுவ.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ.
04/11/19/25	ஜனவரி 2022	இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல்.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல்.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 21, தம்புளை வீதி, குருநாகல்.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 31, குருநாகல் வீதி, கலேவெல.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய
05/12/20/26	ஜனவரி 2022	இல. 69, தெஹிவளை வீதி, மஹாரகம.
05/12/20/26	ஜனவரி 2022	இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம
05/12/20/26	ஜனவரி 2022	இல. 124/A, தட்டுகெமுனு வீதி, கொஹுவ

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன் மற்றும் குழுவினருக்கும் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வரும் , பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நசீர் அஹமடின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (08) விருந்துபசாரம் வழங்கப்பட்டது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான நசீர் அஹமட், H.M.M ஹாரிஸ், பைசல் காசிம் , அலிசப்ரி ரஹீம், தௌபீக், இஸ்ஹாக் ரகுமான்,முஷர்ரப்,காதர் மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் உள்ளிட்ட குழுவினருக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (08) இரவு கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி மற்றும் முன்னாள் மேல்மாகாண சபை ஆளுநர் ஆசாத் சாலி உள்ளிட்டோருடன், மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் நாயகம் சுபைர்தீன், பொருளாளர் ஹுசைன் பைலா, சிரேஷ்ட சட்டத்தரணிகளான சஹீட், ருஸ்தி ஹபீப், கட்சியின் முக்கியஸ்தர்களான கலாநிதி யூசுப் மரைக்கார், கலாநிதி அனீஸ் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், ரியாஸ் சாலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரச ஒவிய சிற்ப விழா 2020 நேற்று (9) மாலை மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றபோது தேசிய மரபுரிமைகள் மற்றும் கிராமியச் சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அமைச்சின் செயலாளர் கபில குணவர்தன, டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹாசீம் உமர் ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

இந்தியாவின் புதுடெல்லியில் அமைந்துள்ள இத்தாலி உயர்ஸ்தானிக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பப்ரிஷோ பல்ஸி, இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன ஆகியோருகிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றபோது,...

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிக பாதுகாப்பு ஆலோசகரான கேர்ணல் டேவிட் அஸ்மன் பதவி காலம் முடிவடைந்து செல்லும் நிலையில் இலங்கை விமானப் படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவை விமானப்படை தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் சந்தித்த போது,..

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான விற்பனை.

மக்கள் வங்கி
பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை
வெலிகம கிளை (077)

காணித்துண்டம்: தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோரளேயில் வெலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் வெலிகம பிரதேச சபை எல்லைக்களினுள் இல. 333 வறக்காபிட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள வறக்காபிட்டியவில் அமைந்துள்ளதும், கமகேவத்த எனவழைக்கப்படும் காணித்துண்டு 5 மற்றும் காணித்துண்டு 4 என்பவற்றை அடுத்தடுத்துள்ள "B" எனும் காணித்துண்டின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எச். கொடிப்பிலி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2021.01.24 ஆந் திகதிய 2/12 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதுமான இல. 4Aஎனும் காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் பாதையுரிமையுடன் சேர்த்து முப்பத்தெட்டு தசம் அறு பேர்ச்சுக்கள் (A-0, R-0, P-38.6) இது மாத்தறை காணிப்பதிவகத்தில் N 115/80 எனும் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் அதே இடத்தில் 2021 டிசம்பர் 28 ஆந்திகதி பி.ப.1.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

ஏலவிற்பனையானது, கொவிட் 19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக -: 2021.11.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.11.16 ஆந் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

ஆதனத்துக்கான அணுகுவழி -: மாத்தறை அக்குரஸ்ஸ வீதியிலிருந்து தெலிஜ்ஜவில் சந்திக்குச் செல்லும்போது, சொல்லப்பட்ட சந்தியிலிருந்து சுமார் 6.3 கிலோமீற்றர் தூரத்தில் வெலிகம வீதியில் வெலிஹிந்த சந்தியை அடைய முடியும். அச்சந்தியின் இடப்பக்கமாகச் செல்லும் வறக்காப்பிட்டிய வீதியில் சொல்லப்பட்ட சந்தியிலிருந்து சுமார் 1.9 கிலோமீற்றர் பயணித்து, தர்மதாச மாவத்தையை நோக்கித் திரும்பி, அங்கிருந்து சுமார் 300 மீற்றர்கள் சென்று, வீதியின் இடப்பக்கமாகத் திரும்பி அங்கிருந்து சுமார் 50 மீற்றர்கள் செல்லும்போது அவ்வீதியில் 12 அடி வீதியொன்று காணப்படும். அந்த வீதியில் சுமார் 25 மீற்றர்கள் சென்றதும் அவ்விடத்தில் உரிய ஆதனத்தை நீங்கள் காண முடியும்.

கொடுப்பனவு செய்யும் முறை - ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியின் 01%
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுநர் கட்டணம் 1000/=
5. விற்பனையின் மொத்தச் செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனையின் சான்றுப்படுத்தலுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல. 215, அநாகரிக தர்மபால மாவத்தை, நுபே, மாத்தறை எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி : 041-2223437 / 0414922605
தொலைநகல் : 0412222601

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற் குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

11/55, போகஹவத்த,
குடாபுத்கமுவ, அங்கொட
தொலைபேசி: 011 2053286
072 3207533,
076 9217329

ஈ.எஸ். ராமநாயக்க,
நீதிமன்ற ஆணையாளரும்
உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
மதிப்பீட்டாளர் மற்றும்
(அகில இலங்கை சமாதான நீதவான்)

கொழும்பு மாநகர சபையால் பூஸ்டர் தடுப்பூசி

தவறாமல் ஏற்றிக்கொள்ள 60க்கு மேற்பட்டோருக்கு அழைப்பு

வடகொழும்பு தினகரன் நிருபர்

கொழும்பு மாநகசபை எல்லைக் குட்பட்ட பிரதேசத்தில் வாழும் அறுபது வயதுக்கும் மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்கும் கொரோனா வைரஸ் மூன்றாம் கட்ட பைசர் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஊசி ஏற்றிக்கொள்ளத் தவற வேண்டாம் என்றும் கொழும்பு மாநகரசபை பொது சுகாதார பிரிவின் பிரதானி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜயமுனி தினகரனுக்குத் தெரிவித்தார்.

முதலிரண்டு கட்ட தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டு மூன்று மாதங்களை கடந்த அறுபது வயதை கடந்தவர்கள் மூன்றாம்கட்ட பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம். கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் கொரோனா முதலாம் கட்ட தடுப்பூசியான அஸ்ட்ரா செனகா தடுப்பூசி 10,9025 பேருக்கும், சைனோபாம் தடுப்பூசி 28,0673 பேருக்கும் ஏற்றப்பட்டுள்ளது.

இரணடாம் கட்ட தடுப்பூசியான அஸ்ட்ரா செனகா தடுப்பூசி 51786 பேரும் சைனோபாம் தடுப்பூசியை 2,23632 பேரும் பெற்றுள்ளனர். தற்போது வழங்கப்பட்டு வரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியை இதுவரை 20237 பேர் கடந்த மாத இறுதிவரை பெற்றுள்ளனர்.

இவ் எண்ணிக்கையில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இராணுவத்தினர் வழங்கிய தடுப்பூசிகளின் எண்ணிக்கை உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேல் மாகாண டிஜிட்டல் தொழில்நுட்ப மேம்பாட்டு தேசிய செயலமர்வு இன்று

மேல் மாகாணத்தில் டிஜிட்டல் தொழில் நுட்பப் பாவனையை மேம்பத்துவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலான ஒரு நாள் தேசிய செயலமர்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று 10 ஆம் திகதி நடைபெறுகின்றது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ஐ.சி.ரி.ஏ), தொழில்நுட்ப அமைச்சு, தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் தொடர்பாடல் சேவை வழங்குனர்கள், கைத்தொழில் பங்காளர்கள் ஆகிய தரப்பினருடன் இணைந்து இச்செயலமர்வை ஒழுங்கு செய்துள்ளது.

நாட்டின் தேசிய டிஜிட்டல் மேம்பாட்டு திட்டமானது சகல மட்டப் பங்காளர்களையும் ஒருங்கிணைத்து மேல் மாகாணத்தில் தொழில்நுட்ப கொத்தணியை உருவாக்குவதற்கான அறிவை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இந்நாட்டை வலுப்படுத்தும் நோக்கை முன்னிலையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இத்தேசிய மேம்பாட்டுத்திட்ட நடவடிக்கைகள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றது. ஐந்து பிராந்தியங்களை உள்ளடக்கும் வகையில் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டுவரும் செயலமர்வுகளில் இவ்வருடத்திற்கான இறுதி செயலமர்வே இன்று மேல் மாகாணத்தில் நடைபெறுகின்றது. மேல் மற்றும் வடமேல் மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும் இச்செயலமர்வின் ஊடாக புதிய இணைப்புக்களை விரிவுபடுத்தல், நடைமுறையிலுள்ள இணைப்புக்களை வலுப்படுத்தல் உட்பட தேசிய டிஜிட்டல் பயணப்பாதை மற்றும் திட்டங்கள் குறித்த கருத்துகளும் முன்வைக்கப்பட உள்ளன.

இச்செயலமர்வில், 'டிஜிட்டல் இலங்கைக்கான நோக்கு, டிஜிட்டல் மேம்பாட்டு செயற்பாட்டுக்கான ஐ.சி.ரி.ஏ நிறுவனத்தின் திட்டங்கள், டிஜிட்டல் பொருளாதாரப் பரிமாற்றம், மேல் மாகாண தொழில்நுட்ப கொத்தணி அபிவிருத்தி செயற்பாட்டின் வகிபாகம், டிஜிட்டல் மேம்பாட்டு நடவடிக்கையின் எதிர்கால பாதை என்ற தலைப்புக்களின் கீழ் கலந்துரையாடல்கள் இடம்பெற உள்ளன.

மின்சார வேலியில் சிக்கி 2 பிள்ளைகளின் தாய் பலி

ஹற்றன் சுழற்சி நிருபர்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை சுரங்கப்பாதைக்கு கீழ் உள்ள சாந்த ஜனபதய எனும் பகுதியில் வீட்டிற்கு பின் புறத்தில் மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி 2 பிள்ளைகளின் தாய்யொருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் ஏ.எம். சந்திரலதா வயது 48 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டார்கள் தங்களது மரக்கறி தோட்டத்தை மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக மின்சார வேலியை சட்டவிரோதமாக பொருத்தியுள்ளனர். இந்த பெண் ஒவ்வொரு நாளும் தோட்டத்திற்கு செல்லும் போது மின்சாரத்தை துண்டித்துவிட்டு செல்வதாகவும் நேற்று அதனை துண்டிக்காது மறந்து சென்றதனால் இச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பிரதேச வாசிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் நீதவானின் மேற்பார்வையின் பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச செய்திகள்

அடுத்த தலைமுறையினருக்கு நியூசிலாந்தில் சிகரெட் தடை

நியூசிலாந்து புகையிலையை முழுமையாக ஒழிக்கும் வகையில் அடுத்த தலைமுறையினருக்கு புகையிலை விற்பதை முழுமையாக தடை செய்யவுள்ளது.

இதன்படி 2008 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிறந்தவர்கள் தமது வாழ்நாளில் சிகரெட் அல்லது புகையிலை உற்பத்திகளை வாங்க முடியாத வகையில் புதிய தடை கொண்டு வரப்படவுள்ளது. இந்த சட்டம் அடுத்த ஆண்டு கொண்டுவரப்படும் என்று எதிர்பார்ப்படுகிறது.

"இளைஞர்கள் புகைப்பழக்கத்தை ஆரம்பிக்காதிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டி உள்ளது" என்று சுகாதார அமைச்சர் டொக்டர் அயேஷா வெரல் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டு நாட்டின் புகைப்பிடிப்போர் எண்ணிக்கையை 5 வீதமாக குறைக்கும் தேசிய இலக்கை நியூசிலாந்து கொண்டிருப்பதோடு, இதன்மூலம் அதனை முழுமையாக இல்லாமல் செய்வதற்கு அது திட்டதிட்டுள்ளது.

தற்போது அந்த நாட்டில் 13 வீதமான பெரியவர்கள் புகைப்பிடிப்பதோடு அது ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இருந்த 18 வீதத்தில் இருந்து வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

புதிய சட்டம் நடப்பிற்கு வந்தால் பூட்டானுக்குப் பின்னர் சிகரெட்டுகளுக்கு தடை விதிக்கும் இரண்டாவது நாடாக நியூசிலாந்து இருக்கும்.

இந்தியாவுக்கு ஏவுகணை வழங்குவதற்கு ரஷ்யா உறுதி

அமெரிக்காவின் இடையூறுக்கு மத்தியில் தரையில் இருந்து வானை தாக்கும் ரஷ்ய தயாரிப்பு எஸ்-400 ஏவுகணை அமைப்புகளை இந்தியாவுக்கு வழங்கும் செயற்பாடுகள் திட்டமிட்டபடி இடம்பெறும் என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்கேய் லவ்ரோ தெரிவித்துள்ளார்.

"எஸ்-400 உடன்படிக்கை அடையாளமாக மாத்திரமன்றி இந்தியாவின் பாதுகாப்பு திறனை உறுதி செய்யும் நடைமுறை ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது" என்று லவ்ரோ தெரிவித்தார். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான பேச்சுவார்த்தையை அடுத்தே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இதுவரை, எல்லாம் திட்டமிட்டபடி இடம்பெறுகிறது. உடன்படிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான ஒத்துழைப்புகளை அமெரிக்கா குறைத்து மதிப்பிட முயற்சிப்பதோடு இந்தியாவுக்கு தமது சொந்த ஆயுதங்களை வாங்குவதை திணிப்பதையும் எம்மால் பார்க்க முடிகிறது" என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பிரிட்டனில் மீண்டும் கொவிட் கட்டுப்பாடு

பிரிட்டன் அரசாங்கம் கொவிட்19 வைரஸ் தொற்றுக் கட்டுப்பாடுகளை அடுத்த வாரத்திலிருந்து மீண்டும் கடுமையாக்கவுள்ளது.

வரும் திங்கட்கிழமையிலிருந்து இயன்றவரை வீட்டிலிருந்து வேலை செய்யும்படி மக்களுக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது. இன்று வெள்ளிக்கிழமை முதல் திரையரங்குகளில் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்படும்.

இரவு விடுதிகள் போன்ற இடங்களுக்குச் செல்வோர், தாங்கள் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக் கொண்டதற்கான சான்றைக் காட்டுவது இனி அவசியம்.

அன்றாட வைரஸ் பரவல் சம்பவங்களின் எண்ணிக்கை 50,000ஐத் தாண்டியதால் புதிய விதிகள் அறிமுகம் செய்யப்படுகின்றன. இதற்கு முன், ஜூலை மாதத்தில் அத்தகைய எண்ணிக்கை பதிவானது.

களஞ்சியங்கள் திருட்டு

எத்தியோப்பியாவில் ஐ.நா உணவு உதவிகள் நிறுத்தம்

உலக உணவுத் திட்டத்தின் களஞ்சியங்களை ஆயுததாரிகள் கொள்ளையடித்ததை அடுத்து வடக்கு எத்தியோப்பியாவின் இரு நகரங்களுக்கான உணவு உதவி விநியோகத்தை அந்த அமைப்பு இடைநிறுத்தியுள்ளது.

கொம்போல்கா மாவட்டத்தில் உள்ள நகரில், டிக்ரயான் கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த கொள்ளைக்காரர்கள் உதவி ஊழியர்களை துப்பாக்கி முனையில் பிடித்து வைத்திருந்ததாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

கொள்ளை இடம்பெற்ற நாட்களில் தமது ஊழியர்கள் தீவிர அச்சுறுத்தலை எதிர்கொண்டதாக உலக உணவுத் திட்டத்தை முன்னெடுக்கும் ஐ.நாவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

'ஆயுதம் ஏந்திய படைகளினால் செய்யப்படும் இவ்வாறான தொந்தரவுகள் ஏற்றுக்கொள்ள முடியாதது. அத்தியாவசிய தேவையின் போது உதவிகளை வழங்கும் ஐக்கிய நாடுகள் மற்றும் எமது மனிதாபிமான கூட்டாளிகளின் திறனை இது மழுங்கடிப்பதாக உள்ளது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் மூன்று மனிதாபிமான டிரக்குகளை கையகப்படுத்தி அரச துருப்புகள் அவைகளை தமது சொந்தத் தேவைக்கு பயன்படுத்துவதாகவும் அந்த பேச்சாளர் குறிப்பிட்டார்.

அவர்கள் பெரும் அளவான அத்தியாவசிய உணவு பொருட்களை திருடிச் சென்றிருப்பதோடு இதில் ஊட்டச்சத்து குறைபாடுடைய சிறுவர்களுக்கான உணவுகளும் அடங்கும்.

டிக்ரயான்கள் மற்றும் அரச படைக்கு இடையில் தற்போது இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போருக்கு மத்தியில் வடக்கு எத்தியோப்பியா பெரும் பட்டினி நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது.

ஒரு ஆண்டுக்கு மேலாக மோதல்கள் இடம்பெறும் நிலையில் ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தேவையாக இருப்பதாக ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

கசோக்கி கொலை: பிரான்ஸில் தவறாக கைதானவர் விடுதலை

ஜமால் கசோக்கியின் கொலையுடன் தொடர்புபட்டு பிரான்ஸில் கைது செய்யப்பட்ட சவூதி அரேபிய நாட்டவர் தவறாக அடையாளம் காணப்பட்டது உறுதி செய்யப்பட்டதை அடுத்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

துருக்கி வெளியிட்ட பிடியாணை அடிப்படையிலேயே 33 வயதான காலித் அலொதைபி என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை பாரிஸ் விமானநிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

துருக்கியின் ஸ்தான்பூலில் உள்ள சவூதி துணைத் தூதரகத்தில் வைத்து 2018 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட சவூதி ஊடகவியலாளரான கசோக்கியின் கொலையுடன் தொடர்புபட்ட சவூதி அரச காவல் படையைச் சேர்ந்தவரின் அதே பெயர் மற்றும் வயதை கொண்டிருப்பதாலேயே அந்த ஆடவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த ஆடவர் சந்தேக நபரின் அதே இடத்தையும் அதே உடல் தோற்றத்தையும் கொண்டிருந்ததாக பிரான்ஸ் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயற்பட்டு வந்த கசோக்கி சவூதி அரசை கடுமையாக விமர்சித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பாக சவூதி நடத்திய வழக்கில் பலருக்கு தண்டனை விதிக்கப்பட்டபோதும் அதனை ஏற்காத துருக்கி 26 சந்தேக நபர்களை தேடி வருகிறது.

உலகின் மொத்த செல்வம்: செல்வந்தர் பங்கு அதிகரிப்பு

உலகின் மொத்த செல்வத்தில் பணக்காரர்களின் பங்கு, கொவிட்–19 காலகட்டத்தில், இதுவரை இல்லாத வேகத்தில் அதிகரித்திருப்பதாக அறிக்கை ஒன்று கூறுகிறது.

1995இல் உலக செல்வத்தில் செல்வந்தர்கள் வகித்த பங்கு ஒரு வீதமாக இருந்தது. அது தற்போது 3 வீதத்திற்கு அதிகரித்திருப்பதாக சமத்துவமின்மை குறித்த உலக அறிக்கை குறிப்பிட்டது.

2020இல் அது மிக வேகமாக உயர்ந்ததாக அறிக்கை தெரிவித்தது.

கொவிட் நோய்த்தொற்றால் உலகம் பாதிக்கப்பட்ட 18 மாதங்களில் ஏற்றத்தாழ்வு பன்மடங்கு அதிகரித்ததாக அறிக்கையை வெளியிட்ட அமைப்பின் இணை பணிப்பாளர் தெரிவித்தார்.

பணக்காரர்களின் செல்வம் சுமார் 4 டிரில்லியன் டொலருக்கு உயர்ந்துள்ளது.

அதே வேளையில், உலகில் உள்ள மேலும் 100 மில்லியன் பேர் மோசமான வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

போர்ப்ஸ் சஞ்சிகை அண்மையில் வெளியிட்ட விபரங்களின் படி, உலகின் 10 மிகப் பெரிய பணக்காரர்கள் ஒவ்வொருவரின் சொத்து மதிப்பும் 100 பில்லியன் டொலருக்கு அதிகமாக இருந்தது.

டெஸ்லா நிறுவனத்தின் நிறுவனர் இலோன் மஸ்க், உலகின் பெரும் பணக்காரராக 265 பில்லியன் டொலர் மதிப்புள்ள சொத்துக்களைக் கொண்டுள்ளார்.

பங்களாதேஷுடனான உறவை வலுப்படுத்த மோடி வலியுறுத்து

இந்திய மற்றும் பங்களாதேஷ் நட்புறவை கொண்டாடும் நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்த பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹசீனாவுடன் தொடர்ந்து இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

"மித்ரா திவாஸ்" என்று அழைக்கப்படும் இரு நாடுகளினதும் உறவுகளைக் கொண்டாடும் தினம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. 1971 இல் புதிதாக உருவாக்கப்பட்ட பங்களாதேஷ் நாட்டை இந்தியா அங்கீகரித்த தினமாக இது உள்ளது.

"இன்று இந்தியா மற்றும் பங்களாதேஷ் மித்ரா திவாஸ் தினத்தை கொண்டாடுகிறது. நட்பின் 50 ஆண்டுகள் நிறைவை நாம் கூட்டாக ஞாபகமூட்டுவதோடு கொண்டாடுகிறோம்" என்று மோடி ட்வீட்டரில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் வரும் டிசம்பர் 16 ஆம் திகதி டாக்காவில் இடம்பெறவுள்ள வெற்றி நாள் கொண்டாடத்தின் பொன் விழாவில் இந்திய ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த பங்கேற்கவுள்ளார்.

பஸ் மீது தீ வைத்து 21 பேர் பலி

நைஜீரியாவின் சொகோடோ மாநிலத்தில் பயணிகள் பஸ் ஒன்றின் மீது ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தி அதன் மீது தீ வைத்த சம்பவத்தில் பெண்கள், சிறுவர்கள் உட்பட குறைந்தது 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உள்ளூர் மக்களால் கொள்ளைக்காரர்கள் என்று அழைக்கப்படும் இந்த ஆயுததாரிகள் சபோன் பிர்னி சிறு நகரில் இருந்து நைகர் உடனான எல்லையில் அமைந்திருக்கும் இசா நகரை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பஸ் மீதே தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடுமையான தீக்காயங்களுடன் மேலும் சிலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் பேச்சாளர் சனுஸி அபூபக்கர் தெரிவித்துள்ளது.

இதில் கொல்லப்பட்ட பலரது உடல் அடையாளம் காண முடியாத அளவு கருகிய நிலையில் காணாப்பட்டதாக மீட்பு பணியில் ஈடுபட்ட ஒருவர் விபரித்துள்ளார்.

பீஜிங் ஒலிம்பிக்: புறக்கணிப்பு நாடுகளுக்கு சீனா கண்டனம்

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியை இராஜதந்திர ரீதியில் புறக்கணிக்க தீர்மானித்திருக்கும் நாடுகளுக்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள போட்டிகளில் தனது அரசாங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று கனடா அண்மையில் தெரிவித்தது. அதுபோன்ற அறிவிப்பை அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஏற்கனவே வெளியிட்டிருந்தன.

அரசாங்கப் பிரதிநிதிகளை அனுப்பாமல் இருப்பது அரசியல் ரீதியாக தனக்கு அவப்பெயர் விளைவிக்கும் நடவடிக்கை என்று லண்டனில் உள்ள சீனத் தூதரகம் சாடியது.

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அரசியல் சூழ்ச்சிக்கான ஒரு கருவி அல்ல என்றும் அது எச்சரித்தது.

அரசாங்கப் பிரதிநிதிகளை அனுப்பாமல் இருப்பதற்குச் சீனாவின் மனித உரிமை மீறல் குற்றங்களே காரணம் என்று கனடா, அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் கூறியுள்ளன.

இந்நிலையில் விளையாட்டுகளுக்குள் அரசியலைப் புகுத்தக்கூடாது என்று ரஷ்யா கண்டித்துள்ளது.

முறுகலுக்குப் பின் சவூதி இளவரசர் கட்டார் வருகை

கட்டார் மீதான பல ஆண்டுகள் நீடித்த முற்றுகை கடந்த ஜனவரியில் அகற்றப்பட்ட பின் சமூதி முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மான் அந்நாட்டுக்கு முதல் முறை விஜயம் மேற்கொண்டுள்ளார்.

வளைகுடா நாடுகளுக்கான பயணத்தின் அங்கமாக கட்டார் சென்ற முடிக்குரிய இளவரசரை, கட்டார் எமீர் ஷெய்க் தமீம் பின் ஹமத் அல்தானி வரவேற்றார். இருவரும் கடந்த புதன்கிழமை இரவு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

கடும்போக்கு இஸ்லாமியவாத குழுக்களுக்கு ஆதரவளிப்பதாகக் குற்றம்சாட்டி, 2017 ஜூனில் கட்டாருடனான அனைத்து உறவுகளையும் சவூதியுடன் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் துண்டித்தன.

எனினும் பாலைவன நகரான அல் உலாவில் இடம்பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு ஒன்றை எடுத்து கடந்த ஜனவரியில் இராஜதந்திர உறவுகள் மீண்டும் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டன.

பிராந்திய பூசல்களை தீர்ப்பது, குறிப்பாக ஈரான் மற்றும் துருக்கியுடனான பதற்ற நிலையை தணிக்கும் முயற்சிகள் இடம்பெறும் சூழலிலேயே இந்த விஜயம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹொங்கொங் ஜனநாயக ஆர்வலர் மூவர் குற்றவாளிகளாகத் தீர்ப்பு

ஹொங்கொங் ஊடகப் பிரமுகர் ஜிம்மி லாய் உள்ளிட்ட ஜனநாயக ஆதரவாளர்கள் மூவர் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மீது சட்டவிரோத ஒன்று கூடல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. தியனான்மென் சதுக்கத்தில் நடந்த சம்பவத்தை நினைவுகூரச் சென்ற ஆண்டு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது தொடர்பில் அவர் மீது குற்றங்கள் பதிவாயின.

லாய், மனித உரிமை வழக்கறிஞர் சாவ் ஹாங் துங், ஆர்வலர் குவென் னத் ஹோ ஆகியோர் தங்களுக்கு

எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்தனர். அதனால் அவர்களின் தீர்ப்பு இறுதியாக வழங்கப்பட்டது. அவர்களையும் சேர்த்து, ஹொங்கொங்கின் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே பலர் சிறையில் உள்ளனர்.

திசர, அவிஷ்கவின் அதிரடியால் ஜப்னா கிங்ஸ் திரில் வெற்றி

விறுவிறுப்பாக நிறைவடைந்த லங்கா பிரீமியர் லீக் 2021 ரி 20 தொடரின் 07ஆவது போட்டியில் கண்டி வொரியர்ஸ் அணிக்கு எதிராக, ஜப்னா கிங்ஸ் டக்வெத் லூயிஸ் முறையில் 14 ஓட்டங்களால் வெற்றியினைப் பதிவு செய்திருக்கின்றது.

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருந்த இந்தப்போட்டி கடின மழையின் குறுக்கீடு காரணமாக அணிக்கு 14 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கண்டி வொரியர்ஸ் அணியின் தலைவர் அஞ்செலோ பெரேரா முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை, ஜப்னா கிங்ஸ் அணிக்கு வழங்கியிருந்தார்.

அதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய ஜப்னா கிங்ஸ் அணி அதன் முதல் இரண்டு விக்கெட்டுக்களையும், குறுகிய ஓட்ட இடைவேளை ஒன்றில் பறிகொடுத்த போதும், அதன் மூன்றாம் விக்கெட்டுக்காக அதிரடி இணைப்பாட்டம் ஒன்றினை அவிஷ்க பெர்னாண்டோ – திசர பெரேரா ஜோடி வழங்கியது.

அந்தவகையில் மூன்றாம் விக்கெட்டுக்காக அவிஷ்க பெர்னாண்டோ – திசர பெரேரா ஜோடி மிகவும் சிறப்பான முறையில் 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்தது. இந்த இணைப்பாட்டத்தினுள் மிகவும் அபாரமாக செயற்பட்டிருந்த அவிஷ்க பெர்னாண்டோ திலகரட்ன சம்பத் வீசிய ஓவரில் தொடர்ச்சியாக 5 சிக்ஸர்களை விளாசியிருந்ததோடு, வெறும் 23 பந்துகளில் 7 சிக்ஸர்கள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அவிஷ்க போன்று மறுமுனையில் அதிரடி அரைச்சதம் விளாசிய திசர பெரேராவும் 21 பந்துகளில் 6 சிக்ஸர்கள் மற்றும் 2 பௌண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தவிர சத்துரங்க டி சில்வாவின் இறுதிநேர அதிரடியுடன் ஜப்னா கிங்ஸ் அணி 14 ஓவர்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஜப்னா கிங்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் சத்துரங்க டி சில்வா 10 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் ஒரு பௌண்டரி அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

கண்டி வொரியர்ஸ் அணியின் பந்துவீச்சு சார்பில் சிராஸ் அஹ்மட் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைச் சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக டக்வெத் லூயிஸ் முறையில் நிர்ணயம் செய்யப்பட்ட 181 ஓட்டங்களை 14 ஓவர்களில் அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய கண்டி வொரியர்ஸ் அணிக்கு ஆரம்ப வீரர்களாக களம் வந்த சரித் அசலன்க மற்றும் கென்னர் லூயிஸ் ஆகியோர் சிறந்த ஆரம்பத்தினை வழங்கியிருந்தனர்.

இதில் கண்டி வொரியர்ஸ் அணியின் முதல் விக்கெட்டாக மாறிய சரித் அசலன்க வெறும் 19 பந்துகளுக்கு 5 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 42 ஓட்டங்கள் குவித்திருந்தார்.

இதனையடுத்து களம் வந்த ரொவ்மன் பவல் கென்மார் லூயிஸ் உடன் இணைந்து ஜப்னா கிங்ஸ் பந்துவீச்சாளர்களை சிதைக்கத் தொடங்கினார். அனைத்து திசைகளிலும் சிக்ஸர் மழை பொழிந்த ரொவ்மன் பவல் வெறும் 15 பந்துகளில் அரைச்சதம் தாண்டி, எல்பிஎல் வரலாற்றில் பதியப்பட்ட

இரண்டாவது அதிவேக அரைச்சதத்தினைப் பதிவு செய்ததோடு கண்டி வொரியர்ஸ் அணியினையும் வெற்றிக்காக தொடர்ந்து முன்னேற்றியிருந்தார்.

எனினும் இந்த சந்தர்ப்பத்தில் சுரங்க லக்மாலின் துல்லியமான பந்துவீச்சு காரணமாக ரொவ்மன் பவலின் விக்கெட் பறிபோனது. கண்டி வொரியர்ஸ் அணியின் இரண்டாவது விக்கெட்டான ரொவ்மன் பவல் 19 பந்துகளில் 7 சிக்ஸர்கள் மற்றும் 2 பௌண்டரிகள் அடங்கலாக 61 ஓட்டங்கள் குவித்தார்.

ரொவ்மன் பவலின் விக்கெட்டினை அடுத்து கண்டி வொரியர்ஸ் அணியின் துடுப்பாட்ட இன்னிங்ஸ் சற்று மந்தமாகிய நிலையில், கண்டி வொரியர்ஸ் அணி 14 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து போட்டியில் தோல்வியினைத் தழுவியது.

கண்டி வொரியர்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் கென்னர் லூயிஸ் 36 பந்துகளுக்கு 2 சிக்ஸர்கள் மற்றும் 3 பௌண்டரிகள் அடங்கலாக 41 ஓட்டங்கள் பெற்றிருக்க, ஜப்னா கிங்ஸ் அணியின் பந்துவீச்சில் ஜெய்டன் சீல்ஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியும், சுரங்க லக்மால் மற்றும் சத்துரங்க டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றியும் தமது தரப்பின் வெற்றியினை உறுதி செய்தனர்.

போட்டியின் ஆட்டநாயகன் விருது சுரங்க லக்மாலிற்கு வழங்கப்பட்டது.

இப்போட்டியின் வெற்றியுடன் எல்பிஎல் தொடரில் ஜப்னா கிங்ஸ் அணி தமது இரண்டாவது வெற்றியினைப் பதிவு செய்ய, கண்டி வொரியர்ஸ் அணிக்கு இது தொடரில் மூன்றாவது தொடர் தோல்வியாக அமைகின்றது.

43rd OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2021
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

43வது ஒப்சவர் SLT–மொபிடெல்

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2021

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2021
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2021
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : .....
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : .....
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : .....
வாக்களித்தவர் பெயர் : .....
முகவரி : .....
மொபைல் இல. : .....

Sunday Observer

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

43வது ஒப்சவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT-மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 11-12-2021 இல. 10

ஆஷஸ் டெஸ்ட்டில் பட் கம்மின்ஸ் வரலாற்று சாதனை

ஆஷஸ் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் வீழ்த்திய 2ஆவது அவுஸ்திரேலிய தலைவர் என்ற சாதனையை பட் கம்மின்ஸ் நிகழ்த்தினார்.

வரலாற்று சிறப்புமிக்க பழமை வாய்ந்த ஆஷஸ் கிரிக்கெட்டின் 2021/22 தொடர் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் உள்ள புகழ் பெற்ற காபா கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகியது,

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி, முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்ப வீரர் ரோரி பர்ன்ஸின் விக்கெட்டை முதல் பந்திலேயே அவுஸ்திரேலியாவின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் வீழ்த்தினார்.

இதன்மூலம் 85 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஷஸ் தொடரின் முதல் போட்டியில் முதல் பந்திலேயே விக்கெட் எடுத்த பந்துவீச்சாளர் என்ற பெருமையை ஸ்டார்க் பெற்றுக்கொண்டார்.

முன்னதாக 1936ஆம் ஆண்டு பிரிஸ்பேனில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் மெக்ரோமிக், இங்கிலாந்து வீரர் வொர்த்திக்டெனை முதல் பந்தில் ஆட்டமிழக்கச் செய்தார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய டாவிட் மலான் 6 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் ஜோ ரூட் ஓட்டமின்றியும் வெளியேறி ஏமாற்றத்தை கொடுத்தனர். அடுத்ததாக நீண்ட நாட்களுக்குப்பின் கிரிக்கெட்டில் களமிறங்கிய நட்சத்திர வீரர் பென் ஸ்டோக்ஸ் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து மீண்டும் அதிர்ச்சி கொடுத்தார்.

இதனால் ஏற்பட்ட சரிவில் இருந்து மீட்க போராடிய ஹசீப் ஹமீத் (25), ஒல்லி போப் (35), ஜோஸ் பட்லர் (39) ஓரளவு நம்பிக்கை கொடுத்து ஓட்டங்களை எடுத்து போராடிய போதிலும் அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இங்கிலாந்து அணி 147 ஓட்டங்களுக்கு சுருண்டது.

அவுஸ்திரேலியா சார்பில் பந்துவீச்சில் அதிரடி காட்டிய பட் கம்மின்ஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். மறுபுறம் அபாரமாக பந்துவீசிய மிட்செல் ஸ்டார்க் மற்றும் ஜோஸ் ஹேசில்வுட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீதம் வீழ்த்தியிருந்தனர்.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் தலைவராக முதன் முறையாக களமிறங்கிய வேகப் பந்துவீச்சாளர் பட் கம்மின்ஸ் 38 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்,

இதன்மூலம் ஆஷஸ் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் வீழ்த்திய 2ஆவது அவுஸ்திரேலிய தலைவர் என்ற சாதனையை முன்னாள் தலைவர் ரிச்சி பெனாட்டுக்கு பிறகு சுமார் 60 ஆண்டுகளுக்குப் பிறகு இவர் படைத்தார்.

கடைசியாக கடந்த 1962 ஆம் ஆண்டு முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிச்சி பெனாட் ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

அத்துடன் ஒட்டுமொத்த ஆஷஸ் கிரிக்கெட்டில் கடந்த 1982க்கு பின் கிட்டதட்ட 40 ஆண்டுகள் கழித்து ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை எடுத்த முதல் தலைவர் என்ற பெருமையையும் பட் கமின்ஸ் பெற்றார். கடைசியாக கடந்த 1982ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஷஸ் தொடரின் போது இங்கிலாந்து அணித்தலைவர் பொப் வில்ஸ் ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை எடுத்திருந்தார்.

மேற்கிந்திய தீவுகளின் கோர்ட்னி வால்ஷ், இந்தியாவின் அனில் கும்ப்ளே, நியூசிலாந்தின் டேனியல் விட்டோரி உள்ளிட்ட நட்சத்திர வீரர்களின் வரிசையில் அணித்தலைவராக முதல் போட்டியிலேயே 5 விக்கெட்டுகளை எடுத்த வீரராகவும் அவர் இடம்பிடித்தார்.

2019இல் பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அணித்தலைவராக அறிமுகமான ரஷித் கான், 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பிக்க முன் காபா மைதானத்தில் தொடர்ந்து கன மழை பெய்ததன் காரணமாக முதல் நாள் ஆட்டம் பாதியிலேயே ரத்து செய்யப்பட்டது,

மேர்க்கன்டைல் 'ஈ' குழு கிரிக்கெட் போட்டிக்கு 19வது தடவையாக அனுசரணை வழங்கும் டேவில் பீரிஸ் குழுமம்

இலங்கையில் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்கான தனது பங்களிப்பை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் வர்த்தக சேவை கிரிக்கெட் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் 'மேர்க்கன்டைல் 'ஈ' குழு கிரிக்கெட் போட்டிக்கு 19வது தடவையாகவும் அனுசரணை வழங்குவதாக டேவிட் பீரிஸ் குழுமம் அண்மையில் அறிவித்தது. வர்த்தக நிறுவனங்களுக்கு இடையிலான கிரிகெட் சங்கத்தின் வரலாற்றில் இரண்டாவது பழமையான அனுசரணையாளராக இதனை அறிமுகப்படுத்த முடியும்.

உதியோகபூர்வமாக அனுசரணையைக் கையளிக்கும் நிகழ்வு 2021 டிசம்பர் 08ஆம் திகதி வர்த்தக கிரிக்கெட் சம்மேளனத்தில் நடைபெற்றது. இதில் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் நிறவனத்தின் பணிப்பாளரும், பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான திரு.நாளக மடுகல்ல, பணிப்பாளர் திருமதி.ரொமனி பராக்கிரம, டேவிட் பீரிஸ் குழுமத்தின் பிரதம சந்தைப்படுத்தல் தொடர்பாடல் அதிகாரி செல்வி நாதி.டி.தர்மசிறி, அசெட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் நிறுவனத்தின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி திரு.அஜந்த பிரேமசிறி, வர்த்தக கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைவர் திரு.நளின் விக்ரமசிங்ஹ, வர்த்தக கிரிக்கெட் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினரும், போட்டிக் குழுவின் செயலாளருமான திரு.லக்மல்.டி.சில்வா, ஊடக மற்றும் பிரமுகர்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

டேவிட் பீரிஸ் குழுமம் எப்பொழுதும் விளையாட்டுத்துறைக்கு வலுவான ஆதரவாளராக விளங்குவதுடன், தனது பணியாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் விளையாட்டுத் துறையில் பங்குபற்றுவதை தொடர்ந்தும் ஊக்குவித்து வருகிறது. திறன்களுக்கான மதிப்பு மற்றும் விளையாட்டின் பெறுமதி குறிப்பாக அணியாக முன்னெடுக்கப்படும் விளையாட்டுக்கள் எமது பணியாளர்களிடையே ஆழமாகப் பதிந்துள்ளது. போட்டி தொடர்பான உணர்திறன், முக்கியமாக குழுவான செயற்பாடு, தனிப்பட்ட திறன் என்பன கூட்டான வெற்றிக்கு வழியேற்படுத்தும். சொந்தமாகச் சிந்திப்பதற்கான திறன், திட்டம் மற்றும் தந்திரோபாயமான விளையாட்டு, தலைவரின் திட்டத்தின் கீழ் செயற்படுதல், தேவையான திறனை வெளிக்காட்டுதல் போன்றவே இன்று பெருநிறுவனத் துறையின் வெற்றிக்கு அவசியமாகின்றன.

வர்த்தக கிரிக்கெட் சம்மேளனம் மற்றும் அதன் லீக் சுற்றுப்போட்டி விளையாட்டுத் துறைக்கு சிறந்த மதிப்பை ஏற்படுத்துகிறது. பாடசாலையிலிருந்து விலகி கோப்ரேட் உலகத்துக்குள் நுழைந்த பின்னரும் விளையாட்டுக்களை விரும்பும் ஆண்களுக்கு இது சிறந்ததொரு தளமாகவும் வாய்ப்பாகவும் அமைகிறது. பணியாளர்கள் என்ற எண்ணத்தை கைவிட்டு விளையாட்டு வீரர்கள் என இணைவதற்கான வாய்ப்பையும் அது வழங்குகிறது.

தற்பொழுது டேவிட் பீரிஸ் குழுமத்தின் அணிகள் வர்த்தக நிறுவனங்களுக்கிடையிலான கிரிக்கெட், தடகளப்போட்டி, கரப்பந்தாட்டம், ஹொக்கி, பேஸ்போல், கூடைப்பந்து மற்றும் பட்மின்டன் போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றி வருகின்றன. டேவிட் பீரிஸ் குரூப் ஏ அணி கடந்த ஆண்டு மெர்கன்டைல் 'டி' பிரிவில் அரை இறுதி ஆட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன், பி அணி 'எஃப்' குழுவில் விளையாடுகிறது.

நான்கு தசாப்தங்களின் பெருமைமிக்க வரலாற்றைக் கொண்ட டேவிட் பீரிஸ் குழுமம் இன்று இந்நாட்டின் மிகப் பெரிய மற்றும் நிதி ரீதியாக பலம் வாய்ந்த கூட்டு நிறுவனமாக வளர்ந்துள்ளதுடன், இந்நாட்டு மக்களுக்கு 4 மில்லியனுக்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை வழங்குகிறது.

டேவிட் பீரிஸ் குழுமம் வாகன விற்பனை மற்றும் சேவைகள், நிதிச் சேவைகள், சரக்குப் போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், ரியல் எஸ்டேட், பந்தயம், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் இயற்கை விவசாயம் ஆகிய துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 18 நிறுவனங்களைக் கொண்ட பாரிய பெரு நிறுவனமான விளங்குகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.